23 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059

E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com

416-282-4978

RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்



Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs



Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca
Tel.:416.315.9397 / www.mahendran.ca

நதி 23 | பாலம் 03 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 01, 2013

# ஒன்றாறியோவின் முதல் பெண் முதல்வர்

லிபரல் கட்சித்தலைவர் பதவியையும், ஒன்றாறியோவின் பிரதமர் பதவியையும் டால்ரன் மக்கன்ரி கடந்த ஒக்ரோபர் 15, 2012 இல் துறந்தார். இதைத் தொடர்ந்து ஒன்றாறியோ லிபரல் கட்சியின் புதிய தலைவர் தெரிவுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றன. புதிய ஒன்றாறியோ லிபரல் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்படுபவர் அடுத்த ஒன்றாறியோ மாகாணத்தேர்தல் நடைபெறும்வரை ஒன்றாறியோ மாகாணத்தின் தற்போதைய 40 ஆவது நாடாளுமன்றத்தில் முதல்வராக பதவி வகிப்பார்.



ஆறு பேர் ஒன்றாறியோ லிபரல் கட்சி தலைவர் பதவிக்கு போட்டியிட்டு Sandra Pupatello உம் Kathleen Wynne உம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவ்விரு பெண்களுக்கும் இடையே நடைபெற்ற இறுதி (3ஆவது) வாக்கெடுப்பின் போது 1150 வாக்குகளை பெற்று Kathleen ஒன்றாறியோ லிபரல் கட்சியின் தலைவராக ஜனவரி 26, 2013 இல் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு எதிராக போட்டியிட்ட Sandra இற்கு 866 வாக்குகள் கிடைத்தன.

ஒன்றாறியோ லிபரல் கட்சியின் தலைவராக Kathleen தெரிவு செய்யப்பட்டதால் அவர் ஒன்றாறியோவின் 25 ஆவது முதல்வராகவும் முதலாவது பெண் முதல்வராகவும் பதவியேற்க உள்ளார். இவரது வெற்றியை தொடர்ந்து கனேடிய பிரதமர் ஸ்ரீபன் காப்பரும் ரொரன்றோ நகர முதல்வர் றொப் போர்ட் உம் தமது வாழ்த்துக்களை Kathleen இற்கு தெரிவித்துள்ளனர்.

12 பில்லியன் டொலரை கடனாகவும், ஒன்றாறியோ மாகாண ஆசிரியர் சங்கங்களுடன் முறுகல் நிலையிலும் உள்ள ஒன்றாறியோ மாகாண அராசாங்கத்தின் முதல்வராக பதவியேற்க உள்ள Kathleen இற்கு நாடாளுமன்றத்தில் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.

றிச்மண்ட்கில், ஒன்றாறியோவில் Kathleen Wynne மே 21, 1953 இல் பிறந்தார். இவர் Queen's பல்கலைக்கழகத்தின் B.A. பட்டதாரியும் Toronto பல்கலைக்கழகத்தின் M.A. பட்டதாரியும் ஆவர். இவரது முதலாவது திருமணத்தின் மூலம் இவருக்கும் Phil Cowperthwaite இற்கும் Chris, Jessie மற்றும் Maggie என மூன்று பிள்ளைகள் உள்ளனர். பின்னர் 1990 இல் Phil ஐ விவாகரத்து செய்துவிட்டு தான் ஒரு ஓரினச் சேர்க்கையாளர் என பகிரங்கமாக தெரிவித்து விட்டு தற்போது Jane Rounthwaite உடன் ரொரன்றோவில் வாழ்ந்து வருகின்றார். Kathleen இற்கு Olivia மற்றும் Claire என இரண்டு பேரப்பிள்ளைகள் இருக்கின்றனர்.

Kathleen மாகாண அரசியலுக்கு வர முன்னர் பொதுப்பாடசாலைகளின் Trustee ஆக இருந்தவர். ஒக்ரோபர் 2003 இல் முதல் முறையாக ஒன்றாறியோ நாடாளுமன்ற உறுப்பினராக 'டொன்வலி மேற்கு' தொகுதியில் தெரிவு செய்யப்பட்டார். ஒக்ரோபர் 2011இல் நடைபெற்ற தேர்தலிலும் மூன்றாவது முறையாக ஒன்றாறியோ நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். Kathleen 2006 ஆம் ஆண்டில் இருந்து கல்வி அமைச்சராகவும், போக்குவரத்து அமைச்சராகவும் பதவி வகித்து பின்னர் வீடமைப்பு மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சராகவும் கனடாவின் பூர்வீக குடிகளுக்கான அமைச்சராகவும் பதவி வகித்தவர்.

Kathleen ஒன்றாறியோ லிபரல் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதன் மூலம் ஒன்றாறியோ மாகாணத்தின் முதல் பெண் முதல்வராகவும், முதலாவது ஒன்றாறியோவின் பகிரங்கமாக தெரிவித்த ஓரினச் சேர்க்கையாளரான முதல்வராகவும் பதவியேற்க உள்ளார்.

Kathleen ஒன்றாறியோவின் ஆளும் லிபரல் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதனால் கனடாவின் 10 மாகாணங்களில் ஐந்து மாகாணங்களின் முதல்வராக பெண்கள் தற்போது இருக்கிறனர். இவற்றுள் நாலு மாகாணங்கள் கனடாவின் மிகப்பெரிய மாகாணங்கள் ஆகும். இவற்றைவிட மூன்று பிராந்தியங்களில் ஒரு பிராந்தியத்தின் (Nunavut) தலைவரும் பெண் ஆவார்.


Alison Redford - அல்பேட்டா முதல்வர்.
Pauline Marois - குவிபெக் முதல்வர்.
Kathy Dunderdale - நீயூ பவுண்லாண்ட் முதல்வர்
Christy Clark - பிரிட்டிஸ் கொலம்பியா முதல்வர்
Kathleen Wynne - ஒன்றாறியோ முதல்வர்.
Eva Aariak - நூணாவிக் பிரதேச தலைவர்.

கனடாவின் மிகவும் பணக்கார மாகாணமான அல்பேட்டா, சனத்தொகையில் அதிகூடிய மாகாணமான ஒன்றாறியோ போன்ற

தொடர்ச்சி 02ஆம் பக்கம்




MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099




Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker



Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA






KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி<
10 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை




மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE



அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022







# ஒன்ராறியோவின்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மாகாணங்களில் முதல்வர்களாக பெண்கள் இருப்பதால், இப்போது கனடாவின் சனத்தொகையில் 88% மானவர்கள்



வசிப்பதும், கனடாவின் பொருளாதாரத்தில் 90% ஐ வைத்திருப்பதுமான மாகாணங்களின் முதல்வர்களாக பெண்கள் இருப்பது கனேடிய சரித்திரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வு ஆகும்.

கனடா முழுவதுக்குமான பெண்களின் வாக்குரிமை கிடைத்த 1940 ஆம் ஆண்டில் இருந்து 1991 ஆம் ஆண்டு வரை ஒரு பெண் முதல்வரோ அல்லது பெண் பிரதமரோ தெரிவு செய்யப்படவில்லை. 1991 இல் வடமேற்கு பிராந்தியத்தின் தலைவராக முதலில் Nellie Cournoyea உம் பின்னர் 1993 இல் பிரின்ஸ் எட்வோர்ட் தீவின் முதல்வராக Catherine Callbeck உம் தெரிவு செய்யப்பட்டனர். கனடாவில் பிரதமர் பதவிக்கு இதுவரை பெண் பிரதமர் தெரிவு செய்யப்படவில்லை. 1993 இல் 132 நாட்களுக்கு மட்டும் பெண் பிரதமராக Kim Cambell அவரது கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டதால் பதவி வகித்தார்.

இலங்கையில் 1931 இல் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. 1960 இலேயே உலகின் முதல் பெண்பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மீது விசாரணை வேண்டும் - அமெரிக்க செனற்றர்கள்

இரண்டு அமெரிக்க செனற்றர்கள் (மேற்சபை உறுப்பினர்கள்) இலங்கை மீது போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ள வேண்டும் என ஜனவரி 29, 2013 இல் தெரிவித்துள்ளார்கள்.

செனற்றர்கள் Patrick Leahy உம் Bob Casey உம் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் கட்சியான ஜனநாயகக் கட்சியை சேர்ந்தவர்கள். இவர்கள் இருவருமே ஊடகவியலாளர்களுக்கு ஜனவரி 29, 2013 இல் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கை அரசு தனது LLRC அறிக்கையில் தெரிவித்த பரிந்துரைகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றனர். இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் மதிக்கப்படுவது மிகவும் மிகவும் தரக்குறைவான நிலைக்கு சென்றுவிட்டது என அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு கடிதம் மூலம் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இருவரும் இலங்கையில் பிரதம நீதியரசருக்கு எதிராக மகிந்த இராஜபக்ச அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தமது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தனர். இலங்கை அரசு LLRC அறிக்கையில் தெரிவித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவில்லை என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது. ஒரு சுயாதீனமான விசாரணை மட்டுமே உண்மையில் நடைபெற்றவற்றை வெளிக் கொணர்ந்து அதில் குற்றம் செய்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகள் எடுக்க உதவும் என்றனர்.



பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E.,*
*#201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலை-நகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: www.vlambaram.com www.tamilvanakkam.com*

Dr. Bhaminy Mohendran
Dentist

1200 Markham Rd, #119
(Markham & Ellesmere)
416 289 7187
7595 Markham Rd, #4
(Markham & 14th Ave.)
905 201 8900
Opened 7 days a week

## வாசகர் எண்ணம்

சிந்தனைப்பூவினனது சிதறல்கள் சிக்கியதே
தீசனின் பொங்கலோ தித்திப்பாய்ச் சீரணிக்க
யாரிந்த தமிழரென யாசித்தார் ஸாலினியும்
சீலமுயர் எந்திரியாம் செம்புலவர் சுரேசுதரும்
நாளும் செழித்திடவே நல்வாழ்த்து
விளம்பரமே உன்வரவு மேதினியின்
நல்வரவே.

- புலவர் மயில்வாகனன்.

# கனடா ஒரு கண்ணோட்டம்

**கடந்த இதழ் தொடர்ச்சி**

## கனடாவின் அரசியல் யாப்பு

கனடியர்களாகிய எங்களை நாங்களே ஆள்வதற்குப் பயன்படுத்தும் சட்டங்கள், வழமைகள் என்பவற்றின் தொகுதியே கனடாவின் அரசியல் யாப்பு. அரசியல் யாப்பில் செய்யப்படும் மாற்றங்களுக்கு



பிரித்தானிய நாடாளுமன்றத்தின் இசைவைப் பெற வேண்டிய தேவை 1982 வரை இருந்தது. எமது அரசியல் யாப்பை மாற்றும் அதிகாரத்தை 1982ம் ஆண்டின் அரசியல் யாப்புச் சட்டம் கனடிய நாடாளுமன்றத்துக்கு வழங்கியது.

## அரசி

மாட்சிமை தங்கிய இரண்டாவது எலிசபெத் அவர்களே கனடாவின் அரசியும் அரசுத் தலைவரும் ஆவார். அதாவது அரசியே கனடாவின் அரசுத் தலைவர்.

கனடாவில் அரசியின் பிரதிநிதியாக விளங்கு பவர் ஆளுநர்-அதிபதி ஆவார். மாகாணங் களில் அரசியின் பிரதிநிதிகளாக விளங்குவோர் உப ஆளுநர் ஆவர்.

## கனடா நாள்

ஒவ்வோராண்டும் யூலை 1ம் திகதி கனடா நாளை நாம் கொண்டாடுகிறோம். அது கனடா ஒருங்கிணைந்த நாளின் ஆண்டு நிறைவைக் குறிக்கும்

## கனடா என்னும் பெயரின் தோற்றுவாய் என்ன?

1535ல் முதற்குடி இளைஞர்கள் இருவர் ஜேக்கெஸ் காடியர் (Jacques Cartier) அவர்களுக்கு ஸ்தடகோனா (Stadacona) என்னும் இடத்துக்கு (இன்றைய குவிபெக் மாநகரம் அமைந்திருக்கும் இடத்துக்கு) செல்லும் வழியை சொல்வதற்காக 'கிராமம்' அல்லது 'குடியேற்றம்' என்று




பொருள்படும் 'கனதா' (kanata) என்னும் ஹியூறன்-இரோகுவோ மொழிச் சொல்லைப் பயன்படுத்தினார்கள். ஸ்தடகோனாவை மாத்திரமன்றி அந்த இடத்தின் மூப்பரா கிய தோனாகோனாவுக்கு (Donnacona) கீழ்ப்பட்ட புலம் முழுவதையும் குறிப்பதற்கு 'Canada' என்னும் சொல்லை காடியர் பயன்படுத்தினார்.

காடியரின் இரண்டாவது பயணத்தின் பொழுது கண்டுபிடிக்கப்பட்ட இடங்களைக் காட்டும் வண்ணம் 1547ல் வெளிவந்த முதலாவது உலகப்படம் செ.லோறன்ஸ் வளை குடாவுக்கும் ஆற்றுக்கும் வடக்கே உள்ள புலத்தை 'கனடா' என்னும் பெயர் கொண்டு சுட்டிக்காட்டியது. 1791ல் அரசியல் யாப்புச் சட்டத்தின் (அல்லது கனடா சட்டத்தின்) மூலம், அன்று கணிசமானளவு பரந்திருந்த குவிபெக் புலம், கனடா மேற்புலம், கனடா கீழ்ப்புலம் என்னும் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட பொழுதே 'கனடா' என்னும் பெயர் முதன் முதலில் அதிகார பூர்வமான முறையில் பயன்படுத்தப்பட்டது. 1841ல் அவை கனடா மாகாணமாக இணைக்கப்பட்டன. பல மாகாணங்களும் ஒருங்கிணைந்த புதிய நாடு கனடா என்று பெயர் சூடியது.

தொடரும்...

*- மணி வேலுப்பிள்ளை*

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL


# ஆரோக்கிய வாழ்விற்கு அன்றாடம் வேம்பு

உங்களுக்குத் தெரியுமா? நம் அனைவருக்குள்ளும் எப்போதும் கான்ஸர் செல்கள் இருக்கின்றன... ஆனால், குறைந்த அளவில். அது எப்போது ஒரு அளவு தாண்டிச் செல்கிறதோ, அப்போது நோயாக அறியப்படுகிறது. வேம்புக்கு கான்ஸர் செல்களையே அழிக்கும் சக்தி இருக்கிறது.


ஈஷா யோகா மையத்தில் தினமும் அதிகாலையில் ஒரு சிறிய கோலிக்குண்டு அளவு வேப்பிலையும் அதே அளவு மஞ்சள் உருண்டையும் வெதுவெதுப்பான நீருடன் வெறும் வயிற்றில் யோகப் பயிற்சிக்கு முன் உட்கொள்ளப்படுகிறது.

இது நாள் முழுக்க அளவான உஷ்ணத்தையும் துடிப்பையும் உடலில் தக்கவைத்திருக்க உதவுகிறது. இது நம் உடலைச் சுத்தம் செய்கிறது. உணவுப் பாதை முழுக்க சிறிய அளவிலான தொற்று நீக்கியாகச் செயல்பட்டு சுத்தம் செய்கிறது.

பச்சை நிறத்தில் வாடாத நிலையில் உள்ள வேப்பிலை போதும். மையாக அரைத்து, மஞ்சள் பொடியும் நீரும் கலந்த உருண்டையுடன் விழுங்கி விட வேண்டியதுதான். கசப்பு விரும்பாதோர், அதன் மீது தேன் தடவி விழுங்கலாம். அடுத்த ஒரு மணி நேரத்திற்கு எந்த உணவும் உட்கொள்ளக் கூடாது. இதை யோகாசனப் பயிற்சிக்கு முன் எடுத்துக்கொள்வது சிறந்தது.

வேம்பு அதிகமாக எடுத்துக்கொள்வதால் எந்தக் கெடுதலும் கிடையாது. தோல் நோய், சர்க்கரை நோய், ஆஸ்துமா உள்ளவர்கள் தினமும் இதனை அதிக அளவில் எடுத்துக்கொள்வது நல்ல பலனை அளிக்கும். ஆஸ்துமா உள்ளவர்களுக்கு அவர்களுக்குத் தேவையான உஷ்ணத்தையும் வேம்பு கொடுக்கிறது.

எந்த வகையான அலர்ஜி



சத்குரு வாசுதேவ்

தோல் அலர்ஜி மட்டுமல்லாமல், எல்லா வகையான அலர்ஜிக்கும் இது பயனளிக்கும்.

வேம்பின் கசப்புடன் ஒரு நாளைத் துவங்குவது வாழ்வு முழுக்க இனிமை நிரம்ப நல்ல வழி. வேம்பின் மீது இன்று ஏராளமான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு, வேம்பு ஒரு அதிசயமான மரம் என்றே சொல்லப்படுகிறது. வேறு எந்தத் தாவரத்துக்கும் நமக்குக் கொடுக்க இத்தனை நன்மை இல்லை.

நம் முன்னோர்கள் வேப்பிலையையும் மஞ்சளையும் தெய்வீகமாகக் கருதியதற்கும் அம்மனின் வெளிப்பாடாக இதைப் போற்றியதற்கும் ஆங்காங்கே வேப்ப மரத்தைக் கோயிலாகக் கும்பிட்டதற்கும் காரணம் – இதன் அற்புதமான மருத்துவக் காரணங்களினால்தான்!

### ஆன்மீக அமுதம்

என் வேலை மக்களுக்கு ஆறுதல் அளிப்பதல்ல! மக்களை அவர்களின் உச்சபட்சத் தன்மைக்கு அழைத்துச் செல்வதே என் பணி. ஆன்மீக விஞ்ஞானத்தின் முழு நோக்கமே ஒருவரை உடல் அளவில், மன அளவில், உணர்ச்சி அளவில் என எல்லாநிலைகளிலும் முழுமையாக வாழ வைப்பது தான். அப்போது தான் ஒருவர் முழு மனிதராக மாறுகிறார். வாழ்க்கையை முழு பரிமாணத்தில் உணர்கிறார். மக்கள் ஆறுதல் பற்றியும், போதும் என்ற மனநிலை பற்றியும், பற்றற்ற தன்மை பற்றியும் தொடர்ந்து பேசி வருகின்றனர். ஆனால் ஈடுபாடு இல்லாமல் வாழ்க்கையை முழுமையாக உணர முடியாது. ஈடுபாடு எவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அந்த அளவு நீங்கள் வாழ்க்கையை அறிய முடியும். ஆன்மீகம் என்பது வாழ்க்கையுடனான உங்கள் உச்சபட்ச ஈடுபாடு.

வாழ்க்கையில் முழுமையாக ஈடுபடுங்கள். ஆனந்தத்தை உணருங்கள். எனது ஆனந்தநிலையே எனது ஆசீர்வாதம்.

வேப்பிலைக் கொழுந்துதான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. கொழுந்தில் கசப்பு குறைவு என்பது தவிர வேறு எந்த சிறப்பம்சமும் அதில் இல்லை.

இருப்பவர்களுக்கும் இது அருமருந்து. பச்சை வேப்பிலைகளை மைய அரைத்து உடல் முழுக்க அப்பிக்கொண்டு ஒரு மணி நேரம் கழித்துக் குளிப்பதும் மிகுந்த பலனளிக்கும்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

# வெளிச்சம்

ஒளி, இருள் உலகின் இருவேறு இயற்கை. பகலில் சூரியனின் கதிர்கள் உலகினை ஒளிமயமாக்குகின்றன, வெப்பமாக்குகின்றன. இரவில் இருள் உலகினை மூடி இருப்பதால் வெளிச்சத்தின் அவசியம் உணரப்படுகின்றது. இரவில் மதி ஒளியை உமிழ்ந்து மண்ணுலகை குளிரச் செய்கின்றது. நட்சத்திரங்களும் ஒளி உமிழ்வனவாகும். ஒளியைக் கண்டு மகிழ்கின்றோம். இருளைக் கண்டு பயங்கொள்கின்றோம். சூரியன் சந்திரன் என்பன இருபெருஞ்சுடர்களாகும். இருளை ஓட்டுதற்கு வெளிச்சம் அவசியம். ஆதிமனிதன் நெருப்பைக் கொண்டு இருளை ஓட்டினான். குளிர் காய்ந்தான். துஷ்ட மிருகங்களை விரட்டினான். உணவை வேகவைத்து உண்டான். காலப்போக்கில் எண்ணையின் உபயோகம் அறியப்பட்ட பின் எண்ணையில் திரிபோட்டு விளக்கேற்றி இருளை விலக்கினான். வேப்பெண்ணை, இலுப்பெண்ணை, நல்லெண்ணை, தேங்காய் எண்ணெய், பசுநெய் இவற்றில் விளக்கேற்றினான். இல்லத்தில் விளக்கேற்றி ஒளிமயமாக்கியதுடன் இறைவழிபாட்டு இடங்களிலும் விளக்கேற்றி இறைவனை ஆராதனை செய்தான். இறைவன் தூண்டு சுடரணைய சோதி. சோதியையும் துலங்க வைக்கவும் விளக்கு அவசியமாயிற்று. சுவாமி வீதி உலாவரும் போது தீப்பந்தம் பிடிப்பது குறிப்பிடத்தக்கது. இப்பொழுது மின்சார விளக்குகள் பொருத்தப்படுகின்றன.

ஒரு சுடராய் உலகேழுமானான் கண்டாய்
ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்
விரிசுடராய் விளங்கொளியாய் நின்றான் கண்டாய்
விழவொலியும் வேள்வொலியுமானான் கண்டாய்
இரு சுடர்மீ தோடர் இலங்கைக் கோனை
ஈடழிய இருபது தோளிறுத்தான் கண்டாய்
மருசுடரின் மாணிக்கக் குன்று கண்டாய்
மழபாடி மன்னும் மணாளன் தானே.

இது அப்பர் திருத்தாண்டகம். மின்சாரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரே தெருவிளக்கு அமைக்கும் முறை உருவானது. பாத சாரிகளுக்கும் வாகன ஓட்டுனர்க்கும் இது பயன்பட்டது. மக்கள் பயமின்றி உலாவரவும் இதுவகை செய்தது.

மின்சாரக்குமிழை கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசனை நம் பாராட்டுதலுக் உரியவராவார். இருள் கவ்விய இரவையும் ஒளி உமிழ்ந்து பட்டப் பகல் போல் செய்வன மின்சார குமிழ்கள். கிராமப் புறங்களையும் நகரங்களையும் ஒளிவெள்ளத்துள் அவை ஆழ்த்துகின்றன. வாழ்கையை ஒளிமயமாக்க புறஒளியும் தேவையாகும். ஆணவம் இருளிலும் கொடியது என்பது திருவருட்பயன். ஆன்மா உறும் அனைத்து உபாதைகளுக்கும் அதுவே காரணம். ஆணவம் ஒழிந்தாலே ஆனந்தம் ஏற்படும். அப்பொழுது தான் உள்ளொளி பிரகாசிக்கும்.



அடுத்து ஆன்மீக ஒளியை தவசிரேட்டர்களும், சித்தர்களும், முத்தர்களும், ஞானிகளும், தபசிகளும் பரப்பினர். உன்னைத் தோண்டிப்பார் ஞானம் கிடைக்கும் என்பதே அவர்களது உபதேசம் ஆகும். எதையும் எளிதில் துறந்து விடுதலே ஞானநிலை எய்துதற்கு வழிவகுக்கும். இந்த துறவு மனப்பான்மையே பெரிய மகான்களை தோற்றுவித்திருக்கின்றது. பற்றற்ற மனோபாவம் என்பது எல்லாவற்றிலுமிருந்து ஒதுங்கி விடுவது என்பதல்ல. விருப்பு வெறுப்பற்ற மனோ நிலையது. எதையும் மனத் தூய்மையுடன் பார்க்கின்ற மனோபாவம் அது. அதுவே தெய்வீக நிலையும் ஆகும். நரேந்திரன் என்ற இளையன் சுவாமி விவேகானந்தராக உருப்பெற்று இந்து மதத் தத்துவ ஞானத்தின் சிறப்புகளை உலகோர் அறியச் செய்து மிகச் சிறந்த தத்துவ ஞானியானார். சிக்காக்கோவில் அவர் ஆற்றிய உரை மேற்குலகத்தினர் இந்து மதத்தின் சிறப்புக்களை அறியச் செய்தது.

மனிதனை மனிதன் நேசிக்காமல் தெய்வத்தைப் பற்றியும் பக்தியைப் பற்றியும் பேசிக் கொண்டிருப்பது அர்த்தமற்றது. எல்லாமதங்களுமே அன்பையும் சகோதரத்துவத்தையும் ஆதாரமாகக் கொண்டிருக்கும் போது ஒருமதம் உயர்ந்தது, இன்னொரு மதம் தாழ்ந்தது என்றெல்லாம் சண்டையிட்டுக் கொள்வது அறியாமையின் அடையாளமேயாகும்.

மனிதனையும் உயிர்களையும் நேசிக்கத் தெரியாமல் சடங்குகளுக்குள் மனிதன் சிக்கித் தவிப்பது மூடநம்பிக்கையின் வெளிப்பாடேயாகும். சமுதாயத்தை பற்றிக் கவலைப்படாமல் ஏழை, எளிய மக்களின் துயர்துடைக்கும் பணியில் ஈடுபடாமல், ஆலயங்களுக்குச் செல்வதும் பூசை புனஸ்காரங்களில் ஈடுபடுவதும் போலித்தனமான வாழக்கையேயாகும். தனக்குமட்டுமே முக்தி வேண்டுமென எண்ணி தியானத்திலும் அது தொடர்பான இதர செயல்களிலும் ஈடுபடுகின்றவன் சுயநலம் கொண்டன் ஆவான். எல்லா மனிதர்களுக்குள்ளும் இறைவன் இருக்கின்றான் என்பதன் பொருள், ஒருவனை நீ நேசிக்கின்றபோது இறைவனையும் நீ நேசிக்கின்றாய் என்பதுதான் பொருள். பட்டினியால் வாடுகின்ற மக்களுக்கு உணவு அளிப்பதுதான் முக்கியமே தவிர அவர்களிடம் போய் ஆண்டவன் பற்றியும் பக்தி பற்றியும் பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இவையே சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள். அவர் பரப்பிய ஆன்மீக ஒளி மக்களை மனிதர்களாக வாழ வைத்தது. வெளிச்சமாக வாழ்ந்தவர் ஒரு சிலர். வெளிச்சம் போட்டுப் பார்க்க வேண்டியர்கள் மிகப் பலருளர்.



நா. க. சிவராமலிங்கம்

- மோட்கேஜ் பேமென்ட் பிந்திபோச்சு !
- புறப்பட்டி ரக்ஸ் பேமென்ட் பிந்திபோச்சு !
- கிரடிட் காட்டிலையும் எடுக்க காசு இல்ல !
- றினுவல் வந்திருக்கு ஆனால் வட்டி கூட போட்டிருக்கினம் !

*போனில எல்லாம் செய்து தரலாம் எண்டு சொல்லுவினம்! பிறகு .......................... ......*

இந்தா, அந்தா, எண்டு இழுத்தடிப்பு !

கடைசி நேரத்தில கையை விடுகிறது !

போன் அடிச்சா எடுக்கிறதில்ல , !!!

உதுக்குத்தானே இப்ப **வோக் - இன்**

**மோட்கேஜ் கிளினிக்** நடக்குது. !

அங்க நேரபோனால்தான் உதுக்கு சரி! ! !

## சனிக்கிழமை தோறும் 9.00 am - 5.00 pm வரை



# 416-644-3555

**CENTUM Rapid Mortgages Inc.**

FSCO LIC # 10156

Office: T.P: 416-644-3555 Fax: 888-644-3556

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Mortgage Development Manager & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. 416-259-2002 **"Rapid Response; Rapid Results"**

# விளையாட்டுத் தகவல்கள் 345

## பெடரரை முதன்முறையாக வென்று இறுதியில் முர்ரே!

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரோஜர் பெடரர், பிரிட்டன் வீரர் ஆன்டி முர்ரேயின் அபார டென்னிஸிற்கு 5 செட்களில் தோல்வி தழுவி இறுதி வாய்ப்பை தவற விட்டார். ஆன்டி முர்ரே, செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச்சை சந்திக்கிறார். கிராண்ட்ஸ்லாமில் முதன்முறையாக பெடரரை வீழ்த்தினார் முர்ரே!

மாறி மாறி வந்த சாதக நிலையில் முர்ரே கடைசியில் 6-4, 6-7 (5-7), 6-3, 6-7 (2-7), 6-2 என்ற செட்களில் வெற்றி பெற்றார் முர்ரே. பெடரருக்கு இன்றைய எதிரி அவரது சேவ். சேவ் அவருக்கு இன்று சரியாக அமையவில்லை. குறிப்பாக முதல் சேவ் உட்காரவேயில்லை. மாறாக முர்ரேயின் சேவ் பயங்கரமாக இருந்தது. 22 ஏஸ்களை போட்டார். குறிப்பாக பெடரரின் வலது கைப்பக்கமாக தொட முடியாத கோணத்தில் அடித்த சேவ்கள் அபாரம் இன்று அது பலவீனர்களையும் அவருக்குப் பெற்றுத் தந்தது. முதல் செட்டில் பெடரர் சேவ் உட்காரவில்லை என்பதால் முர்ரே எளிதில் 6-4 என்று கைப்பற்றினார். இரண்டாவது செட்டிலும் பெடரர் திணறினார். ஆனால் கிரவுண்ட் ஷாட்களின் சில அபார கோணத்தினால் டைபிரேக்கருக்கு நகர்த்தினார். ஆட்டம் டைபிரேக்கருக்குச் சென்றால் பெடரரின் அனுபவம் பேசும். முர்ரே ஒரு 5 முறையாவது வெளியே அடித்திருப்பார். டைபிரேக்கரில் பெடரர் 7-5 என்று வெற்றிபெற்றார். 3வது செட்டில் துவக்கத்திலேயே முர்ரே பிரேக் செய்தார். அதன் பிறகு முர்ரேயின் சேவ்வை பெடரரால் தொட முடியவில்லை. 6-3 என்று வெற்றி பெற்றார் முர்ரே. 4வது செட் இந்த ஆட்டத்தின் மிக முக்கியமான செட்டாகும், பெடரர் நிறைய பிழைகளைச் செய்ய முர்ரே பிரேக் செய்தார். மீண்டும் முர்ரே நிறைய தவறுகளைச் செய்ய பெடரர் பிரேக் செய்தார். ஆனால் மீண்டும் முர்ரே பிரேக் செய்து 4-2 என்று முன்னிலை பெற்றார்.

ஆனால் மீண்டும் முர்ரேயின் கிரவுண்ட் ஷாட்கள் பல வெளியே செல்ல பிரேக் வந்தது. அதன் பிறகு டை பிரேக்கருக்குச் சென்றது. அதில் பெடரர் சில பிரமாதமான ஷாட்களை ஆடி முர்ரேயை நிலைகுலையைச் செய்தார். முர்ரேயும் மீண்டும் நிறைய வெளியே அடித்து சொதப்ப பெடரர் டை பிரேக்கரில் 7-2 என்று வெற்றி பெற்றார். அதாவது 4-2 என்ற முன்னிஅலி பெற்றிருந்த நிலையில் பெடரரின் சேர்வில் 40-14 என்று முன்னிலை வகித்த நிலையில் முர்ரே வெற்றி வாய்ப்பைக் கோட்டை விட்டார். ஆனால் 5வது செட்டில் துவக்க சர்வை வீசி முர்ரே 1 என்று முன்னேற 2வது சேர்வில் பெடரர் சொதப்ப சில அபாரமான கிரவுண்ட் ஷாட்களில் பெடரர் சேர்வை முறியடித்து, பிறகு தன் சேர்வையும் வென்று 3-0 என்று முன்னிலை பெற்றார் முர்ரே. அதன் பிறகு பெடரர் ஆட்டம் சோபிக்கவில்லை. மாறாக கடைசி சேர்வ் கேமிலும் பெடரர் தவறுகள் இழைத்து பிரேக் பாயிண்ட் கொடுத்து தோற்றார். கடைசி ஷாட் கூட முர்ரே அடித்து வெற்றி பெறவில்லை. பெடரர் மோசமாக வெளியே அடித்ததால் தோற்றார். மொத்தம் 60 முறை பிழைகள் செய்தார் பெடரர். இன்றைய தினம் பெடரருக்கு மறக்கப்படவேண்டிய தினம். முர்ரேயிற்கு குறிப்பாக 4வது செட்டை கோட்டை விட்ட பிறகு பெடரர் போன்ற வீரர்களிடம் 5வது செட்டின் சேர்வ் கேமை முறியடிப்பது கடினம்



முடியாத காரியத்தை செய்தார் முர்ரே வெற்றிக்கனியைப் பறித்தார். ஹாட்ரிக் சாம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிச் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மீண்டும் சாம்பியன் பட்டம் வென்றார். 101வது அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடைபெற்றது. நடந்த ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் உலகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மூன்றாமிடத்தில் உள்ள இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேவை சந்தித்தார். மூன்று மணி நேரம் 40 நிமிடம் வரை நீடித்த இப்போட்டியில் ஜோகோவிச் 6-7, 7-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 4வது முறையாக சாம்பியன் பட்டம் வென்றார். இது, இவரது 6வது கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும். அவுஸ்திரேலிய ஓபன் (2008, 2011-13), விம்பிள்டன் (2011), அமெரிக்க ஓபன் (2011) தொடர்களில் பட்டம் வென்றுள்ளார்.

### பிரெஞ்ச் ஓபனில் கடந்த ஆண்டு இறுதிச்சுற்று வரை முன்னேறிய இவர் 2வது இடம் பிடித்தார்.

இறுதிச்சுற்றில் அசத்திய ஜோகோவிச், அவுஸ்திரேலிய ஓபனில் 4வது முறையாக (2008, 2011, 2012, 2013) சாம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் அதிக முறை சாம்பியன் பட்டம் வென்றவர்கள் வரிசையில் 2வது இடத்தை அமெரிக்காவின் அகாசி (1995, 2000, 2001, 2003), சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரருடன் (2004, 2006, 2007, 2010) பகிர்ந்து கொண்டார். முதலிடத்தில் அவுஸ்திரேலியாவின் ராய் எமர்சன் (6 முறை, 1961, 1963-67) உள்ளார். தவிர ஜோகோவிச் (2011-13), அவுஸ்திரேலிய ஓபனில், 'ஹாட்ரிக்' பட்டம் வென்ற மூன்றாவது வீரரானார். முன்னதாக அவுஸ்திரேலியாவின் ராய் எமர்சன் (1963-67), ஜாக் கிராவ்போர்டு (1931-33) ஆகியோர் இச்சாதனை படைத்திருந்தார். சாம்பியன் பட்டம் வென்ற ஜோகோவிச்சுக்கு ரூ. 13.7 கோடி பரிசு வழங்கப்பட்டது. இரண்டாவது இடம் பிடித்த முர்ரேவுக்கு 6.8 கோடி பரிசு வழங்கப்பட்டது.

## அவுஸ்திரேலிய ஓபன் சாம்பியன் பட்டத்தை மீண்டும் வென்றார் அசரென்கா


அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் முதல்நிலை வீராங்கனையும், நடப்பு சாம்பியனுமான பெலாரஸின் விக்டோரியா அசரென்கா, சீனாவின் நா லீயுடன் மோதினார். பரபரப்பான இப்போட்டியின் தொடக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய சீன வீராங்கனை நா லீ முதல் செட்டை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார். அதன்பின்னர் 2வது செட் ஆட்டத்தின்போது அவரது இடது கணுக் காலில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. காலில் கட்டுப் போட்டுக்கொண்டு, வலியுடன் தொடர்ந்து ஆடிய அவர், அசரென்காவின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறினார். இதனால் 6-4, 6-4 என்று அடுத்தடுத்து 2 செட்களையும் கைப்பற்றிய அசரென்கா, சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டார். சர்வதேச ஒற்றையர் தரவரிசையிலும் முதலிடத்தில் நீடிக்கிறார். இறுதிப்போட்டியில் அசரென்காவிடம் தோல்வியடைந்த நா லீ, 2011ம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் தேர்வுக்குழு தலைவராகிறார் ஜெயசூர்யா

தற்போதைய தேர்வுக்குழுவினரின் பதவிக் காலம் முடிவடைவதையடுத்து, இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் தேர்வுக்குழு தலைவராக முன்னாள் கப்டன் சனத் ஜெயசூர்யாவை நியமிக்க அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது. இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சனத் ஜெயசூர்யா, தற்போது இலங்கையில் ஆளும் கட்சியாக இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி எம்.பி.யாக இருக்கிறார். இந்த நிலையில், சனத் ஜெயசூர்யாவை இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழு தலைவராக நியமிக்க இலங்கை கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது. இது குறித்து அனுமதி கேட்டு இலங்கை விளையாட்டுத்துறை அமைச்ச கத்துக்கு பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் அனுமதி கிடைத்ததும் தேர்வு குழுவினரின் பெயர்கள் அறிவிக்கப்படும். தற்போதைய தேர்வுக்குழுவினரின் பதவிக் காலம் கடந்த மாதத்துடன் முடிவடைந்து. மார்ச் மாதத்தில் நடைபெறும் வங்கதேச பயணத்துக்கான இலங்கை டெஸ்ட், ஒருநாள் போட்டி அணியை புதிய தேர்வு குழுவினர் தேர்வு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐ.சி.சி டி20 தரவரிசை வெளியீடு: முதலிடத்தில் இலங்கை

சர்வதேச டி20 போட்டியில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐ.சி.சி), துபாயில் வெளியிட்டது. இதில் முதலிரண்டு இடங்களில் இலங்கை (127 புள்ளி), மேற்கிந்திய தீவுகள் (122) அணிகள் உள்ளன. இந்திய அணி 119 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் நீடிக்கிறது. இங்கிலாந்து (118), தென் ஆப்ரிக்கா (117) அணிகள் “ரொப்-5” வரிசையில் உள்ளன. துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில், அவுஸ்திரேலியாவின் ஷேன் வாட்சன் (798 புள்ளி), மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெயில் (792), நியூசிலாந்தின் பிரண்டன் மெக்கலம் (787) முதல் மூன்று இடங்களில் உள்ளனர். இந்திய வீரர் வீராட் கோஹ்லி 5வது இடத்தில் உள்ளார். மற்றொரு இந்திய வீரர் சுரேஷ் ரெய்னா, 9வது இடம் பிடித்தார். யுவராஜ் சிங் (13வது இடம்), கவுதம் கம்பீர் (17வது) ஆகியோர் 'ரொப்-20' வரிசையில் உள்ளனர். பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில், 'ரொப்-10' வரிசையில் ஒரு இந்திய பந்துவீச்சாளர் கூட இடம் பெறவில்லை. தமிழக சுழற்பந்துவீச்சாளர் அஷ்வின், 16வது இடத்தில் உள்ளார். இவரை அடுத்து, ஹர்பஜன் சிங் 30வது இடத்தில் உள்ளார். முதல் மூன்று இடங்களில் பாகிஸ்தானின் சயீட் அஜ்மல் (756 புள்ளி), இலங்கையின் அஜந்தா மெண்டிஸ் (746), இங்கிலாந்தின் சுவான் (720) உள்ளனர். சகலதுறை வீரர்களுக்கான வரிசையில், அவுஸ்திரேலியாவின் ஷேன் வாட்சன், பாகிஸ்தானின் முகமது ஹபீஸ் முதலிரண்டு இடங்களில் உள்ளனர். இந்தியாவின் யுவராஜ் சிங் 3வது இடத்தில் உள்ளார்.



எஸ். கணேஷ்

Free Real Estate Class
Call: 416.321.6969

# ஒரே வீட்டை 6 தரம் விற்ற ஆதன முகவர்

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 383

ஜனவரி 2013 இல், ரொறொன்ரோ ஸ்ரார் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையில், ஒரு ஆதன வியாபார பிரதிநிதியான திரு. ஹரி லவ் (Gary Love) என்பவர் ஒரு வீட்டை ஆறு (6) தடவை திரும்பத் திரும்ப விற்பனை செய்தது பற்றிய தகவல் பதியப்பட்டு இருந்தது.



திரு. ஹரி லவ் என்ற அப்பிரதிநிதி வன்கூவரில் அமைந்துள்ள குறிப்பிட்ட வீட்டை 1971 ஆம் ஆண்டில் முதல் தடவையாக $32,000 டொலரிற்கு விற்பனை செய்திருந்தார். அப்பொழுது திரு. ஹரி லவ்விற்கு வயது 28. அவர் விற்ற ஆரம்ப வீடுகளில் அதுவும் ஒன்றாகும். வாழ்க்கையில் பல மாற்றங்கள் வரும், ஆனால் சிலர் மட்டும் மாற்றங்களுடன் தம்மையும் மாற்றிக் கொள்வர். அண்மையில் நான் வாசித்த 'தலைமைப்பண்பு பற்றிய மெய்யறிவு' ('Leadership Wisdom') என்ற புத்தகத்தில் திரு. றொபின் சர்மா, 'எல்லோரும் பார்ப்பதைப் பாருங்கள், ஆனால் யாராலும் சிந்திக்க முடியாதவற்றை நீங்கள் சிந்தியுங்கள்,' என எழுதியுள்ளார்.

இவ்வாறே ஹரி அவர்களும், குறிப்பிட்ட வீட்டின் பெறுமதி எதிர்காலத்தில் எவ்வாறு மாறும் என்பதனை ஒவ்வொரு தடவையும் விற்கும் போதும், தனது அனுபவத்தால் மற்றவர்கள் சிந்திக்க முடியாததை தூரப்பார்வையுடன் பார்த்து தனது தொழிலை செய்துள்ளார். தனது 70 ஆவது வயதில் தொழிலிலிருந்து இளைப் பாறும் திரு. ஹரி லவ் இம்முறை அதே வீட்டை $1,018 மில்லியனிற்கு விற்றுள்ளார்.

தொழில்ரீதியாக பலர் ஆதன வியாபார பிரதிநிதியாக செயல்பட்டாலும், எத்தனை ஆதன முகவர்கள் குடும்ப ஆதன வியாபார பிரிதிநிதியாக (Family Relator) உள்ளார்கள் என்பது முக்கியமாக கவனிக்க வேண்டியது. இது கேள்விக்குறியே. இப்பொழுது ஊடகங்களில் குறைந்த, மிகக் குறைந்த கொமிஷன் (Commission), கொமிஷனில் திருப்பிக் கொடுப்பது இதுபோன்ற மக்களை ஈர்க்கின்ற விளம்பரங்களால் உடனடி வியாபாரத்தை பெறுவதனை மறந்து, திரு. ஹரி லவ் போன்ற சேவையாளரை குடும்ப ஆதனப் பிரதிநிதியாக வீடு/மனை ஐ வாங்குபவர்கள், விற்பவர்கள் தெரிவு செய்ய வேண்டும் என்பதே எனது கருத்து. இதுவே வாங்குபவர்கள் விற்பவர்களிற்கு நீண்ட காலத்தில் பயன் தரக்கூடியது. திரு. ஹரி லவ் ஒரு குடும்பத்தின் மூன்று பரம்பரைகளிற்கும் (3 Generations) ஆதனம் வாங்கல்/விற்றல் தொழில் செய்துள்ளார் என்பது மிகவும் மகிழ்ச்சியானதும், ஆதனப்பிரதிநிதிகள் கவனிக்க வேண்டிய உயர்வான செயலுமாகும். திரு. ஹரி லவ் போன்ற

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated




**"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"**



*Raja Mahendran,* P.Eng.

*Broker / Owner*

***5215 Finch Ave, E, #203, Toronto***
***Tel.:416.321.6969***
***Traders Blvd #29, Mississauga***
***Tel.:905.712.2666***

## FOR RENT

Brand new 2 + bedroom, 2 washrooms corner unit. Tridel condo. for rent. Asking price $1650

## GTA SQUARE

**MIDDLEFIELD & FINCH**




Mainfloor retail, commercial unit for sale. Price $139,900

## WANTED

10 Acre or more land wanted in GTA.

# அரசின் சிறு கையுதவி - படுகொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தவர்களுக்கு!

## கனடிய தகவல் தொடர் 189

***FINANCIAL ASSISTANCE FOR FAMILIES OF HOMICIDE VICTIMS - FAFHV***

'விளம்பரம்' பத்திரிகையின் தகவல் கட்டுரைக்காக இதுவரை அறியப்படாத தகவல்கள் ஏதாவது தென்படுமா? எனத் தேடிய போது ஒன்ராரியோ மாகாண சட்டமாதிபதி அமைச்சகத்திலிருந்து வெளியான இந்த அறிவிப்பு எனக்கு அகப்பட்டது. அந்தத் தகவல்களை ஆழமாக பார்க்கும் போதுதான் கடந்த காலங்களில் கனடா வாழ் தமிழர்களிடையே நடந்த பல துயரமான சம்பவங்கள் என் நினைவிற்கு வந்து சற்று நேரம் சுழன்றடித்தது.

• இரவு நேரம் தமது வேலையை முடித்துவிட்டு வீடு திரும்பி வந்து பார்த்தால் வீட்டினுள் மனைவி படுக்கை அறையினுள் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்த பல வருடங்களுக்கு முற்பட்ட சம்பவம் ஒன்று.

• தப்பான துப்பாக்கிப் பிரயோகங்களில் சில நிரபரதியான இளைஞர்களின் கொலைகள்.

• தமது மகனை தப்பான வழியில் இழுத்துக் கொண்டு போக முயலும் கூட்டாளிமாரை கண்டித்ததால் அந்த தமிழ் தாயின் படுகொலை.

இப்படி பல சம்பவங்கள் நடந்து முடிந்தது பலரும் அறிந்த விடயம். இச்சம்பவங்கள் மனிதத்துவம் நிறைந்த எந்த மனிதனின் மனதினையும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. என்ன செய்யமுடியும்.?

• சட்டம் தமது கடமையினை செய்யும்.
• நீதி தேவதை குற்றவாளிகளை துரத்தும். இதுவே தர்மத்தின் நியதி!

ஆனால் இத்தகைய கொடூரமான துன்பவியல் நிகழ்வுகளில் பாதிக்கப்பட்ட குடும்பத்தவர்களின் உடனடி தேவைக்கு மாகாண அரசு ஏதோ ஒரு சிறு நிவாரண உதவியினை வழங்க தயார் நிலையில் இருக்கும் செய்தியினை அண்மையில் அறிவித்திருந்தது. அதாவது $10,000 டொலர் வரை ஒரு சிறு கையுதவி வழங்குவோம் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் அதற்கு விண்ணப்பியுங்கள் என்று குறிப்பிட்டு இவ் அமைச்சின் அலுவலகம் அழைப்பாணை விடுத்துள்ளது.

ஒன்ராரியோ மாகாண சட்டமாதிபதி திரு. ஹிறீஸ் பென்லி (Mr. Chris Bently) அவர்கள் இத்தகைய விடயத்தில் ஒரு செய்தியினை பின்வருமாறு உருக்கமாக குறிப்பிடுகின்றார்.

'No amount of money can ever make up for the loss of a loved one. But we hope this program will help to ease some of the burden experience by families during these difficult & emotional times'.

'அன்புக்குரியவர் ஒருவரின் இழப்பின் துயரத்தினை குறிப்பிட்ட தொகைப் பணம் ஈடுசெய்து விடமுடியாது. ஆனால் இந்தப் பணம் வழங்கும் திட்டம் என்பது துயரத்திலிருக்கும் நிலையில் சிறு சுமையினை அந்த நேரம் சற்று குறைக்கும்' என குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இங்கு இந்நிவாரணத்தினை பெறுவதற்கு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். மாகாண சட்டமாதிபதி நிறுவனத்தின் இது சம்பந்தப் பட்ட சட்ட ஏடுகளில் ஆங்கிலத்தில் உள்ள நிபந்தனைகளை குறிப்பிட்டு அதன் தமிழ் மொழி பெயர்ப்பினை இங்கு குறிப்பிடுகிறேன்.

The Homicide Occurred on after January 01, 2012

குறிப்பிடப்பட்ட கொலை மரணம் என்பது ஜனவரி 01, 2012 க்கு பின்பு நடந்திருத்தல் வேண்டும். (ஆனால் 2006 - 2011 க்கு இடைப்பட்ட காலத்தினுள் சம்பவம் நடந்திருந்தாலும் தங்களுக்கு அழைக்கு மாறு இந்நிறுவனம் தங்கள் தகவல் பிரிவில் குறிப்பிட்டுள்ளது.)

• Beneficiary must be victim's parent or spouse or common law partner at the time of death!

நிவாரணம் பெறுவர் சம்பவம் நடந்த நேரம் கொலை செய்யப்பட்டவரின் பெற்றோர் அல்லது தம்பதிகளில் ஒருவராக இருந்தல் வேண்டும்.

• The homicide occurred in ontario and beneficiary must be ontario resident at that time

சம்பவம் ஒன்ராரியோ மாகாணத்தில் நடந்திருத்தல் வேண்டும். அதேநேரம் நிவாரணம் பெறுபவரும் ஒன்ராரியோ மாகாணத்தில் வாழ்பவராக இருத்தல் வேண்டும்.

• The victim did not contribute to his or her death through criminal activity or other behavior that could reasonably have be on expected to lead to the homicide.

கொலை செய்யப்பட்டவரும் கொலை செய்யப்படும் அளவுக்கு ஓரளவுக்கேனும் அவரது சுபாவங்களினால் குற்றச் செயல்களில் ஈடுபடாதவராக இருத்தல் வேண்டும்.

• Beneficiary does not have a conviction or any pending charges against him/her related to the homicide, an he/she were not found to have contributed to the homicide.

நிவாரணம் பெறுபவரும் இந்த கொலை யுடன் சம்பந்தப்பட்டவராகவோ அல்லது தொடர்புடையவராகவோ குற்றம் சாட்டப்பட்டவராக இல்லாது இருந்திருக்க வேண்டும்.

நிவாரணம் கோரும் விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி பின்வருமாறு!
Ministry of the attorney general Ontario
Financial assistance for famillies of homicide victims FAFHV
18, king St. East, 7the floor
Toronto, Ontario M5C 1C4

phone - 416.212.9164
1.855.467.4344

நிவாரணம் கோரும் விண்ணப்பபடிவத்தில் பின்வரும் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும்.

1. நிவாரணம் கோருபவர் பற்றிய விபரங்கள் ஏதாவது குற்ற சாட்டுகளுக்குள் உட்பட்டு இருந்தவரா என்ற விபரங்களுடன் நடந்த துன்பவியல் சம்பவத்தின் தாக்கம் எவ்வாறு பாதித்துள்ளது என்ற தகவல்கள்.

2. படுகொலை செய்யப்பட்டவர் தொடர்பான விபரங்கள்.


விண்ணப்பத்துடன் சேர்ந்து நிவாரணம் கோரி விண்ணப்பிப்பவர் நிவாரணத்தினை பெறும் தமது தகுதி நிலைப்பாட்டினை நிரூபிப்பதற்கு மூன்று வகையான பத்திரங்கள் சமர்பிக்கப்படல் வேண்டும். (Acceptable supporting documents)

அவையாவன பின்வருமாறு!

1. ஒன்ராரியோ மாகாணத்தில் வசிப்பவர் என்பதற்கான ஆதாரம் (Proof of your residence in Ontario)

சாரதி அனுமதி பத்திரம், மாகாண மருத்துவ அட்டை போன்ற சில ஆதார அடையாள அட்டைகளின் பிரதிகளை சமர்ப்பிக்கலாம்.

2. படுகொலை செய்யப்பட்டவரோடு தங்களுக்கு உள்ள உறவுமுறை எது என்பது பற்றிய நிரூபணம் (Proof of your relationship to the homi-



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,

தொடர்ச்சி 10ஆம் பக்கம்


**Sitham Sam Shanmugam** (Sales Rep.)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

**MERVIS & HWY 401**
2 Story detached home for sale. Very demand area.

**Daisy Mart**
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket
at Leslie Main Road

**LAND VALUE**
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

**GAS STATION**
North of Barrie with property. Good income. Store + Apartment

சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

எண்ணம் போல் உங்கள் இல்லங்களை, வியாபார நிலயங்களை விற்க, வாங்க அழையுங்கள்.



# Sell your home **faster** and more **money**

Gardenview/Conlin




3 Bedrooms, 3 W Rooms
Fireplace

Brimorton/Scarborough Gold




3+1 Bedrooms, 2 W Room
Hardwood Floor

Markham/Steeles




4 Bedrooms, 3 W Rooms
Ceramic Floors

9th Line And Reeves Way




3 Bedrooms, 3 W Rooms
Ceramic,Hardwood Floors

Morningside/Nightstar




3+1 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

16th Are/Cornell Rouge Blvd




3 Bedrooms, 3 W Rooms
Ceramic,Hardwood Floors

Hwy 7 E/9th Line




3 Bedrooms, 3 W Rooms
Hardwood Floor

Middlefield/Highglen




4 Bedrooms, 3 W Rooms
Ceramic Floors

Morningside / Old Finch




5+2 Bedrooms, 5 W Rooms
Ceramic, Hardwood Floors

9th Line / 14th Ave




4 Bedrooms, 3 W Rooms
Ceramic, Hardwood Floors

Morningside & Finch




4+1 Bedrooms, 4 W Rooms
Hardwood Floor

Castlemore/Hwy 48




4 Bedrooms, 5 W Rooms
Ceramic, Tile Floors

Mccowan/Stonebridge




5 Bedrooms, 5 W Rooms
Hardwood Floor

Millard/Braith




4 Bedrooms, 4 W RoomsC
Gas Fireplace

Grand & St Clair



Business For Sale

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold

Your home advertised in full color prints ads every week until it is sold

Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**



RE/MAX

## Elaguppillai Srinathan (Mike) B.Sc

Sales Representative

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@yahoo.com

**Ph1-7800 Woodbine Ave**
**Markham, ON L3R 2N7**
**Office: 905-470-9800**
**Fax: 905-470-7770**

KZG 647-200-5833

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# GTA Square இல் அமைந்துள்ள Heros Catering உணவகத்தின் ஆதரவில் வெளிவரும் கணிதம் சம்பந்தமான போட்டி

## செயல்முறை

01. கிடையான (Horizontal), நிலையான (Vertical) பெட்டிகள் ஒவ்வொன்றும் (1 - 4) வரையான இலக்கங்களால் நிரப்பப்படல் வேண்டும். ஒரு எண் ஒரு தடவை மட்டுமே பாவிக்க வேண்டும்.

02. தடிப்பான கறுப்பான கோடுகளாலான பெட்டிக்குள் இடதுபக்க மேல் மூலையில் காட்டப்படும் எண் மற்றும் செயல்பாடு (கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல்) எந்த ஒழுங்கிலாவது கணக்கிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் உள்ள இலக்கம் பெறப்படல் வேண்டும்.

03. தனியானபெட்டியில் வரவேண்டிய இலக்கம் தரப்பட்டுள்ளது.

**விடைகள் விளம்பர பப்ளிகேஷன்ஸ் இற்கு *February 12, 2013* இற்கு முன்பாக** தொலைநகல் *(Fax)*, அஞ்சல் *(Mail)* மின்னஞ்சல் *(E-mail)* மூலம் **அனுப்பி வைக்க வேண்டும்.**

**சரியான விடையை எமக்கு அனுப்பியவர்களுள் ஒரு அதிஷ்ட சாலிக்கு $10 பெறுமதியான *Voucher* வழங்கப்படும். இந்த *Voucher* ஐ *Heros Catering* உணவகத்தில் பாவிக்கலாம். இதற்கு காசு பெறுமதி கிடையாது.**
(* Some conditions may apply)

• **போட்டி சம்பந்தமான விளக்கங்களுக்கு *(Any questions)* 416.282.8059 இல் தொடர்புகொள்ளவும்.**

போட்டி இலக்கம் 7இல் வெற்றிபெற்றோர்

### போட்டி இலக்கம் - 8

| | | | |
|---|---|---|---|
| 1- | | 3- | |
| 3+ | 3 | 2÷ | |
| | 3- | 4+ | 6X |
| 4 | | | |

### விடை- போட்டி இலக்கம் - 7

| | | | |
|---|---|---|---|
| 2 | 1 | 4 | 3 |
| 3 | 4 | 1 | 2 |
| 1 | 2 | 3 | 4 |
| 4 | 3 | 2 | 1 |

***Instructions:*** 1. Each row and each column must contain the numbers 1 through 4 without repeating.
2. The numbers within the heavily outlined boxes, called cages, must combine using the given operation (in any order) to produce the target numbers in the top-left corners.
3. The number in the single-box cage is given.

# அரசின்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

cide
victim)

நிவாரணம் கோருபவர் படுகொலை செய்யப்பட்டவரின் பெற்றோர் அல்லது தம்பதியர்களில் ஒருவர் என்பது நிரூபிக்கப்படல் வேண்டும்.

3. உறுதி செய்பவரின் அத்தாட்சி (Confirmation from guarantors)

எவராவது ஒரு உயர் தொழில் துறை சார்ந்தவரின் அங்கீகாரமும் அத்தாட்சியும் விண்ணப்பத்தில் கைச்சாத்திட்டிருத்தல் வேண்டும். உதாரணமாக வக்கீல், டாக்டர், பல் வைத்தியர், பாடசாலை ஆசிரியர், பொறியியலாளர், கணக்காளர், மருந்தாளர், மருத்துவ சாரதி, பொலிஸ் அதிகாரி, பல்கலைக்கழக பேராசிரியர்கள் போன்றவர்களில் எவராவது ஒருவர் அத்தாட்சிப்படுத்தி உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

முடிவு என்ன? விண்ணப்பங்களின் பரிசீலனையின் பின்பு இச்சிறு நிவாரணம் உங்களைத் தேடி வரும். இந்த நிலையிலிருந்து துன்பத்தினை எதிர்கொள்பவர்கள் இதுவரை அறிந்து கொள்ளவில்லையானால் அறிந்து கொள்ள வேண்டிய செய்தி இது.

# ஒரே வீட்டை...


07ஆம் பக்கத்தொடர்ச்சி

பலர்
எமது சமூகத்திலும் உருவாக வேண்டும் என்பது எனது கனா.

நாம் கற்க வேண்டிய பல விடயங்கள் ஆதன வியாபாரத்தில் உள்ளன. 1971 இற்கும் 2012 இற்குமிடையில் ஆதன விலை அதிகரித்து, பின் இறங்கி அடமானக் கடன் vs வட்டி வீதம் 20% வரை அதிகரித்து 2% வரை இறங்கியதனை நாம் அறிந்துள்ளோம். எது எவ்வாறாக இருந்த போதிலும் வீட்டின் விலை அதிகரித்துள்ளதனை நாம் காணுகின்றோம். ஆதன முதலீடு என்பது நீண்ட கால முதலீடு என்பதனை மறக்கக் கூடாது. குறுகிய காலத்தில் ஏறலாம், இறங்கலாம். ஆனால் நீண்ட காலத்தில் விலை அதிகரித்தே வருகின்றது என புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. தகுந்த இடத்தில் (Lacation) ஆதனம் வாங்குவதனால் நன்மை ஏற்படும் என்பதே அனுபவம்.

அடுக்குமாடியின் விலையில் இறக்கம் ஏற்படுமா? இதுவே அனேகரின் இன்றைய சிந்தனை! இதே கட்டுரையில் மேலே கூறியது போல, குறுகிய காலத்தில் எதுவும் நடக்கலாம். நீண்ட காலத்தைப் பற்றிய முதலீடே இதற்கான பதில். 2012 ஆம் ஆண்டு 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது விற்கப்பட்ட அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கையும் பெறுமதியும் குறைவாகவே உள்ளது. 2012 இல் மொத்தமாக விற்கப்பட்ட அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 18,755 ஆகும். இப்பொழுது GTA பகுதியில் 60,713 அடுக்குமாடி மனைகள் 237 கட்டிடத்தொகுதியில் நிர்மாணம் நடைபெற்று வருகின்றது. 60,713 அடுக்குமாடி மனைகள் கட்டப்படுகின்றபோதும், இவை மக்களின் கைகளில் வந்துசேர குறைந்தது ஒன்றிலிருந்து நான்கு ஆண்டுகள் எடுக்கலாம்.

ஒரு முக்கிய தகவல் 2011 இலிருந்து 2012 வரை மொத்தமாக Low rise & High rise விற்கப்பட்ட வீடு, மனைகள் 29% ஆல் குறைந்து 32,824 வீடு மனைகள் விற்கப்பட்டுள்ளன. (இதில் தனிவீடுகள், இரண்டு சேர்ந்த வீடுகள், தொடர்வீடுகளின் விற்பனை 14,069 (Low rise). கடந்த நான்கு வருடங்களில் தனி வீடுகள், இரண்டு சேர்ந்த வீடுகள், தொடர்வீடுகள் 52% இனால் குறைந்துள்ளது. ஒன்ராரியோ அரசின் இறுக்கமான Green belt (Intensification policies) கொள்கையால், நிர்மாணத்திற்குரிய நிலத்தின் அளவு அருகி வருவதால் நிர்மாணம் செய்வதற்கு உகந்த நிலத்தின் பெறுமதி அதிகரிப்பு வீட்டின் விலையில் அதீத அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தனிவீடுகளின் சராசரி விலை 2012 இல் $632,868 ஆக அதிகரித்ததால் முதல்தடவை வாங்க இருந்த பலரினால் வாங்க முடியாத நிலை ஏற்பட்டது.



எனவே ஆதனம் விற்றல் வாங்கல் என்பது தேவையான செயல். மக்கள் அடுக்குமாடி மனைகளை வாங்கவேண்டிய பாதையில் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம்?

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
**Buying or Selling**
**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**

நந்தா ஐயாத்துரை
***Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555***

# சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் தன்னை இணைத்துக்கொண்டவர் அமரர் அநு. வை. நாகராஜன்

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பது யாவரும் அறிந்த ஓர் முதுமொழி. எனவேதான் அனைத்து சமூகங்களும் சிறுவர்களின் உடல், உள, அறிவு, மேம்பாட்டிற்காக தனிப்பட்ட முறையிலும், அமைப்புகள் மூலமாகவும் செயல்பட்டு வருகின்றனர். இலக்கிய துறையிலே சிறுவர் இலக்கியம் என்ற ஒரு பிரிவு வளர்ச்சி பெற்று வருவதற்கும் இதுவே முக்கிய காரணம்.

ஈழத்திருநாட்டிலே சிறுவர்களுக்காக பல பாடல்களை எழுதி, சிறுவர் இலக்கிய துறைக்கு பிள்ளையார் சுழி போட்டவர் நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர். 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' என பாடி சிறுவர்களை பரவசப்படுத்திய அவர் "கத்தரி வெருளி", "வெண்ணிலா" போன்ற பல பாடல்களை பாடி சிறுவர் இலக்கிய துறைக்கு புத்துயிர் அளித்தார். க. சோமசுந்தரப்புலவரின் அடிச்சுவட்டினை பின்பற்றி அண்மைக்காலத்தில் சிறுவர் இலக்கிய துறையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர் அநு. வை. நாகராஜன் அவர்கள்.

அநு. வை. நாகராஜன் அவர்கள் யாழ்ப்பாணம் உடுப்பிட்டியை சார்ந்த வைரமுத்து இராசம்மா தம்பதியினரின் புதல்வராவார். எனினும் இவரது பெற்றோர் அநுராதபுரத்தில் வாழ்ந்து வந்த காரணத்தால் இவரின் இளமைக்கால வாழ்க்கையும் அநுராதபுரத்தில் அமைந்துவிட்டது. இளமைக்காலம் வாழ்கையில் ஒரு இனிமையான காலம். அந்த இனிமையாக காலத்தில் வாழ்ந்த இடத்தையும் அவர் மிகவும் நேசித்தார். அதனால் தான் அவர் தனது பெயருக்கு முன்னால் "அநு" என்று அநுராதபுரத்தின் முதல் இரு எழுத்துக்களையும் சேர்த்து எழுதும் பழக்கத்தினை ஏற்படுத்திக்கொண்டார்.

அமரர் நாகராஜன் அவர்களின் புகுந்தகம் கட்டுவன், தமிழும், சைவமும், இசையும், கூத்தும் தளைத்தோங்கிய பூமி. அங்கு விதானையாராகவும் பின்னர் மரணவிசாரணை அதிகாரியாகவும் நீண்ட காலம் பணியாற்றியவர் அமரர் நாகலிங்கம். அவரது கடைசி மகள் நேசபூபதி. இவர் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் எம். எம். தண்டபாணி தேசிகர், வச்சிர வேலு முதலியார் போன்ற இசை மேதைகளிடம் கர்நாடக இசை பயின்று கட்டுவனுக்கு பெருமை சேர்த்தவர்களில் ஒருவர். 1971 ஆம் ஆண்டளவில் இவரை திருமணம் செய்து கட்டுவன் ஊரின் மருமகன் ஆனார் நாகராஜன். இவர் தனது பிறந்த இடமான உடுப்பிட்டியையும் இளமைக்காலத்தில் வாழ்ந்த இடமான அனுராதபுரத்தையும் நேசித்தது போலவே கட்டுவனையும் மிகவும் நேசித்தார்.

1978 ஆம் ஆண்டளவில் கட்டுவன் மயிலிட்டி தெற்கு பாலர் ஞானோதய வித்தியாசாலையின் அதிபராக நாகராஜன் பதவியேற்றார். சைவமும் தமிழும் இசையும் கூத்தும் தளைத்தோங்கிய இப்பகுதியில் கல்விச்செல்வத்தை வாரிவழங்கிய ஒரேயொரு பாடசாலையாக பாலர் ஞானோதய வித்தியாசாலை விளங்கியது. இளமை துடிப்பும், புத்துணர்ச்சியும், உயர் கல்வித்தகைமையும் கொண்ட அமரர் நாகராஜனை அதிபராக பெற்றதனால் அப்பாடசாலை பெருமையடைந்தது. அத்துடன் மொழிப்பற்று, இறைபத்தி, கலை இலக்கிய துறையில் நாட்டம், இசைத்துறையில் ஆர்வம், சிறுவர் நலனில் அக்கறை போன்ற பல்வேறு ஆளுமைகளை கொண்ட அமரர் நாகராஜன் அப்பாடசாலைக்கு கிடைத்த பொக்கிஷமாக கருதப்பட்டார்.

- வே. விவேகானந்தன் -

வாசிப்பு பழக்கத்தினை நிறையவே கொண்டிருந்த அவர் சிறுவர் மத்தியில் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டினார். அப்பாடசாலைக்கு ஒரு நூலகம் இருக்க வேண்டும் என்பதனை உணர்ந்த முதலாவது அதிபர் என திட்டவட்டமாக கூறலாம். கல்வி அமைச்சின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நூலக வாரம், சுகாதார வாரம் போன்றவற்றையும் செயல்முறைப்படுத்தி மாணவர் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். 1979 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சு சமூகக்கல்வி என்ற புதிய பாடத்திட்டத்தை அறிமுகம் செய்தபோது அதனை செயல்படுத்த ஒரு பட்டதாரி ஆசிரியர் தேவை எனக்கூறி அவர் மேற்கொண்ட முயற்சியை மறக்கமுடியாது. 'இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து' என்பதை

தொடர்ச்சி 23ஆம் பக்கம்



# காலத்தோடு வளரும் கணினிகள் -14

அன்பான வாசகர்களே!

காலத்தோடு வளரும் கணினி உலகில் உள்ள கணினிகளை அவற்றின் பருமனை வைத்துக்கொண்டு பின்வருமாறு வகைப் படுத்திக்கொள்ளலாம். பருமனில் பெரிதான முன்னைய நாட்களில் வெளிவந்த கணினி களாகிய முதன்மைச் சட்டக் கணினிகள் (Mainframe computers) பற்றிய பல்வேறு தகவல்களை ஏற்கனவே உரையாடியுள் ளோம். மிகவும் சக்தி வாய்ந்த முதன்மைச் சட்டக் கணினிகளை மீக்கணினிகள் (Super computers) என்றும் அழைப்போம். இதனை யடுத்து வெளிவந்த Mini Computers முதன்மைச் சட்டக் கணினிகளை விட அளவில் சிறியதாக ஒரு குளிர்சாதனப் பெட்டியின் அளவில் இருந்தன. உலகில் யாருமே கணினியைப் பயன்படுத்தலாம் என்ற நிலை உருவாகுவதற்குக் காரணமாக நுகர்வோர் கணினிகள் (Personal comput-ers) காணப்பட்டன. இதனைத் தனியாள் கணினிகள் என்றும் அழைக்கின்றார்கள். இவற்றின் பாகங்களைப் பற்றிக் கடந்த சில இதழ்களில் விரிவாக ஆராய்ந்தோம்.

இந்தக் காலத்தில் மடிக்கணினிகள் (Lap Top Computers), ஏட்டுக் கணினிகள் (Notebook Computers) என்பவை மிகவும் பிரபல்யமாக உள்ளன. இடத்திற்கு இடம் கொண்டு செல்லத்தக்க வசதி கொண்டதாக அமைக்கப்பட்ட நுகர்வோர் கணினியை பொதுவாக மடிக்கணினி எனச் சொல்லப்படு கின்றது. ஒரு மடிக்கணினியில் திரையகம் (Display), விசைப்பலகை (Keyboard), குறியழுத்திக்குப் (Mouse) பதிலாக ரச்பாட் (Touch Pad), ஒலி பெருக்கி (Speakers) என எல்லாக் கருவிகளும் உள்ளடக்கப் பட்டிருக்கும். மேலும் ஒளிவாங்கிகளும் (Camera) அநேகமான மடிக்கணினிகளில் பொருத்தப்பட்டிருக்கும். மடிக்கணினி இயங்குவதற்குத் தேவையான மின்சாரம் A/C Adapter மூலம் சாதாரணமான 110 - 230 Volts இல் இருந்து பெறப்பட்டு D/C ஆக மாற்றீடு செய்யப்பட்டு வழங்கப்படு கின்றது. மடிக்கணினிகளுக்குத் தேவையான D/C Voltage இன் அளவு 7.2 வோல்ற்ஸ்க்கும் 24 வோல்ற்ஸ்க்கும் இடையில் கணினிகளைப் பொறுத்து வேறுபடுகின்றது. நுகர்வோர் கணினிகளில் காணப்படும் Power Supply Unit மூலம் A/C voltage D/C க்கு மாற்றப்படுகின்றது.

ஒரு மடிக்கணினியில் நிச்சயமாக வெளியில் இருந்து மின்சாரம் இன்றிச் சில மணித்தியாலங்களுக்கு இயங்கத்தக்கதாக மின்கலம் (Rechargeable Battery) இருக்கும். நுகர்வோர் கணினிகளில் உள்ளே காணப்படும் கைக்கடிகாரங்களில் காணப்படு வது போன்ற சிறிய மின்கலம் மின்துண்டிப்பு ஏற்படும் பொழுது கணினியில் உள்ள BIOS Chip எனப்படும் நினைவகத்தில் சேமிக்கப் பட்டுள்ள திகதி, நேரம் போன்ற பதிவுகளைப் பாதுகாப்பதற்கு உதவும். இதனை சிமொஸ் கலம் (CMOS Battery) என்றும் அழைக்கப்படுகின்றது. சில கணினிகளில் உள்ள கடிகாரம் (clock) சரியாகச் செயற்படாமல் இருப்பதற்குரிய காரணம் இந்தக் கலம் செயலற்றுப்




போவதேயாகும். மடிக்கணினியின் உள்ளேயும் சிமொஸ் கலம் ஒன்று இருக்கும். பழுதடைந்த சிமொஸ் கலத்தினால் கணினியில் காட்டப்படும் நேரம், திகதி பிழையாகக் காட்டப்படு வதோடு சேமிப்பகத்தின் விபரங்களை அறிய முடியாமை, சில குழப்பமான தகவல்கள் போன்ற பல பிரச்சினைகள் உருவாகும். இவ்வாறான நிலையில் சிமொஸ் கலத்தினை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மடிக்கணினியின் உள்ளே ஒரு கணினியில் இருப்பது போன்றே எல்லாப் பாகங்களும் இருந்தாலும் இவை மிகச்சிறிய அளவி னதாக இருப்பதால் பழுது பார்ப்பது கடின-மாகின்றது. ஆனாலும் திரையகங்களை மாற்றுவது உட்பட பலவகையான திருத்த வேலைகளைச் செய்யக் கூடியதாகவே இருக்கின்றது. ஒரு கணினியில் உள்ள மின்னணுத் தட்டினை (Motherboard) மாற்றீடு செய்ய வேண்டும் என்ற நிலை வருகின்ற பொழுது அதற்குப் பதிலாக ஒரு புதிய கணினியை வாங்கிக் கொள்வதே பொருத்தமான செயற்பாடாகும். ஏட்டுக் கணினிகளின் (Note Book Computers) தடிப்பு மடிக்கணினிகளை (Lap Top Computers) விடக் குறைவானதாக இருக்கும். சில நேரங்களில் மடிக்கணினி கள், ஏட்டுக் கணினிகள் இரண்டையுமே மடிக்கணினிகள் என்றும் அழைக்கின்றோம். உண்மையில் ஏட்டுக்கணினிகளுக்கு முன்பு வந்தவையே மடிக்கணினிகள் ஆகும். மேலும் நெற்புக் கணினிகள் (Netbook Computers) என்ற பெயருடன் ஏட்டுக் கணினிகளை விட அளவில் சிறியதாகவும் ஒரு வகைக் கணினிகள் பாவனையில் தற்போது உள்ளன. இவை விலைகளில் குறைந்தும், குறைவான வலுக் கொண்டவை யாகவும் உள்ளன. ஏற்கனவே இந்தக் கட்டுரையில் முன்னைய இதழ்களில் ரப்லெற் (Tablet) வகையான கணினிகளைப் பற்றி உரையாடியிருந்தேன். மடிக்கணினிக்கு பெரிய திரையகங்களையும், வழமையான குறியழுத்திகளையும் (Mouse) இணைத்துக் கொள்வதன் மூலம் ஒரு சாதாரண நுகர்வோர் கணினியாக பாவிப்போரும் உள்ளனர். அண்மைக் காலங்களில் மடிக்கணினிகளின் பாவனை மிகவும் வலுவாக அதிகரித்திருப்பதைக் காணலாம். ஏனைய கணினிகளைப் போலவே மடிக்கணினிகளும் IBM, Apple என்ற இரண்டு குடும்பக் கணினிகளாக உள்ளன. IBM குடும்பத்தில் Sony, Toshiba, Compaq, Dell, Gateway, Acer, Asus, HP, Samsung, IBM என்ற பல பெயர்களில் மடிக்கணினிகள் வெளிவருகின்றன. ஆனால் Apple குடும்பத்தில் எல்லாக் கணினிகளும் அப்பிள் நிறுவனத்தால் மட்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு மடிக்கணினியை வாங்கும் பொழுது கவனிக்க வேண்டிய விடயங்கள் நுகர்வோர் கணினியைப் போன்றே அதிகமாக இருந்தாலும் சில விடயங்களில் சிறிது வேறுபடுகின்றது எனலாம். மடிக்கணினி களில் உள்ள மின் கலம் எவ்வளவு நேரத்திற்கு மின்சாரத்தை வழங்கக் கூடியவை என்பது முக்கியமான விடயமாகும். இதைப் பொறுத்துக் கணினி களின் விலையும் மாறுபடுகின்றது. அடுத்ததாக மடிக்கணினிகளில் பொருத்தப் பட்டுள்ள திரையகத்தின் அளவு, தெளிவு போன்ற விடயங்களும் முக்கியமானவை. ஏனைய கணினிகளைப் போன்று மையச்செயற்பாட்டகத்தின் வேகம், தன்மை, நினைவகத்தின் அளவு, இரண்டாந்தரச் சேமிப்பகங்களின் அளவு என்பவற்றையும் கவனிக்கத்தான் வேண்டும். இவற்றை விட ஒவ்வொரு நிறுவனத்தினதும் தயாரிப்புக்களில் வெவ்வேறு குறைபாடுகள் இருப்பதுண்டு. இவற்றை பாவனையாளர்கள் மூலம் நன்கு அறிந்து கொண்டு தெரிவு செய்வது நன்று.

கணினிச் சந்தையில் உள்ள ஒரு மடிக்கணினியின் தரவுகளைக் கவனிப்போம். HP Pavilion M6 15.6" Laptop - Silver (Intel Core i7-3632QM Processor, 1TB Hard disk drive, 8GB RAM Operating system Windows 8. Wi-Fi, Ethernet, and Bluetooth connectivity. இந்த மடிக் கணினியின் விலை 850 கனேடியன் டொலராக உள்ளது.

Toshiba Satellite L870D 17.3" Laptop - Silver (AMD A6-4400M / 640GB HDD / 8GB RAM / Windows 8) போன்ற தொழில் நுட்பத்தரவுகளைக் கொண்ட மடிக்கணினியின் விலை 500 கனேடியன் டொலராக உள்ளது. இரண்டிலும் காணப்படும் மையச்செயற்பாட்டகத்திலும் வேறுபாடு உள்ளது. இந்த வேறுபாடுகளை



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# மனப்புற்று நோய் ஓடும் நீர் உறைவதில்லை 160

மனிதன் ஒரு சமூகப் பிராணி என்பதும் தனித்துவாழ்வது என்பது நவீன யுகத்தில் இயலாது என்பதும் நாம் ஏற்கனவே அறிந்துள்ள விடயம்தான். தனித்து வாழுதல் என்பது மற்றவர்களில் இருந்து முற்று முழுதாக விலகி வாழுதல் எனப்பொருள் கொள்ளப்படுவதும் உண்டு. அதாவது கூட்டுவாழ்க்கையல்லாத வாழ்க்கை எனவும் கூறப்படுவதும் உண்டு. ஆனால் சமூகப் பிராணி எனும்போது ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடன் இணைந்து செயற்படுவதை யும் மற்றவர்களில் தங்கி வாழ வேண்டியிருப்பதும் அடிப்படையாகின்றது. இங்கு தங்கி வாழ்தல் என்பது பொருளாதார ரீதியாகத் தங்கியிருத்தல் என்ற பொருள்படக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பலரது ஒத்துழைப்பு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவசியமாகின்றது.

மனிதனுக்குக் கூட்டுவாழ்க்கையும், கூட்டுழைப்பும் அவசியமாக இருப்பது போல் விலங்குகளுக்கு இருப்பதில்லை. கூட்டு வாழ்க்கை விலங்கினங்களுக்குப் பொதுப் படையாக இருப்பினும் கூட்டுழைப்பு அவற்றிற்கு அவசியமாக இருப்பதில்லை. மனிதன் ஒருவன் தனது உணவுக்கு விவசாயிலிருந்து விற்பனையாளர் வரையான உதவிகள் தேவைப்படுவதுபோல் விலங்கு ஒன்றுக்குத் தேவைப்படுவதில்லை. இதனால் விலங்குகள் தனிமையும், தன்னிறைவும் கொண்டவையாக வாழ இயற்கை அதன் முழுப்பங்கையும் வழங்கு கின்றது. இதே இயற்கை நமக்கும் தனது முழு ஒத்துழைப்பைத் தருகின்ற போதிலும் நாம் நிறைவாக வாழ முடிவதில்லை. இதற்குப் பலகாரணங்கள் அடிப்படையாக இருப்பினும் ஒரு சில முக்கியமானவற்றை இங்கு நாம் பகிர்ந்து கொள்வோம்.

இயற்கையின் பிரதானமான பங்களிப்புகள், அவற்றின் விளைவுகள் என்பன பற்றி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் நாம் கற்பனையில் கூட எதிர்பாராத அளவுக்கு விளக்கங்களைத் தருகின்றன. மிக இலகுவாக நம்மால் உணரப்பட்ட பல விடயங்கள் இப்போது பலதரப்பட்ட ஆராய்ச்சிகளுக்குட்படுவதால் பல்வேறுபட்ட விளக்கங்களைத் தருவதும் அதன் மூலம் எந்தக்கருத்து சரியானது என்பதைத் தீர்மானிப்பதில் பல தடுமாற்றங்களும் ஏற்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட உணவு சம்பந்தமாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட நோய் சம்பந்தமாகவோ ஆய்வுகளின் ஆழம் அதிகமாக இருப்பதால் நாம் பலவழிகளில் தடுமாற்றங்களுக்கு உள்ளாகி விடுகிறோம். இவ்வாறான எதிர்பாராத அறிவியல் ஆராய்ச்சி வளர்ச்சிகள் தகவல் சார்ந்த மூலங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதாக அமைந்திருப்பதும் தகவல்களை இலகுவா கப் பெறக்கூடியதாக இருப்பதும் இவ்வாறான தடுமாற்றங்களுக்கு விடைகாண முடியாமல் நீண்டு கொண்டே செல்கின்றன.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master

விஞ்ஞான தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சி அறிவியல் துறையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதும் அந்த மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிய அழுத்தம் நம்மீது திணிக்கப்படுவதும் அறிவியல் சார்ந்த அவசியமானதே. நாம் வாழும் சூழல் மாற்றத்துக்கு உள்ளாகும் போதும் அந்த மாற்றங்கள் எங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பால் இடம்பெறும் போதும் நாமும் அந்தமாற்றத்திற்கு துணை போக வேண்டியதாகின்றது. அல்லது மாற்றத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகின்றது. இந்த மாற்றத்தை விரும்பியோ அல்லது விரும்பா மலோ நாம் ஏற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் நாம் ஒதுக்கப்படுவதும் ஓரங் கட்டப்படுவதும் தவிர்க்க முடியாத நிகழ்வே.

மாற்றத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு ஒரு மனிதனது பலவீனத்தை இரண்டு வகைப்படுத்தலாம். முதலாவது நமது கட்டுபாட்டுக்கப்பாற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்றவாறு நம்மை மாற்ற மறுக்கும் பலவீனம். உதாரணமாக நாம் வாழும் சூழல், காலநிலை என்பவற்றுக்கேற்ப நமது உணவுமுறை, உடை என்பவற்றை மாற்றி யமைத்து நோய்களில் இருந்து தப்பித்துக் கொள்ளத்தவறுவதைக் குறிப்பிடலாம். உண்ணும் உணவும் உடுக்கும் உடையும் உண்மையில் பொருத்தம் இல்லை என்பதை நன்கு உணர்ந்தும் மாற்றுவதை மறுப்பது. இரண்டாவது பலவீனம் நமது கட்டுப்பாட்டுக்குட்பட்ட நம்மால் மாற்றக் கூடியவற்றை மாற்றாமல் இருப்பது அல்லது மாற்றமறுப்பதான பலவீனம். இந்த இரண்டு வகையான பலவீனத்திற்கும் காரணம் உண்மையில் அறியாமை அல்ல. அசட்டுத்தனம் தான். இப்போது நமது கட்டுபாட்டுகுட்பட்ட நம்மால் மாற்றப்படக் கூடியவற்றைக் கவனிப்போம். நாம் ஒவ்வொருவரும் எந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பது முக்கியமாக மூன்று காரணிகளில் தங்கியுள்ளது. இதில் மிக முக்கியமானது நமது பேசும் வார்த்தைகள். இதனால்தான் நாம் ஒவ்வொருவரும் எந்த நிலையில் வாழ்கிறோம் என்பது எமது நாளாந்த வாழ்வில் நாம் வழமையாக பயன்படுத்தும் வார்த்தைகளால் தீர்மானிக்கப்படுகின்றது. நமது வார்த்தைகள் நமது சிந்தனைகளை நெறிப்படுத்துகின்றன. அவ்வாறு நெறிப்படுத் தும் போது அந்தச் சிந்தனை சார்ந்த செயற்பாடுகள் நமது வாழ்வில் சாதகமான அல்லது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே சொல், சிந்தனை, செயல் என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தப்பட்டு நமது வாழ்வியல் நிலை நிர்ணயிக்கப்படுகின்றது. இங்கு ஒரு முக்கியமான விடயத்தைக் கவனிப்பது அவசியமாகும். நமது தற்போதைய வாழ் நிலைக்கு அது சாதகமாயினும் சரி, பாதகமாயினும் சரி நம்மால் மேற்கொள்ளப் படும் இந்த மூன்று நடவடிக்கைகளே முழுக்காரணம் என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். அதாவது பிறர் அல்லது புறக்காரணிகள் நமது இன்ப துன்பங்களுக்கு அடிப்படையாக அமையாமல் நமது சொல், சிந்தனை, செயல் என்பனவே காரணிகளாகின்றன.

நமது கட்டுபாட்டுக்குள் இருப்பவற்றில் நமது மனோபாவங்களையும் உள்ளடக்க வேண்டும். நமது மனோபாவத்தை நமக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கக் கூடிய வல்லமையைப் நாம் பெற்றுக்கொள்வோம். இங்கு மிக முக்கியமான விடயம் என்ன வெனில் நமது மனோபாவம் ஒன்று நம்மையும், மற்றவர்களையும் துன்புறுத்துவ தாக இருக்குமாயின் மிக இலகுவாக அந்த மனோபாவத்தை சொல், சிந்தனை, செயல் என்பவற்றின் மூலம் மாற்றியமைக்கலாம். இந்த வல்லமை நம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் மிகக்குறுகிய எண்ணிக்கை உடையவர்களே பயன்படுத்து கிறார்கள். இதனால்தான் நாம் அறிந்த சிலர் நாமே அதிசயிக்கத்தக்க வகையில் மாற்றம் அடைகிறார்கள். முன்னொரு காலத்தில் அதிக கோபம் கொண்டவராக இருந்த ஒருவர் இப்போது மிகவும் சாதுவானவராக இருப்பது போல் பலர் தங்களது மனோபாவ மாற்றங்கள் மூலம் இந்த வலிமையை நிரூபித்துள்ளார்கள்.

நாம் ஒவ்வொருவரும் நமது மனோபாவங்களை மாற்றியமைப்பதன் மூலம் சிறப்புமிக்க ஒரு வாழ்க்கையை வாழலாம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இருப்பினும் அதிபெரும் பான்மையானவர்கள் இந்த நிலையை அடையமுடிவதில்லை. இவ்வாறு தமக்குள்ள வலிமையை பயன்படுத்தித் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த முடியாமைக்குப் பல காரணிகள் இருப்பினும் ஒருவரது நேர்த்தியற்ற எதிர்மறையான மனோபாவம் அதிமுக்கியமான பங்கை வகிக்கின்றது. மனோபாவங்கள் மாற்றப்படக் கூடியவையாக இருப்பினும் அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான சிறிய முனைப்பைக்கூட முன்னெடுப்பதற்குச் சில எதிர்மறையான குண இயல்புகள் சந்தர்ப்பம் வழங்குவதில்லை. இதனால் தான் எதிர் மறையான குண இயல்புகளால் பாதிக்கப் பட்டவர்கள் எப்போதும் இருட்டுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறனர். இவ்வாறு இருட்டுக்குள் வாழ்பவர்களால் எதையும் வேறுபடுத்திப் பார்க்கமுடியாமல் போய் விடுகின்றது. அதாவது ஒரு இருட்டறைக் குள் இருக்கின்ற அத்தனை பொருட்களும் உருவத்தால் வேறுபடுகின்றனவேயன்றி அவற்றின் உண்மையான நிறம், இயல்பு இருட்டினால் மறைக்கப்பட்டுவிடுகின்றது. இதனால் அப்பொருட்களின் உண்மையான அழகு மறைக்கப்பட்டு விடுகிறது.

இருட்டு எவ்வாறு ஒன்றின் அழகை மறைத்துவிடுகிறதோ அதேபோன்று மன இருட்டும் நம்மிடம் உள்ள அழகிய, சிறந்த உயர்வான குணங்களையும் மறைத்து விடுகின்றது. நமது உள்ளத்தின் ஒளியைப் படிப்படியாக மங்கவைப்பதிலும் இருட்டின் தாக்கத்தைக் கடுமையாக்குவதிலும் காமம், கோபம், பொறாமை, சுயஒழுக்கம் இன்மை, களவு, பொய் எனப்பல காரணிகள் செல்வாக்கைச் செலுத்துகின்றன. இவ்வாறான நேர்த்தியற்ற குண இயல்புகள் நம் எல்லோரிடமும் இருப்பினும் நமது மாற்றியமைக்கும் வல்லமையால் மீண்டும் ஒளியைப் பெருக்க வாய்ப்பு உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால் ஒரே ஒருகுண இயல்பானது அதாவது நேர்த்தியற்ற குணஇயல்பானது அதனால் பீடிக்கப்பட்டிருப்பவரை பீடித்திருப்பதாக அறியாதவண்ணம் பீடித்திருக்கும். அந்தக் குணஇயல்புதான் மனப்புற்றுநோய்.

மனப்புற்றுநோய் என்றவுடன் இப்படியும் ஒரு நோயா என நீங்கள் ஆச்சரியப்படுவது எனக்குப் புரிகிறது. இங்கு புற்றுநோய் எனக்குறிப்பிடுவதற்கான காரணம் இந்த நோயின் ஆரம்பகால வளர்ச்சியானது இனங்காப்படுவதில்லை. அதுமட்டுமன்றி புற்றுநோய் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்படும் போது அது ஏற்கனவே உயிர் ஆபத்துக்கான எல்லையை நிர்ணயித்து விடுவதுடன் உயில் எழுதுவதற்கான குறுகிய வாழ்நாளை மட்டும் கொடுக்கின்றது. அதாவது புற்றுநோய் கண்டறியப்பட்டதும் வாழ்காலம் வரையறுக்கப்பட்டுவிடுகிறது. இது உடல் புற்றுநோய்க்கான விளக்கமாக இருப்பது போல் மனப்புற்று நோய்க்கும் இதுவே விதியாகின்றது.

**KG Master**
-www.kgmaster.com
- www.facebook.com
- kgmaster.yourlifecoach

இப்போது இந்த மனப்புற்றுநோய் எது என்பதையும் பார்ப்போம். மற்றவர்களது நலனை முற்றாகப் புறக்கணிக்கும் சுயநலனும், மனத்தின் அழுக்காறு எனப்படும் பொறாமையும் ஒன்று சேர்வதன் மூலம் உருவாகின்ற ஒரு கொடிய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219



# நீரிழிவும் அதற்கான யோகாவும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## *Yoga for diabetes*

**இளம் வயது நீரிழிவும் மண வாழ்க்கையும்**

இளம் பருவத்தில் ஏற்படும் நீரிழிவு நோய் பாதிப்பினை தகுந்த முறையில் கட்டுப்படுத்தி வைத்திருப்பதால் வாழ்க்கை பாதிப்படைவதில்லை. உடல் ஆரோக்கியம், அழகு, தாம்பத்ய வாழ்க்கை எல்லாமே நன்றாக அமைகின்றன. இளம் வயதில் ஆணுக்கோ, பெண்ணுக்கோ நீரிழிவு இருக்கிறது என்பதற்காக அவர்கள் குடும்ப வாழ்க்கையை மறுத்தல் நியாயமற்றது.



**நீரிழிவு உடலுறவைப் பாதிக்குமா?**


ஆண்களுக்கு உடலுறவில் இயலாமை ஏற்படவும், ஆண்மை குறையவும் நீரிழிவு காரணமாக இருக்கிறது. பெண்களுக்கும் ஓரளவு இத்தகைய சிக்கல்கள் ஏற்படக்கூடும். ஆனால் இது அனைவருக்கும் ஏற்படுவதில்லை. இதற்கு யோகா சிகிச்சை மூலம் இத்தகைய குறைகளைத் தீர்க்க முடியும்.

**நீரிழிவு நோயாளிகளுக்கு சில யோசனைகள்**

குடும்பத்தில் பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருந்தால் பிள்ளைகள் 15வயது முதல் ஆண்டுக்கு ஒரு தடவை பரிசோதனை செய்து கொள்வது அவசியம் உணவு அருந்தியபின் ஒன்றரை மணிநேரம் கழித்து இரத்தத்தில் சர்க்கரையின் அளவை சோதிப்பது வழக்கமாகும். நோய்க்குரிய பாதிப்பினை ஆரம்ப நிலையில் கண்டறிந்தால் அதற்குரிய யோகாசனம் பயிற்சிகளை இடையிடையே மேற்கொண்டு வந்தால் இதன் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுபடலாம்.

பொருந்தமான ஆசனங்கள்


1. விபரீத ஹரணி - 5 நிமிடங்கள்
2. சலபாசனம் - 2 நிமிடங்கள்
3. தனுராசனம் - 2 நிமிடங்கள்
4. பட்ஸிமொத்தாசனம் - 3 நிமிடங்கள்
5 சவாசனம் - 2 நிமிடங்கள்



இவற்றுடன் உணவுப் பழக்கத்திலும் சில மாறுதல்களைக் கடைப்பிடிப்பது இன்றியமையாதது. ஆரம்ப நிலையிலுள் நோயாளிகள் எந்தவிதமான மருந்து மாத்திரைகளை உட்கொள்ளாமல் யோகா பயிற்சியின் மூலம் வாழ்நாள் முழுவதும் நீரிழிவின் தாக்கம் எதுவுமின்றி வாழமுடியும். மேலே குறிப்பிட்ட ஆசனங்களை ஆரம்பத்தில் ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் முறைப்படி பழகுவது அவசியம். சில நாட்களிலேயே இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கட்டுப்பாட்டிற்கு வரும் ஆனால் பல காலமாக மாத்திரைகளை உபயோகிப்பவர்கள் யோகா செய்யத் தொடங்கியதும் அவற்றை நிறுத்தினால் அது ஆபத்தில் தான் முடியும். அதனை மருத்துவருடன் கலந்து ஆலோசித்து படிப்படியாக மாத்திரைகளைக் குறைத்து வருவது சிறந்தது.

**பிராணாயாமம் தியானம்** (Breathing Meditation)

பிராணாயாமம் என்னும் மூச்சுப் பயிற்சிமுறைகள் மூலம் நமது இராஜ உறுப்புக்கள், நரம்பு மண்டலங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தி அவற்றைச் சீராக இயங்க வைக்க முடிகிறது. அதற்கமைய நமது உடலுக்கு தேவையான சர்க்கரை சத்தை சுரக்கும் கணையம் (Pancreas) சுரப்பியை செம்மைப்படுத்தி நீரிழிவின் தாக்கத்தை கட்டுப்படுத்தி



வைத்திருக்கலாம். இதற்குரிய பயிற்சி முறைகள்

1. நாடிசுத்தி பிராணாயாமம்
2. கபாலபதி மூச்சுப்பயிற்சி

இவை இரண்டையும் காலையிலும் மாலையிலும் 5 முதல் 10 நிமிடங்கள் செய்து வந்தால் போதும். இதனால் இரத்தம் சுத்தமாகும். அதிலுள்ள சர்க்கரையின் அளவு சம நிலையடை கின்றது. இந்த மூச்சுப்பயிற்சியை மனம் தளராது தொடர்ந்து செய்து வரும்போது ஒரு சில நாட்களிலே சிறந்த பலன் கிடைப்பதை உணர முடியும். அதுமட்டுமன்றி நீரிழிவு நோயாளிகளில் பெரும்பான்மையினருக்கு உயர் இரத்த அழுத்தமும் (High Blood Pressure) சேர்ந்தே காணப்படும் அல்லாது விடின் அதுவர வாய்ப்பு அதிகம். இதனை நாடி சுத்தி மூலம் சீர்செய்து கொள்ளலாம். இதன் போது உடலிலுள்ள கரியமில வாயு குறைவடைந்து பிராணவாயுவின் அளவு அதிகரித்து உடலுக்கும் மனதிற்கும் புத்துணர்ச்சியளிக்கிறது. இதனை முறைப்படி செய்யாது விட்டால் தீமைகளும் விளையக்கூடும்.

அடுத்து தினமும் குறைந்தது 5 நிமிடங்களாவது தியானப் பயிற்சி (Meditation) செய்வது வியக்கத்தக்க பலனைத் தரும். பொதுவாக நீரிழிவு நோயாளிகளுக்கு மனதில் கவலை, கோபம், மனஅழுத்தம் ஏற்படும்போது ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பதைக் காணலாம். ஆனால் தியானம் மனதை அமைதிப்படுத்த இரத்தத்திலுள்ள திசுக்களுக்கு (Cell) புத்துணர்ச்சி தருகிறது. இதனால் கணையம் தூண்டப்பட்டு கணைய நீர் (இன்சுலின்) சுரப்பு சமநிலையடைகிறது. நீரிழிவின் தாக்கம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட வழிமுறைகளை ஒரு குறிப்பிட்ட நேரமாவது தினமும் கடைப்பிடித்து வந்தால் நீரிழிவு என்றும் கர்ம நோயை வாழ்க்கை முழுவதும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'
அது முன்பு இப்போது
'சொகுசற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# மனப்புற்று...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

குணஇயல்பான 'நம்பிக்கைத் துரோகம்' தான் அந்த மனப்புற்றுநோய். இங்கே மிகவும் முக்கியமான விளக்கத்தை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். அதாவது சுயநலனும் பொறாமையும் ஒன்றிணையும் போது இந்தத் துரோக மனப்பான்மை உருவாகின்றதேயன்றி உருவாக்கப்படுவ தில்லை. இதனால்தான் இந்தக் கொடிய குணம், அசிங்கமான குணம் என்ன வேகத்தில் எந்த அளவில் வளர்ந்து வருகின்றது என்பதை அதன் உரிமையாளனாகிய துரோகியால் கூட உணர முடிவதில்லை. ஆனால் ஒரு கட்டத்தில் அது எல்லை மீறி வெளிப்படும்போது அல்லது மற்றவரால் உணரப்படும்போது அதிகளவு பாதிப்பை அதனால் பாதிப்படைபவருக்கு உருவாக்கி விடுகிறது. அதுமட்டுமன்றி அந்தத் துரோகிக்கும் தான் எந்த அளவு தூரம் பாதிப்பை உண்டாக்கி விட்டேன் என்பதும் வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்தத் துரோக மனப்பாங்கு அதன் உரிமையாளரால் ஒரு நிலைவரை மிகச் சாதுர்யமாகக் கையாளப்படுவதையும் நாம் கவனித்தல் வேண்டும். அதாவது இந்தச் சுயநலமும் பொறாமையும் பொதுநலமும் பொறுமையும் எனும் போர்வையால் மறைக்கப்பட்டிருப்பதை பாதிப்புள்ளாகுபவர் குறிப்பிட்ட நிலைவரை இனங்கண்டு கொள்வதில்லை. ஆனால் அது உணரப்படும்போது பெரும்பாலானவர்களால் உடனடியாக அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஏனெனில் நம்பிக்கைத் துரோகம் என்பது நேருக்கு நேர் மோதுவதைத் தவிர்த்து நண்பன் அல்லது நலன் விரும்பி என்ற பாணியில் உறவை அல்லது நட்பை நீடித்துக் கொள்வதாகும். இந்தவகையான உறவு அல்லது நட்புக்காலம் நீண்டு போகப்போக பறிக்கப்படும் குழியின் ஆழமும் அதிகமாக இருக்கும். ஆனால் அந்தக்குழியுள் விழுபவர் துரோகம் இழைத்தவர் மட்டுமே. ஏனெனில் மனித இயல்பிலிருந்து மாறும் ஒருவரது சுயதண்டனை என்பது தவிர்க்கமுடியாததும் மற்றவர்களால் அளவிடமுடியாதது மாகும்.

ஆம் வாசகர்களே!

மனப்புற்றுநோயாகிய நம்பிக்கைத் துரோகம் என்பது மனித விலங்கைத்தவிர வேறு எந்த விலங்கினத்திலும் இருப்பதில்லை. இந்த மன இயல்பு என்பது மிகவும் அசிங்கமானதும் மானிடத்துக்குச் சாபக்கேடானதுமான இயல்பு. இதன் விளைவு இதை விதைக்கின்ற ஒவ்வொருவரையும் அடியோடு அறுத்துவிடுவது தான். எனவே மனிதன், மனிதத்துவம் என்பது இந்த மனப்புற்றுநோயற்ற உறவும் நட்பும்தான் என்பதை நாம் இதயத்தால் ஏற்பதும் நடைமுறைப்படுத்துவதும் ஆகும்.

**மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா**

**கணித, பொதுஅறிவுப் போட்டி - 2013**

இப்போட்டியில் தரம் 1 முதல் 12 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். வெற்றி பெறுவோருக்கு தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுடன்,

**விஷேட பரிசில்களும் வழங்கப்படும்**

பதிவுக்கட்டணமாக விண்ணப்பத்தாரருக்கு 25 டாலர்களும், மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பத்தாரர்கள் உள்ள குடும்பம் ஒன்றிற்கு 60 டொலர்களும் அறவிடப்படும்

பதிவுகளுக்கு: இணையத்தள இணைப்பு: http://mahajanan.org/contest2011_News.htm

மேலதிக விபரங்களுக்கு, அழையுங்கள்

**416.705.1493 / 416.451.8427 / 416 458 1775**

# றொறன்ரோ மாநகரில் பேராசிரியர் சேவியர் எஸ். தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவும் ஆராய்ச்சி மகாநாடும்

பாரதியார் கண்ட கனவாகிய 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்பதனைச் செயற்படுத்திய செயல் வீரனும், உலகெல்லாம் தமிழ்த் தூதனாய் சென்று தமிழை ஏனைய வேற்று மொழி நாடுகளில் எமது செந்தமிழின் மாட்சிமையைப் பாரெங்கும் அறியச் செய்தவர் பேராசிரியர் தனிநாயகம் அடிகள் ஆவார். உலகத் தமிராய்ச்சி மகாநாடு என்னும் சிந்தனை அடிகளாரது மனதிலேயே முதன் முதல் தோன்றியது. அத்தகைய கருத்தினை முதலில் 1964ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற கீழ்த்திசை மகாநாட்டில் கலந்து கொண்ட தமிழறிஞர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களிடையே வெளியிட்டு பலவேறு அறிஞர்களின் உதவியோடு 'உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினை' நிறுவி அவர் உயிரோடு இருக்கும்வரை நான்கு மகாநாடுகளை நடத்தியவர். இதன் முதல் மகாநாடு கோலாலம்பூரிலும், இரண்டாவது மகாநாடு சென்னையிலும், மூன்றாவது மகாநாடு பிரான்ஸ் தலைநகர் பரிசிலும், நான்காவது மகாநாடு யாழ்ப்பாணத்திலும் நடத்திப் பெருமை கொண்டவர். இம்மகாநாடுகளில் பல்வேறு நாடுகளில் இருந்து பல்வேறு மொழி பேசும் பல்வேறு அறிஞர்கள் பங்குபற்றி தமிழாய்ந்தார்கள்.

பேராசிரியர் அவர்கள் 1980 செப்ரம்பர் 1ஆம் திகதியன்று இறைபதம் எய்தினார். அதன் பின்பும் இயங்கிய உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் தொடர்ந்து மேலும் நான்கு தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை நடத்தியது. 5வது மகாநாடு மதுரையிலும், 6வது மகாநாடு கோலாலம்பூரிலும், 7வது மகாநாடு மொறிசியஸ் நாட்டிலும் 8வது மகாநாடு தஞ்சாவூரிலும் 1995இல் நடைபெற்றன. இதன் பின் பொறுப்பில் இருந்தவர்கள் தொடர்ந்து தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளை நடத்தாது விட்டமை வருந்தத்தக்கதாகும். இந்த வருடம் முழுவதும் உலகின் பல நாடுகளில் அடிகளாரின் பிறந்த நாளை அடியொற்றி தனி நாயகம் அடிகளாரின் நூற்றாண்டு கொண்டாடுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்நூறாண்டுக் கொண்டாட்டத்துடன், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்கு புத்துயிரூட்டி அதனை இயங்கச் செய்வது உலகளாவிய தமிழறிஞர்களதும் தமிழ்நாட்டினதும் தலையாய கடமையாகும். இதற்குப் புலம்பெயர் தமிழறிஞர்களின் பங்களிப்பும் நிச்சியமாக இருக்கும் என நம்பலாம். ஏற்கெனவே நடைபெற்ற மகாநாடுகளின் தாக்கமும் தமிழைச் செம்மொழியாக்கவும் உதவியதென்பதையும் ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும்.




இந்த ஆண்டில் உலகெங்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு விழாவை கனடாவிலும் செப்ரம்பர் மாதம் 2013 இல் நடத்துவதற்குரிய ஒழுங்குகள் நடைபெற்றுவருகின்றன. இதில் தமிழாய்வு மகாநாடு, பேச்சுப் போட்டிகள், கலை பண்பாட்டு நிகழ்வுகள், அடிகளார் வெளியிட்ட 'தமிழ் கலாசாரம்' இதழ்களில் இடம்பெற்ற அடிகளாரின் ஆய்வுக் கட்டுரைகளை மறுபதிப்புச் செய்தல், மகாநாட்டு நினைவு மலர் வெளியிடுதல் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன என்பதைத் தமிழ் ஆர்வலர்களுக்கும் தமிழ்ப் பற்றாளர்களுக்கும் தாழ்மையுடன் அறியத்தருகின்றோம். இந்நிகழ்வினைச் சிறப்புற நடத்துவதற்கு நிதியுதவி, தொண்டுப்பணி போன்றவற்றினை வழங்கி இத்தமிழ்ப் பேரறிஞரின் நூற்றாண்டு நிகழ்வுகளில் எல்லோரும் பங்கெடுத்து எமதுயிரான தமிழை உலகெங்கும் பரவவைத்த அடிகளாருக்கு நன்றி செலுத்து முகமாக எமது பங்களிப்பினைச் செலுத்துவோமாக.

விபரங்கள் அறிய மின்னஞ்சல்: sthaninayakan100@live.com - தொலைபேசி 647.856.6326

பேராசிரியர் சேவியர். எஸ். தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழா இணைப்புக் குழு சார்பில் முருகேசு பாக்கியநாதன்

# மீண்டும் பாரதி பிறந்தால்



தமிழா ஒன்றுபடு
உலகத்
தமிழா ஒன்றுபடு
தமிழ் காக்க
இனம் காக்க ஒன்றுபடு

எட்டுக்கோடி தமிழர்
எட்டும் திசையெலாம்
நாற்று நட்டுவிட்டதுபோல்
சிதறியே வாழ்கின்றோம்

தமிழா ஒன்றுபடு
தமிழ் காக்க
இனம் காக்க
உலகத் தமிழா ஒன்றுபடு


தமிழ் எனும் மூன்றெழுத்தில்
இணைந்துள்ளோம்
ஆனால்
வலங்கை தொண்ணூற்றெட்டு
இடங்கை தொண்ணூற்றெட்டு
என்று
196
சாதிகளாக
எங்களை நாங்களே
பிரித்து வைத்தோம்
இன்றும்
பலவித கூறுகளாக்கியே வைத்துள்ளோம்

தமிழா ஒன்றுபடு
உலகத் தமிழா ஒன்றுபடு
தமிழ் காக்க
இனம் காக்க ஒன்றுபடு

நாடுகள் பிரித்தாலும்
நாகரிகம் கலந்தாலும்
தமிழ் என்ற பொதுமைக்குள்
தனித்தொரு இனமாகத்
தமிழா ஒன்றுபடு
தமிழ் காக்க
இனம் காக்க
உலகத்தமிழா ஒன்றுபடு

அந்தப் பகுதித் தமிழர்
இந்தப் பகுதித் தமிழர்
உயர்ந்த தமிழர்
தலித் தமிழர்
முதலிய
பாகுபாடு பேதங்கள் களைந்து

தமிழா ஒன்றுபடு
தமிழ் காக்க
இனம் காக்க
உலகத்
தமிழா ஒற்றுமைப்படு



முத்துராஜா

# காலத்தோடு...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

நன்கு கூர்ந்து அவதானிப்பது முக்கியமானது. எனவே மடிக்கணினிகளின் தொழில்நுட்பத் தரவுகளைப் பொறுத்து இவற்றின் விலைகளில் பாரிய வேறுபாடு உள்ளது. எமது தேவைக்கேற்ப பொருத்தமான மடிக் கணினியைத் தெரிவு செய்ய வேண்டும்.

என் அன்புக்குரிய வாசகர்களே!




இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்...

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

Accounting & Tax Services
• Book keeping • Preparation of monthly & year - end financial statements • Filing of annual corporate returns • Payroll
• Periodical HST & WSIB returns • Personal tex planning & preparation of returns • CRA audit representation




Guru: 647.400.8730 / Nithi: 416.219.4902
E-mail: accounting.taxservices@hotmail.com

# மூச்சுக்குழாய் நுரையீரல் நோய்

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

*BRONCHITIS*

நோய்களில் ஒன்றைத் தொட்டு ஏற்படும் வியாதியை உபத்திரவ வியாதி எனவும் கூறுவர். அதாவது முச்சுக்குழாய் மூலம் ஒருவருக்கு வியாதி ஏற்படும்போது நுரையீரல் தாக்கப்பட்டு பாதிப்பு அடையும் நிலை ஏற்படும். இப்படியான நிலையில் உள்ளவரைப் பார்த்தால் அவர் துன்பப்படுவதை நாம் நன்கு அறிய முடியும். அதாவது மார்பின் அசைவின் நிலையும் மூச்சு உள் இருந்து வெளிவிடும் போது ஏற்படும் மாற்ற நிலைகளையும் கவனிக்க வேண்டும். மார்பகத்தில் கையை வைத்துப் பார்த்தாலும் நுரையீரல் சளியினால் நிரப்பப்பட்டிருப்பதை ஓரளவு கண்டு கொள்ள முடியும். இருந்தும் தங்கள் வைத்தியரிடம் சென்று அதற்குரிய கருவி மூலம் இலகுவாக கண்டு சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும்.




மேலும் நுரையீரலில் அதிகமான நீர் தேங்கி இருக்கும்போது சத்தம் மாற்ற நிலையில் காணப்படும். இந்நிலையில் தங்கள் வைத்தியர் 'ஊடுருவி கதிர்படம்' எடுப்பித்து நோயை இலகுவில் கண்டு அதற்குரிய சிகிச்சைமுறைகளையும் கையாளுவார். எனவே எதற்கும் தாமதிக்காமல் முயற்சிக்க வேண்டும்.

நுரையீரலில் சளி அதிகரிக்கும் போது மூச்சை எடுப்பதற்கு பெரும் சிரமமாக இருக்கும். அத்துடன் இருதய வியாதி அல்லது சுவாசக்குழல்களில் தடைகள் இருந்தாலும் மூச்சு விடுவதற்கு அல்லது உள் இழுப்பதற்கு தடையாக இருக்கும். இவ்வேளையில் நோயாளி துன்பப்படுவதை நாம் அறியமுடியும். இதனால் இருதயம், நுரையீரல் செயல் இழப்பு ஏற்படலாம். இந்த நிலையில் இரத்தத்தில் கரியமலவாயு (carbon dioxide) அதிகம் சேர்ந்து விடும். இதனால் இரத்தம் சுத்திகரிப்புக்கு வேண்டிய பிராணவாயு (Oxygen) இல்லாததினால் மூச்சு இழப்பு நிகழலாம். அத்துடன் நமது மற்றைய உறுப்புகளும் செயல் இழந்து விடும்.


முக்கிய உறுப்பான மூளைக்கு பிராணவாயு செல்லாததினால் அல்லது இல்லாததினால் உறுப்புக்களின் செயல் இழப்பு ஏற்படலாம். இதனை நிவர்த்தி செய்ய தூய்மையான பிராணவாயு நுரையீரலுள் செல்ல வேண்டும். இதற்கு ஆழ்ந்த சுவாசநிலை உரியவருக்கு இருக்க வேண்டும்.

நல்ல மூச்சு இழுப்பு ஏற்படுவதற்கு நல்ல மூச்சுக்குழாய் தேவை. இந்த மூச்சுக் குழாயை கொடுப்பதுதான் செயற்கை சுவாசமாகும். இந்த செயற்கைச் சுவாசம் நுரையீரல்வரை செல்வதற்கு மின்சாரத் தோடு தொடர்புடைய மூச்சுக்குழாயை பொருத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதனால் இது உயிரைக் காக்கும் கருவியாக அமைகின்றது. இவை தகுந்த முறையில் வைத்தியசாலைகளில் உண்டு. இதில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் இருக்கின்றார்கள். இப்படியான நோய் உள்ளவர்கள் தாமதியாமல் வைத்திய சாலைக்கு சென்று சிகிச்சை பெறுவது நன்று. அவர்கள் நுரையீரலில் உள்ள சுவாசக்காற்றில் கரியமலவாயு எவ்வளவு உள்ளது என்பதை அடுத்தடுத்து பார்வையிட்டு மருந்துகளை வழங்கிக் கொண்டிருப்பர். நுரையீரலின் அழற்சி விலகும் போது செயற்கைச் சுவாசத்தை தவிர்த்துக் கொள்வார்கள். இவை அனைத்தையும் வைத்தியசாலை ஆய்வு கூடங்களில் உள்ளோர் பார்வையிட்டு தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**

D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
**Tel.: 647.707.4378**


mhc

# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
**HOMEOPATHIC PRACTITIONER**

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4





isha blog தமிழில்

இனி ஈஷாவை நீங்கள் இனிய தமிழில் இணையத்திலும் பின் தொடரலாம்!!

tamilblog.ishafoundation.org

ஈஷாவுடன் ஃபேஸ்புக்கில் இணைந்திட...

www.facebook.com/IshaFoundationTamil

உங்கள் தொடர்பிலுள்ள அனைவருடனும் இதனை பகிர்ந்திடுங்கள்...

இணையதளம்: tamil.ishafoundation.org



கொழும்பு இந்து கல்லூரிபழைய மாணவர் சங்கம் - கனேடிய அமெரிக்க பிரிவு

## வருடாந்த பொதுக்கூட்டம் 2013

திகதி: ஞாயிறு, பெப்ரவரி 10, 2013 நேரம்: 1 பிற்பகல்
இடம்: Holiday Inn Express, Toronto East, 50 Estate Drive, Scarborough, Ontario
(மார்க்ஹம்/401 சந்திப்புக்கு அருகாமையில்)

எல்லா பழைய மாணவர்களையும் பங்குபற்றுமாறு அழைக்கிறோம்.
மேலதிக விபரங்களுக்கு கீழ் காணும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளவும்

416.721.4646 (Ganga) 647.290.0540 (Venu)
416.919.9911 (Dr. Giri) 416.779.1210 (Pradeep)
416.991.9160 (Ravendra)

# INNSYS

CONNECT YOUR BUSINESS TO THE WORLD

Celebrating 5 years

*Join the celebrations from Jan 14 - Feb 28*

"Get the **HOTTEST DEAL** in this Winter..."

## HighSpeed Internet & Home Phone

**ORDER NOW..! AND GET FREE INSTALLATION & FREE NUMBER PORTING**

What will you get...

> 18 Mbps Download Speed
> Unlimited Download & Upload
> Unlimited Local Calling
> 10 Calling Features
> Keep Your Same Number
> NO CONTRACT
> 24/7 Technical Support

Special $39.99* /Mon

* Offer available for new customers only where technology permits. Promo Price $39.99 for the first 6 months and regular tariff $52.99 thereafter. Offer expires Feb 28th 2013. Pre-Authorized Payment required. 911 Fee and Equipment Purchase required where applicable. Conditions Apply. Taxes Extra.

## HIGHSPEED INTERNET

**Life-Time Deal Don't Miss it !**

What will you get...

> 18 Mbps Download Speed
> Unlimited Download & Upload

plus **FREE INSTALLATION***

$29.99* /Mon

* Offer available where technology permits. Offer expires Feb 28th 2013. Full Year Payment required. Equipment Purchase required where applicable. Conditions Apply. Taxes Extra.

## UNLIMITED TALK TO SRI LANKA

What will you get...

> Unlimited Calling to One Number
> No Contract
> No Calling Cards, No PIN, No Worries

$29.99* /Mon

* Offer available for new customers only where technology permits. Offer expires Feb 28th 2013. Pre-Authorized Payment required. Activation Fee and local usage charges applies where applicable.Conditions Apply. Taxes Extra




# 416 8000 SYS (797)

## www.innsys.ca

4500 Sheppard Ave E, Suite 111, Toronto, ON. M1S 3R6
(McCowan & Sheppard - Opposit Varatha's Silk)

# ஐங்கலை வெண்பா சார்பியல் - 13

## 3. நடனம்

அரிய நடனத்தை ஆதியிலே ஆடிப்
பெருமைப் படுத்தியவர் பேரார் - பரமசிவக்
குன்றாம் அவராடும் கூத்தர் நடராசர்
மன்றம் சராசர மாம். (17)

(மன்றம் சராசர மாம் - நடராசர் ஆடும்
அரங்கம் அண்டசராசரம் ஆகும்.)

முதுகாலம் பேசும் மொழிவளராக் காலம்
கதைசொல்ல மெய்ப்பாடே காலாம் - அதுவே
நடனமாய் நன்குபின் னாள்வளர்ந்த(து) என்பார்
நடனக் கலைவல் லுநர். (18)

(முதுகாலம் - பழங்காலம். மெய்ப்பாடு - உடற்செய்கை.
காலாம் - காரணமாம்.)

ஆட்டம் ஒருவர்பலர் ஆனாலும் பின்னணியில்
கூட்டும் சுருதியுடன் கூடிவரும் - பாட்டுமுள்ள
நாட்டியம் நட்டம் நடனம் நடமெல்லாம்
காட்டும் கலையொன்றே காண். (19)

சங்ககா லத்தில் விதிமுறைகள் சார்ந்துநடம்
பங்கமொன் றின்றிப் பயின்றதனை - மங்கைநல்லாள்
மாதவியின் ஆடல் அரங்கேற்றம் மாண்புற்ற
சேதியினாற் காட்டும் சிலம்பு. (20)
(சிலம்பு - சிலப்பதிகாரம்.)

அரிய தமிழ்நடன நூலதனை ஆன்ற
பரதமுனி கற்றுப் பகுத்தே - உரியமுறை
நாட்டி வடமொழியில் நாட்டிய சாத்திரத்தைத்
திட்டினார் ஏட்டில் தெளிந்து. (21)

துங்க நடனத்தைப் பின்னாள் சுகபோகர்
பங்கப் படுத்தப் பரத்தையரும் - மங்கிமெல்லத்
தாழ்வான நற்கலையைத் தாங்கித் தங்களது
வாழ்வாய் வளர்த்தார் மகிழ்ந்து. (22)

முன்னர் நடனம் முதன்முதலில் ஆடியவர்
தென்னா டுடையசிவன் என்பதனால் - தென்னாட்டின்
ஆலயங்கள் ஆடலினைக் கூத்தனுக்கே அர்ப்பணித்துச்
சால வளர்த்தனவாம் சார்ந்து. (23)

தமிழர் தனித்துவமும் பண்பாட்டுச் சால்பும்
அமையும் பரதத்தின் ஆற்றல் - உமைபாகர்
ஆற்றல் அதனாலே யாண்டும் அதைத்தமிழர்
போற்றி வழிபடுவர் பூத்து. (24)



கவிஞர் வி. கந்தவனம்

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

### நேர மெதுமையாக்கம் (Time Dilation)

சிறப்புச் சார்புத் தத்துவத்தின் இன்னொரு அழகான வெளிப்பாடு நேரக் குறுக்கமாகும். பேரண்ட வெளியில் ஈதர் என்கிற ஊடகம் இருக்க வேண்டிய அவசியமில்லை எனக் காட்டிய அயன்ஸ்ரைன், லோறன்ஸ் கைவிட்ட முடிவுகளைத் தள்ளி விடவில்லை. தனது சிறப்புச் சார்பினுக்குள் சேர்த்துப் பார்த்தார். லோறன்சின் சமன்பாடுகளை நேரடியாகவே அயன்ஸ்ரைன் பாவிக்கவில்லை. அச்சமன்பாடு முடிவுகளை அயன்ஸ்ரைனும் தானாகவே பெற்றிருந்தார். லோரன்ஸ் கூறிய 'ஈதருக்குள் இயங்குகின்ற பொருட்களின்' என்பதனை எடுத்து விட்டுப் பார்க்கையில் லோறன்ஸ்சின் முடிவுகள் அதிசயமானவையாக தென்பட்டன. நிருபணமான கணித முடிவுகள் அவை என்பதால் அவற்றில் பழுது இல்லை என்பது அயன்ஸ்ரைனுக்குத் தெரியும். இங்குதான் அயன்ஸ்ரைனின் வலிமையான மூளையின் வெளிப்பாடு தெரிகிறது. தொடர்பில்லாதவை போல இருக்கும் பலரது தனித்தனி முடிவுகளை எல்லாம் ஒன்று சேர்த்து பொதுமையான முடிவு ஒன்றினை பெறும் வல்லமையை அயன்ஸ்ரைன் பெற்றிருந்தார். அந்தவிதமாக அயன்ஸ்ரைனின் மூளையின் விளையாட்டுக்குள் லோறன்சின் நேரக்குறுக்கமும் அகப்பட்டுக் கொண்டு புதுப் பொலிவு பெறத் தொடங்கியது.


உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நேரக்குறுக்கம் என்பதனை பொதுவாக நேர மெதுமையாக்கல் (Time Dilation) என்பார்கள். இப்பதத்தினையே விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றார்கள். இதன்படி, வேகமாகச் செல்லுகின்ற பொருட்களில் நேரம் மெதுவாக நகரும் எனச் சிறப்புச் சார்புத் தத்துவம் கூறுகின்றது எனவாகின்றது. இதனை விளங்கிக் கொள்வதற்கு அடுத்து வருகிற எடுத்துக்காட்டினைப் பாருங்கள். உங்களது நண்பர் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்திற்கு பயிற்சி எடுக்கிறார் என்போம். தனது ஓடும் நேரத்தினைக் கணிப்பதற்காக உங்களிடம் ஒரு கைக்கடிகாரத்தைத் தருகிறார். அதேபோன்ற ஒரு கடிகாரத்தை அவரும் தன் கையில் கட்டியிருக்கிறார்.

இரண்டு கடிகாரங்களும் முற்றிலும் ஒரே மாதிரியானவை. உங்களது நண்பர் தனது பயிற்சியினை ஆரம்பிக்கிறார். 100 மீற்றர் தூரத்தினையும் அவர் சரியாகப் 11 செக்கன்களில் ஓடி முடிக்கிறார். உங்களது கடிகாரமும், அவரது கடிகாரமும் அவர் 100 மீற்றர் தூரத்தையும் ஓடி முடித்த நேரம் 11 செக்கன்கள் எனத்தான் காட்டுகின்றன. இது எங்களது சாதாரண நடைமுறை அனுபவம். ஆனால் சிறப்புச் சார்புத் தத்துவத்தின்படி, ஓடாது ஓய்விலே நின்ற உங்களது கடிகாரத்தின் நேரம், பயிற்சிக்காக ஓடிய உங்களது நண்பரின் கடிகாரத்தின் நேரத்தைவிட அதிகமாக இருக்க வேண்டும். அதாவது உங்கள் நண்பரின் கடிகாரம் 11 செக்கனையும்விடக் குறைவான வாசிப்பையே காட்டியிருக்க வேண்டும். அதாவது உங்கள் நண்பரின் கடிகார வாசிப்பு மெதுமையாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் சாதாரண நடைமுறையில் எங்களுக்கு நேர மெதுமையாக்கல் தெரிவதில்லை.

இதுதான் சார்புத் தத்துவத்தில் உள்ள நடைமுறைச் சிக்கல் என்கிறார்கள். சிறிய சிறிய வேக வித்தியாசங்களில் இந்த நேரக் குறுக்கம் அதாவது நேர மெதுமையாக்கல் தெரிவதில்லை.

பெரிய வேக வித்தியாசங்களில் இயங்குகையில், இந்த நேர வித்தியாசம் அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இன்னமும் ஒளியின் வேகத்திற்குக் கிட்டவான வேகத்தில் இயங்குகையில் இந்த வித்தியாசம் மிக மிகப் பெரியதாக இருக்கும். எடுத்துக் காட்டாக, ஒருவேளை உங்களது நண்பரின் கடிகாரத்தின் நேர வாசிப்பு 10.99999991 ஆக இருந்திருந்தால் (இந்த இலக்கங்கள் எடுத்துக் காட்டுக்காக கூறப்படுபவை) அக்கடிகாரத்தால்




இதனைத் திருத்தமாக வாசிக்க முடியுமா? இல்லையே, அதில் 11 செக்கன்கள் எனத்தான் வாசிப்பு இருக்கும். எனவேதான் இந்த நேர வித்தியாசத்தினை எங்களால் உணர முடியாது இருக்கின்றது. இதனால்தான் இந்நிலைக்கு முற்றிலும் பழக்கப்பட்டுக் கொண்ட எங்களால் சார்புத் தத்துவத்தின் விளைவுகளை எளிதில் விளங்கிக் கொள்ள முடியாது இருக்கின்றது. நேரம் மெதுமையாதலைக் காட்டுவதற்கு நல்ல ஒரு கதையினைக் கூறுவார்கள்.

எங்களது மொழியிலேயே இதனைக் கூறுகிறேன் சுதா, லதா இருவரும் ஒன்றாகப் பிறந்த இரட்டையர்கள். இவர்களது 23வது பிறந்த தினத்தில், பிறந்த தினக் கொண்டாட்டங்களை முடித்துக் கொண்ட உடனேயே சுதா விண்கலம் ஒன்றில் ஏறி, எமக்குத் தூரமாய் இருக்கும் விண்மீன் ஒன்றிற்குப் புறப்பட்டு விட்டாள். கிட்டத்தட்ட 9 ஒளியாண்டு தூரத்தில் உள்ள அவ்விண்மீனின் கிரகம் ஒன்றில் உயிரினங்கள் உள்ளனவா என அறியும் நோக்கத்தில் அவளது பயணம் அமைந்திருந்தது. (ஒளியாண்டு என்பது ஓராண்டில் ஒளி செல்லக் கூடிய தூரம்) அவளது விண்கலமோ ஒளியின் வேகத்தின் 0.9 மடங்கு வேகத்தில் செல்கின்றது. தனது இலக்கான கிரகத்திற்குச் சென்றவளுக்கு அக்கிரகத்தில் உயிரினங்கள் இல்லை என்பது உடனேயே தெரிகிறது. தங்கிட வசதி ஏதும் இல்லாததால் உடனேயே புவிக்குத் திரும்புகிறாள். புவியிற்குத் திரும்பிய சுதா, தனது சகோதரி லதாவைச் சந்திக்க வருகிறாள். இப்போதய நிலையைப் பார்ப்போம்.

தொடரும்...

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

**கணித, பொதுஅறிவுப் போட்டி - 2013**

இப்போட்டியில் தரம் 1 முதல் 12 வரையிலான மாணவர்கள் பங்குபற்றலாம். வெற்றி பெறுவோருக்கு தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களுடன்,

**விஷேட பரிசில்களும் வழங்கப்படும்**

பதிவுக்கட்டணமாக விண்ணப்பத்தாரருக்கு 25 டாலர்களும், மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பத்தாரர்கள் உள்ள குடும்பம் ஒன்றிற்கு 60 டொலர்களும் அறவிடப்படும்

பதிவுகளுக்கு: இணையத்தள இணைப்பு
http://mahajanan.org/contest2011_News.htm
மேலதிக விபரங்களுக்கு, அழையுங்கள்
**416.705.1493 / 416.451.8427 / 416 458 1775**

SKN

# SKN FINANCIAL

இப்பொழுது எமது சேவை Brampton-ல்




அதிக பாதுகாப்புக்கு!..
ஆழமான கேள்விகள்?

நீங்கள் அடைவு வைக்கும் தங்க நகைகளுக்கு முழுமையான பாதுகாப்பு உண்டா?

கவலை வேண்டாம்!.

SKN உங்கள் அடைவு நகைகளுக் காப்புறுதி மூலம் பூரண பாதுகாப்பை வழங்குகின்றது.

பாதுகாப்பு, நம்பிக்கை இணைந்தது SKN

40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கைக்கு SKN

SKN Now @ Brampton

**BRAMPTON**
85, Kennedy Road South
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

**SCARBOROUGH**
2677, Eglinton Avenue
(Close to CIBC)
Brimley / Eglinton MIK 252
416-269-5393

TRIDEL

# Another Tridel project Presented By
# HomeLife GTA Realty Inc.
# 101 ERSKINE IN UPTOWN TORONTO




# Price Starting From $259,900

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

*Independently Owned & Operated


Trinity Events
when silence breaks, music speaks
PRESENTS
FEB 16th 2013
VIJAY
TV PARTNER
பிரபல பாடகர்கள்
Yuvan Shankar Raja
Karthik Raja
K J Jesudas
S P Balasubramaniyam
Hariharan
Mano
Karthik
Haricharan
Vijay Jesudas
Satyan
Bhavatharini
Chitra
Sadhana Sargam
Shweta Mohan
N S K Ramya
தென்னிந்திய
திரைபிரபலங்கள்
Goutham Menon (Host)
Parthipan
Vivek
Sneha
Prasanna
Gobinath (Host)
Solo Singers
Priya Himesh
Priyacharshini
Rahini Sri (Super Singer)
Anita (Super Singer)
எங்கேயும் எப்போதும்
ராஜா
100 இற்கும் மேற்பட்ட
இசை கலைஞர்கள்
பங்குபெறும் மாபெரும்
இன்னிசை நிகழ்ச்சி
AT ROGERS CENTRE TORONTO CANADA
ROGERS CENTRE
TOLL FREE:1.855.554.4554
ticketmaster
1-855-985-5000
www.trinityeventsonline.com
TICKETS : VVIP, $150.00(VIP), $100.00, $80.00, $60.00, $39.00


கண்கள் உங்களுக்கு உலக அழகைக் காட்டுவது போல் பற்கள் உங்கள் அழகை உலகிற்குக் காட்டுகிறது
Markham NS Dental
Care, Comfort, Convenience, Confidence......
Dr. நளினி சுதர்சன் DDS
Family and Cosmetic Dentistry
உங்கள் அனைத்து பற் சிகிச்சைத் தேவைகளுக்கு நாடுங்கள்
FREE
15 Mins in office Teeth Whitening
Oral Cancer Screening
Cosmetic & Implant
Consultation and Advice
State-of-Art-Dental Technology
All your dental needs
Open 7 days
Always accepting new and Emergency patients
We speak English, Tamil, Tagalog, Urdu, Cantonese, Hindi & Kannada
All type of insurance accepted (Welfare, ODSP, Cinot & Healthy Smile)
Sedation Dentistry
Sedation dentistry program was designed to offer fearful patients a safe, comfortable means of receiving the treatment they need.
Treats all age groups, including children
All aspects of dentistry practiced
Education & Prevention
Open Seven Days A Week
www.MarkhamNSDental.com
9293 Hwy 48, Suite 4, Markham, ON. L6E 1A3 905-472-4111
MON - SAT 9:00 AM - 8:00 PM
SUN 10:00 AM - 5:00 PM


வாய்ப்பும்...வளர்ச்சியும்...
சூப்பர் வருமானம் தரும் EMini S&P500
சில மணி நேரத்தில் வீட்டில் இருந்து கொண்டு $100 இல் இருந்து $1000 வரை சம்பாதிப்பது எப்படி?
CanBull Inc
647-706-2964
www.CanBull.ca
முதலீட்டின் ரகசியங்கள்:
வெற்றிகரமான முதலீடு குறித்து சில முக்கிய ரகசியங்கள் உண்டு. இந்த ரகசியங்கள் பின்பற்றுவதற்கு எளிமையானவை. ஆனால் பலராலும் பின்பற்றப்படாதவை . நீங்கள் அந்த ரகசியத்தை பின்பற்றினால் நிச்சயம் ஜெயிப்பீர்கள். மகாபாரதத்தில் அபிமன்யுவின் கதை நம் எல்லோருக்கும் தெரியும். சக்கரவியுகத்தை அமைத்துக் கொண்டு எதிரிகளை துவம்சம் செய்தவன். ஆனால் அப்பேற்பட்ட வீரனுக்கு அந்த சக்கர வியுகத்திலிருந்து எப்படி வெளியே வருவது என்று தெரியாமல் போனதுதான் விதி. முதலீட்டாளர்களாகிய நாமும் சரியான நேரத்தில் முதலீடு செய்கிறோம். ஆனால் எப்போது வெளியே வருவது என்று தெரியாததால் இழப்பைச் சந்திக்கிறோம். ஒரு முதலீட்டிலிருந்து எப்போது வெளியே வருவது? நம் தேவையும் எதிர்பார்ப்பும் நிறைவேறிவிட்டால், அடுத்த நிமிடமே அதை காப்பாற்றிக்கொண்டு வெளியே வர வேண்டும். அதை கற்றுக் கொடுக்க நாங்க ரெடி, கற்பதற்கு நீங்க தயாரா? அழையுங்கள் CanBull Futures Trading!
EMini S&P500 டெக்னிக்கல் பார்வை:
1400 WILL PENETRATE TO 1429 AND 1468 TO MAKE A NEW HIGH 1474 & 1487 TO REACH 1505!
1363 WILL SLIDE DOWN TO 1315 AND 1295 TO HIT THE PREVIOUS LOW 1252 & 1100
THE 5 RICHEST MEN IN THE WORLD
1 Carlos Slim Helu $69 B
2 Bill Gates $61 B
3 Warren Buffett $44 B
4 Mukesh Ambani 22.3 B
5 Lakshmi Mittal 20.7 B
LIVE CHAT ROOM & LIVE FLOOR TRADING
தேவை - பணம்
தேடல் - CanBull Inc
வெற்றி - நிச்சயம்
GTA SQUARE
222-5215 Finch Ave E. Scarborough, ON, M1S 0C2

# சிறுவர் இலக்கிய...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

நன்குணர்ந்த
அவர் சிறுவர்களுக்கு தரமான கல்வி வழங்கப்படவேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டதே அதற்கு காரணம். அதனால்தான் ஆசிரியர்கள் பாடத் திட்டத்தினை குறிப்பிட்ட நேரத்தில் முடிக்கவேண்டும் என்பதிலும் கண்டிப்பாக இருந்தார். அத்துடன் அவர் விஞ்ஞான பிரிவையும் அறிமுகம் செய்தார்.

மாணவர்கள் கல்வியுடன் கலை, விளையாட்டு துறையிலும் பயிற்சி பெறவேண்டும் என விரும்பிய அவர் கலை, இலக்கிய நிகழ்ச்சிகளையும் விளையாட்டு போட்டிகளையும் நடைமுறை படுத்தினார்.

மாணவர்களுக்கு கல்வி எவ்வளவு முக்கியமோ ஒழுக்கம் அதைவிட முக்கியம் என்பது அவரது கருத்து. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை என்பதை நாம் அறிவோம். யாழ்பாணத்தில் பொதுவாக கிராமப்புற பாடசாலைகளில் ஒழுங்கு முறைகள் மிக குறைவாக பின்பற்றப்பட்ட காலம் அது. அதனை மாற்றி அமைத்தவர் அமரர் நாகராஜன். ஆசிரியர்களோ மாணவர்களோ காலம் தாழ்த்தி பாடசாலைக்கு வருவதையும் நேரகாலத்தோடு வீட்டுக்கு செல்வதையும் முற்றாக நிறுத்தினார். செம்பாட்டு புழுதி பறக்கும் கட்டுவன் ஊரில் வெள்ளை சீருடை அணிந்து பாடசாலைக்கு செல்வது சவால் நிறைந்த முயற்சியாகும். அதனையும் செயல்படுத்தினார் அமரர் நாகராஜன். இவற்றை அவர் இலகுவாக செயற்படுத்த காரணம் மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் முன்னுதாரணமாக வாழ்ந்தமையே ஆகும். வெள்ளை உடையணிந்து நேரகாலத் தோடு பாடசாலைக்கு சென்று அவரது கடமைகளை பொறுப்பாக செய்து வந்தமை யால் அவ்வூர் மக்கள் மத்தியில் அவர் ஒரு தனி இடத்தை பெற்றுக்கொண்டார்.

பாடசாலைக்கு அருகாமையில் அவருக்கு வழங்கப்பட்ட காணியில் சிறிய அழகான வீடொன்றை கட்டி அதற்கு “சங்கராபரணம்” என பெயரிட்டு மனைவி நேசபூபதி, மகன் சிவானுசன் சகிதம் அமைதியாக வாழ்ந்து அவ்வூர் மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக விளங்கினார். நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் என்பதற்கு எடுத்துக் காட்டாக அவர் மனை வாழ்க்கை அமைந்திருந்து. ஆனால் இந்த அமைதியான வாழ்க்கை நீடிக்கவில்லை.

போர் சுழல் உக்கிரமடையவே கட்டுவன் மக்களுடன் சேர்ந்து இடம்பெயர்ந்து தெல்லிப்பளையில், காங்கேசன்துறை தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சி தலைவருமான அமரர் அ. அமிர்தலிங்கம் வாழ்ந்த வீட்டில் தனது வாழ்க்கையை தொடர்ந்தார்.

பல்கலை வித்தகரான நாகராஜனின் ஒரு முகம்தான் பாடசாலை அதிபர். அவர் சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், உரை ஆசிரியர், நூலாசிரியர், பத்திரிகை ஆசிரியர், பாடகர் என பல முகம்களையும் கொண்டவர். கலை இலக்கிய உலகிலே கதை, கவிதை, கட்டுரை, நாடகம் என பல்வேறு துறையிலும் மிக ஆழமாகவும் அகலமாகவும் தடம் பதித்தவர். குறிப்பாக சிறுவர்களுக்காக பல ஆக்கங்களை படைத்தார். அவரின் “காட்டில் ஒரு வாரம்” என்ற சிறுவர் வன நவீனம் என்ற நூல் இலங்கை அரசின் சிறந்த சிறுவர் இலக்கியத்திற்கான தமிழ் தேசிய சாகித்திய விருதை பெற்றுக்கொண்டது. அத்தோடு ஆசிரியருக்கு இலக்கிய வித்தகர் என்ற பட்டமும் கிடைத்தது. “அவன் பெரியவன்”, “சிறுவர் சிந்தனை கதைகள்”, “சிறுவர் கவிதையில் புதிய சிந்தனைகள்”, “சிறுவரும் அவர்தம் அறிவுசார் சாதனங்களும்”, “மாணவர் நல்லுரை கோவை”, “சிறுவருக் கான பழமொழி கதைகள்” என்பன சிறுவர் களுக்கான மற்றும் சில படைப்புகள் ஆகும்.

‘தென் மயிலை அருள்மிகு வீரபத்திரர் ஊஞ்சல்’, ‘விநாயகர் மகத்துவம்’ போன்ற படைப்புகள் சைவ சமயத்திலும் இசை துறையிலும் அவர் கொண்டிருந்த ஆர்வத்தினை எடுத்துக்காட்டும் படைப்புக் களாகும். ‘மார்கழி மங்கையர்’, ‘தாய் தரும் தாலாட்டு’, ‘தேடலும் பதித்தலும்’, “பட்டரின் அபிராமி மான்மியம்’, ‘ஒரு காலத்து சிறுகதைகள்’, ‘கருத்தும் எழுத்தும்’, ‘அறிவியல் பேழையில் ஒரு சில மணிகள்’ என்பன இதர நூல்களாகும்.

அமரர் அநு. வை. நாகராஜன் தெல்லிப்பளையில் வாழ்ந்த காலத்தில் போர் சூழல் காரணமாக யாழ். இலக்கிய வட்டம் சரியான முறையில் செயற்பட முடியாத நிலையில் இருந்ததனால், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளையில் கலை இலக்கிய களம் உருவானது. இதன் தோற்றத்துக்கு அமரர் நாகராஜன் ஆற்றிய பணி மகத்தான தாகும். மேலும் பல்கலைக்கழக உபவேந்தர் சு. வித்தியானந்தன், பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, வட்டாரக்கல்வி அதிகாரி பொ. சிவஞானசுந்தரம், கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, கலாகேசரி ஆ. தம்பித் துரை, சைவப்புலவர் க. செல்லத்துரை, பண்டிதர் சி. அப்புத்துரை, பிரபல பெண் எழுத்தாளர்கள் கோகிலா மகேந்திரன், குறமகள், மற்றும் திருமதி கெள.சுப்பிரமணிய ஐயர், திருமதி தர்மபூபதி சிதம்பரநாதன் போன்ற கலை இலக்கிய மேதைகளுடன் இணைந்து கலை இலக்கிய துறையில் புதிய இளைய சமுதாயத்தை உருவாக்கியதில் இவருக்கும் பெரும்பங்குண்டு. நிர்வாக ரீதியாக 1995 ஆம் ஆண்டுவரை களத்தின் பொருளாளராய் இருந்து அறிய பல சாதனைகளை புரிந்தவர்.

இத்தகைய பல்துறை வித்தகர் அநு. வை. நாகராஜன் இன்று எம்மத்தியில் இல்லை. அவர் வாழ்வாங்கு வாழ்ந்த சங்கராபரணம் இன்றில்லை. இவர் புதிய பாதையில் வழிநடத்தி சென்ற பாலர் ஞானோதய வித்தியாசாலை இன்றில்லை. ஏன் கட்டுவன் ஊரே இன்றில்லை. என்றாலும் கட்டுவன் ஊர் மக்கள், இவரிடம் பயின்ற மாணவர்கள், இவருடன் கலை இலக்கிய பணிகளில் பயணித்த இலக்கிய உறவுகள் இன்று இலங்கையின் பல பாகங்களிலும், உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் அனைவரினதும் உள்ளங்களில் நீக்கமற நிறைந்து வாழ்ந்து வருகிறார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.


SIVAS SOLUTIONS



- வருமான வரி
- புது வியாபாரம்
  - தனி நபர்
  - கம்பனி
- ISO Registration
- Process Flow - For manufacturing Businesses
- Export Financing
- Foriegn Exchange Policy
- தவறான வேலை நீக்கம்

மேலும் பல சேவைகள்...

தகுதிவாய்ந்த தொழில் வல்லுனர்கள் உதவியுடன் மேலும் பல சேவைகள்

www.SivasSolutions.ca
Tel: 416.901.0929
e-mail: siva@sivassolutions.ca

**TAXES TAXES TAXES**

**வரிகள் (காலை) வாராது காப்போம்**

Ask your Neighborhood Tax Professionals on how to
***Pay Less TAX, Get Best Refunds, Plan Your Next Year's TAXES***
Negotiate Tax Payments with CRA (Our team includes retired CRA Auditor/Appeals Officer)
Phone numbers to call this home based professional alliance

| | |
|---|---|
| *Markham & Eglinton* | *416-901-0929 (SIVA)* |
| *Warden and Finch* | *416-492-7957 (YOGA)* |
| *Steeles and Pharmacy* | *647-782-2790 (JOHN)* |

We speak English, Tamil, Sinhalese, Arabic, Farsi, and Afghani, for your convenience.
Our services also include

1. Business Accounting and Tax
2. Business Registration and Start-up
3 Business Advice, and Budgeting.
4. Review Tax Assessments and Raise Objections

Please visit our website to know more about our bio data and the other specialized services we provide for the business community.
***www.sivassolutions.ca***

***ACT NOW***



- Free pick up and delivery
- New clients get a special Tax preparation Discount.

***Contact us for a pre Tax preparation discussion and RRSP advise before Feb. 15 to have your return prepared free of charge (some restrictions may apply).***

# கமிராவுக்கும் எனக்கும் காததூரம்

எனக்கும் இந்தப் புகைப்படம் எடுக்கும் கருவிக்கும் (Camera) இடையே எட்டாம் கட்டளைப் பொருத்தம் என்பதை எனது பிள்ளைகள் தவிர நெருங்கிய நண்பர் குழாத்திற்கும் நன்றாகவே தெரியும். எனக்கு கமிராவுடன் பரிச்சயம் ஏற்பட்டது எனது 13வது வயதிலே. எனது அண்ணருக்குத் திருமணம் முடிந்தது. ஆசைக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பாரத் புகைப்படக் காரரை அழைத்து குடும்ப படம் ஒன்றினை எடுத்தார். அது பெரிய ஒரு நிகழ்ச்சியாக அமைந்தது. அண்ணி குடும்பத்துடன் எமது குடும்பமுமாக மொத்தம் 10 பேர்கள் கொண்ட குழு. கமரா மூன்று கால்களை யுடைய ஒரு தாங்கியில் நின்றது. படப்பிடிப்பாளர் எம்மை எல்லாம் உட்காரவும் நிற்கவும் ஒழுங்கு படுத்திய பின்னர் தான் கமிராவிற்குப் பின்னர் நின்று தலையையும் கமிராவையும் சேர்த்து உட்புறம் கறுப்பும் வெளிப்புறம் சிவப்புமான ஒரு போர்வையால் போர்த்தியபடி கமிராவ-ின் பிற்பகுதி ஊடாகப் பார்த்தார். எமது பார்வை, நிலை இருக்கை ஒழுங்கு எல்லாவற்றினையும் பார்த்துச் சீர் செய்த பின்னர் இருபுறமும் பலகையால் சூழப்பெற்ற ஒரு தட்டினை கமராவின் பிற்புறத்தில் வைத்து பின்னர் அதன் முற்புறத்தில் உள்ள தட்டினை மெல்ல வெளியே இழுத்தார். மீண்டும் ஒருமுறை எல்லாம் சீராக உள்ளனவா எனப் பார்த்த பின்னர் கமிராவுக்கு முற்புறப் பக்கமாக வந்து நின்று மீண்டும் எம்மில் உள்ள சிறுகுறைகளை நிவர்த்தி செய்த பின்னர் படம் எடுக்கப் போவதாக அறிவித்தல் கொடுத்துவிட்டு, கமராவிற்கு ஒரு பக்கமாகப் பவ்வியமாக நின்று அதன் முற்புறத்தில் உள்ள ஒரு சிறு வட்டவடிவான மூடியை நீக்கி ஒளிபுகவிட்ட பின்னர் மீண்டும் மூடிக் கொண்டார். இன்னும் ஒரு முறை இதே செயல் முறை திரும்பவும் செய்யப்பட்டது. புகைப்படக்காரர் போய் விட்டார். பத்து நாட்களின் பின்னர் அண்ணர் யாழப்பாணம் சென்று புகைப்படத்தினைப் பெற்று வந்து காட்டினார். எல்லோரும் அழகாக இருந்தோம். சந்தோசமாக இருந்தது. அண்ணனுக்கு தானும் மனைவியுமாக பல்வேறு நிலைகளில் படம் எடுக்க வேணும் என்ற ஆசை. தனது நண்பர் ஒருவரிடம் பெட்டிக்கமிரா ஒன்றினை இரவல் வாங்கி வந்தார். அதற்குரிய கொடாக் பிலிம் சுருளில் 12 படங்கள் எடுக்கலாம். அதனை கமிராவுக்குள் புகுத்த எனக்குத் தெரியாது என்றமையால் அண்ணை தனது நண்பரைக் கொண்டே அதனையும் செய்வித்துக் கொண்டு வந்தார். எனக்கு முன்பின் கமிராவைப் பார்த்த அனுபவம் கூட இல்லை. எப்படிப் படம் எடுக்க வேண்டும் என்பதை அண்ணை விளக்கினார். இக்காலத்தில் கமிரா குழந்தைகளின் விளையாட்டுப் பொருள். ஆனால் அக்காலத்தில் பெரியவர்கள் மாத்திரம் கையாளும் புனிதமான உபகரணம்.

அண்ணருடைய வீடு சற்றுப் பெரிய கல்வீடு. அது அவருக்குச் சீதனமாகக் கிடைத்த வீடு. ஆலங்குளாய், சண்டிலிப்பாயின் குக்கிராமங்களில் ஒன்று. ஆலங்குளாயில் பொதுவாகவே எல்லா வீடுகளும் ஓலை வீடுகள். அவர்களில் பெரும்பாலோர் சாமான்ய விவசாயிகள். ஆகவே அவர் களிடம் கல்வீடுகள் கட்டி வாழ்வதற்கான வசதி இருக்கவில்லை. அங்கும் இங்குமாக ஒரு சில வீடுகள் மாத்திரம் கல்வீடுகள். ஆனால் அந்த வீடுகள் யாவும் மலாயாவில் (இன்றைய மலேசியா) வேலை பார்த்தவர் களுடைய வீடு என உறுதியாகச் சொல்ல முடியும். அண்ணரின் மாமனார் மலாயாவில் வேலை பார்த்து ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருப்பவர் என்பதை நான் கூறித் தெரிய வேண்டிய அவசியமில்லை. அண்ணர் வீடு நாற்சார் வீடு என்பார்கள். முற்புறத்தில் ஒரு போர்ட்டிக்கோ அதன் முகப்புச் சுவர் உயரமானது. நிலமட்டத்தில் இருந்து மூன்று படிகளில் ஏறித்தான் போர்ட்டிக்கோவின் உள்ளே புகமுடியும். அதன் முற்புறத்துச் சுவரின் மேற்பகுதியிலே 'சரஸ்வதி வாசா' என எழுதியிருந்தார்கள். சரஸ்வதி என்பது எனது அண்ணியின் பெயர். அண்ணர் படம் எடுக்கும் முறை பற்றி எனக்கு மீண்டும் ஒரு விளக்கம் தந்தார். என்னை நிலத்தில் நின்றபடி தங்களைப் படம் எடுக்குமாறு கூறிப் போர்ட்டிக்கோ வாசலில் மனைவி சமேதராக நின்றார். தம்பி முழு உருவமும் தெரிய எடு என்பார் அல்லது வீட்டின் பெயர் தெரியக் கூடியபடி எடு என்பார். எனக்குப் புது அனுபவம். குண்டூசித்துளை கமிரா (Pin hole camera) பற்றி ஸ்கந்தாவில் கிருஷ்ணன் மாஸ்ரர் படிப்பிக்கும் பொழுது எனக்கும் பௌதிகவியலுக்கும் இடையே அதிக தூரம் என்பதை உணர்ந்து பௌதிகவியல் வகுப்புக்கு கட் அடித்து வெகு தூரத்தில் நின்று விட்டேன். ஆகவே எனக்கும் கமிராவுக்குமிடையே அன்றைய தினம் தான் நெருங்கிய முதல் சம்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அதனை எத்தனை இலாகவமாகக் கையாள வேண்டும் என்ற புதிர் அன்று மாத்திரம் அல்ல இன்றும் எனக்குப் புரிந்த பாடில்லை. அண்ணர் சொன்னபடி எல்லாம், கமிராவைக் கிளிக் செய்தேன். எப்படியோ 12 முறை கிளிக் செய்து அண்ணாவிடம் கமிராவைக் கொடுத்தேன். அதை யாழ்ப்பாணம் கொண்டு சென்று கழுவக் கொடுப்பதாக அண்ணை சொன்னார். வாரம் ஒன்று கழிந்தது. அண்ணா எதனையும் சொல்லவில்லை. அடுத்த வாரமும் முடிந்தது. படம் பற்றி மூச்சுவிட அண்ணா தயாராயில்லை. ஆகவே நானே கேட்டுவிட்டேன். ஏன் அண்ணை படங்கள் கழுவி வந்தாயிற்றா என்றேன். அண்ணா முகத்தில் அசடு வழிய என்னைப் பார்த்தார். அது தம்பி என இழுத்தார், எனது மனது புண்பட்டு விடுமோ என்று கலங்கியவராக. பின்னர் அவ்வளவு நன்றாக வரவில்லை என்றார். எங்கே அண்ணை ஒருக்கால் பார்ப்போமே என்றேன். பரவாயில்லை விடு என்றவர், அவற்றினைக் காட்டி என்மனதினை நோகப் பண்ணலாமோ எனச் சிறிது நேரம் யோசித்தவர், அங்கே ஒரு என்வெலப்பிலே என் மேசையில் உள்ளது என்றார். போய்ப் பாரத்தேன். என்மேலேயே வெறுப்பு வந்தது. 12 படங்களை ஒன்று சேர்த்தாலும் ஒரு முழுமையான படம் வர முடியாது என்பது தெரிந்தது. அண்ணா அண்ணியிலும் உயரம். ஆகவே மேலே இல்லத்தின் பெயருடன் அண்ணாவின் தலை மாத்திரம் வந்தது. இருவரையும் முழுமையாக எடுத்த பொழுது முழங்காலுக்குக் கீழே மாயம். என் 12 படங்களுமே அரையும் குறையுமாகக் காணப்பட்டன. நான் ஒரே இடத்தில் நின்றபடி கமராவே மேலும் கீழும் சாய்த்து எடுத்ததன் விளைவு என்பதைப் புரிந்து கொண்டேன். பிறகென்ன வேலை எனக்கு. மெல்ல நகர்ந்தேன். அண்ணரோ அந்தப் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை. அதற்குப் பின்னர் என்றுமே படம் எடுப்பதற்காக என் பக்கம் திரும்பப் பார்க்கவும் இல்லை.

காலம் வேகமாக ஓடிற்று. நான் இந்தியா வில் பட்டப்படிப்பை முடித்து, மகாஜனாவில் ஆசிரியப் பணியாற்றி, சோமாஸ்கந்தாவிலும் மகாஜனாவிலும் அதிபர் கதிரையில் அமர்ந்து நைஜீரியா சென்று அங்கிருந்து கனடா வந்து நிரந்தரமாக குடியேறி விட்டேன். ஆனால் எக்காலத்திலும் ஒரு கமிரா வாங்க வேண்டும், அதனால் புகைப்படம் எடுக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டதில்லை. செல்லத்துரை என்ற நண்பர் ஒருவர் அளவெட்டியில் இருந்தார். மிகத் திறமைசாலியான புகைப்படக்காரர். அவர் எனது திருமணப் படங்களையும் அதன் பிறகு பல சந்தர்ப்பங்களிலும் படங்களை எடுத்தார். மிக்க அழகாயிருக்கும். எனது மகன் பிறந்ததும் மாதம் தவறாமல் ஒவ்வொரு மாதமும் வந்து படம் எடுத்துத் தருவார். பின்னர் எனது மைத்துனர் அரவிந்தன் அந்த வேலையைச் செய்தமையால் நான் கமிராப் பக்கம் தலை வைத்துப் படுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இப்படி இப்படியே அவரும் இவரும் தேவையான சந்தர்ப்பங்களிலே படம் எடுத்தமையால் தேவையான படங்கள் எடுக்கப்பட்டன. ஆனால் எனக்கு என்றுமே படம் எடுப்பதில் அக்கறை இருந்ததில்லை. அந்தப் படங்களைச் சேகரித்து வைப்பதிலும் நாட்டம் இருந்ததில்லை. கொஞ்சம் பெரிய தலைகளுடன் எடுத்த படங்களை என் 75ஆவது வயதுப் பூர்த்தியை எனது பிள்ளைகள் கொண்டாட முயன்ற போது தேடிக் களைத்துக் கைவிட்டு விட்டார்கள்.


எல்லாவற்றிற்கும் மேலாக எனது அசட்டுத் தனமான ஒரு செயலுக்காக நான் இன்றும் வருந்துகின்றேன. அப்போ நான் எனது மனைவி, இரு மகள்மார் நைஜீரியாவில் இருந்தோம். இரண்டு மகன்மாரும் சென்னையில் படித்துக் கொண்டிருந்தார்கள். 1985ல் எமது விடுமுறைக்காகச் சென்னை சென்று அவர்களுடன் தங்கியிருந்தோம். அப்போது எனது ஐம்பதாவது பிறந்த தினம் வந்தது. நம் குடும்பம் முழுமையாக இங்கே உள்ளது. ஒரு புகைப்பட நிலையம் சென்று குடும்பப் படம் ஒன்றினை எடுப்போமே, இனிமேல் இப்படி ஒரு சந்தர்ப்பம் வருமோ தெியாது என எனது மனைவி கேட்டார். ஆனால் நான் எனது அசட்டுப் பிடிவாதத்தினைக் காட்டிவிட்டேன். இன்னும் சில வருடங்களிலே நாம் எல்லோரும் ஒன்றாகத் தானே இருக்கப் போகிறோம், இப்ப ஏன் அவசரப் பட்டுக் குடும்பப் படம் எடுக்க வேணும் எனக் கேட்டு மறுத்து விட்டேன். அது எவ்வளவு முட்டாள் தனம் என்பதை உணர்ந்து இன்றும் வருந்துகிறேன். அந்த வருத்தம் என்றும் இருந்து கொண்டே இருக்கும். என்ன பிரயோசனம். 1987இல் கனடா வந்தோம். 1988இல் மனைவி இறந்து விட எம்மிடம் முழுமையான ஒரு குடும்பப் படம் இல்லையே என்ற ஏக்கம் என்னிலும் பார்க்க எனது பிள்ளைகளிடம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியதை பலமுறை அறிந்து மனதுக்குள் ஆதங்கப்பட்டேன். அதற்குப் பின் எடுத்த அத்தனை குடும்பப் படங்களிலும் மனைவி புகைப்படமாகவே காட்சி தருகிறார் என்பது எனது அசட்டுப் பிடிவாதத்திற்கான சாட்டை அடி.


2004 இல் எனது பழைய மாணவர்களின் அழைப்பினை ஏற்று ஆஸ்திரேலியா மற்றும் நியூசீலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றேன். அப்பொழுதும் கமிராவைப் பொறுத்தமட்டிலே நான் நிராயுதபாணியே. எப்படியோ அங்கு சென்ற இடமெல்லாம் எனது பழைய மாணவர்கள் என்னை வைத்து எடுத்த புகைப்படங்களின் உதவியோடு நண்பர் திருச்செல்வத்தின், "தமிழர் தகவல்" சஞ்சிகையில் எனது ஆஸ்திரேலிய- நியூசீலாந்துப் பயணம் பற்றித் தொடராகப் புழுகினேன். நான் திரும்பவும் கனடா வரும் பொழுது தன்னுடன் இரண்டு நாட்கள் தங்கிச் செல்லுமாறு எனது அபிமானத்துக்குரிய மாணவனும் பிரபல இதயவைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி ஷண் சுந்தர் கேட்டபடி இரண்டு நாட்கள் கலிபோர்ணியாவில் அவருடன் தங்கினேன். முதலாவது நாள் அவ்வூரிலும் அருகாமையிலும் வசிக்கின்ற மகாஜனப் பழைய மாணவர்களின் ஒன்று கூடல் ஒன்றினை நிகழ்த்தினார். பல வருடங்களுக்குப் பின்னர் சிலரைச் சந்தித்தேன் மகிழ்ச்சியாக இருந்தது. இரண்டாவது நாள் அவர் என்னை ஒரு விற்பனைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றார். நீங்கள் வந்ததன் ஞாபகமாக நான் ஏதாவது தர வேண்டும் எனக்



பொன். கனகசபாபதி

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

இரவு ஒரு மணியிருக்கும்.

சிவா ஏதோ சந்தடி கேட்டு கண்விழித்துக் கொண்டான். எங்கும் ஒரே இருட்டு. எங்கே இருக்கின்றேன் என்று முதலில் அவனால் உணர முடியவில்லை.

நெஞ்சில் ஏதோ பாரம் அழுத்துவது போலிருந்தது. சிறிது சிறிதாக அப்பாரத்தின் அழுத்தம் அதிகரிப்பது தெரிந்தது. நெஞ்சு வலிப்பது போல் தெரியவில்லை, ஆனால் மூச்சு விடுவது சிரமமாக இருந்தது.

இருட்டில் என்ன ஏதென்று பார்க்கமுடியாது இருந்தது. நெஞ்சின் மேல் ஏதாவது இருக்கின்றதா எனப் பார்க்கலாமென்றால் இருட்டில் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் ஏதோ இருப்பது போலத்தான் உணர்ந்தான். கைகளால் தடவிப் பார்க்கலாமென நினைத்தவன் கைகளை உயர்த்த முயற்சித்தான். முடியவில்லை. கை கால்களைக் கூட அசைக்கமுடியவில்லை.
கண்கள் இருட்டுக்குப் பழக்கப்பட்டுவிட, நிமிர்ந்து படுத்திருந்த சிவா மிகவும் சிரமப்பட்டு நெஞ்சின் மேல் பார்த்தான்.

அங்கே,
ஒன்றுமேயில்லை. ஆனால் இன்னமும் பாரம் இறுக்கமாக அழுத்தியவண்ணம் இருந்தது. பாரம் அதிகரிக்க, அதிகரிக்க மூச்சுமுட்டி, சிவா அந்தரப்படத் தொடங்கியவனுக்கு, நெஞ்சின் மேல் ஏதோ இருப்பது போன்று தெரிந்தது.

அது உண்மையா அல்லது ப்ரமையா என்று கூடத் தெரியவில்லை. பாரம் இன்னும் அதிகரித்தது. மூச்சுத் திணற, மூச்சடைப்பு ஏதாவது நடந்திடுமோ என அந்த நிலையிலும் அவனது மூளை அவனுக்கு எச்சரிக்கை கொடுத்துக் கொண்டு இருந்தது. ஏதாவது செய் என்று அவனது மூளை அவனுக்குக் கட்டளை கொடுக்க,
சிவாவின் மூளையும் உடலும் ஒன்றாகச் செயற்படத் தொடங்கின. 'அம்மா' என்று கத்தியபடியே, ஏதோ ஒரு வலிமை சேர ஒரு உன்னலுடன் ஒருபுறமாகத் திரும்ப முயற்சித்தான் சிவா. சிவாவின் முயற்சி வெற்றிபெற, அப்பாடா! பாரம் இறங்கிவிட்டது.

மூச்சு இயல்பாக வரத் தொடங்கியது. எல்லாமுமே இயல்புக்கு வந்துவிட்டது.

சற்று நேரம் அப்படியே படுத்திருந்தவன் தனக்கு என்ன நடந்தது என அறியமுற்பட்டான்.

மீண்டும் நிமிர்ந்து படுப்பதற்குப் பயந்த சிவா, மெதுவாகத் தலையை மட்டும் திருப்பி பார்த்தான் ஒன்றுமேயில்லை.

எழுந்து சென்று மின்விளக்கைப் போடலாமென்றால், இன்னமும் பயமாகத்தான் இருந்தது சிவாவிற்கு.

இதென்ன எல்லாம் வித்தியாசமாய் இருக்கின்றதே என எண்ணியவனுக்கு 'அமுக்கப் பேய்' என்று கேள்விப்பட்டது ஞாபகத்திற்கு வந்தது. அதுதான் என்னை அமுக்கியதோ! படுக்கைக்கு வரும் முன்னராக ஏற்பட்ட அனுபவமும் மனதில் எழ,

அட ஒருவேளை பாதர் அருள் கூறிய பேய்கள் இன்னமும் வீட்டில்தான் இருக்கின்றனவோ, மூளையின் எங்கேயோ ஒருபகுதியில் இந்த எண்ணம் பொறி தட்டி பெரிது பெரிதாக வளர சிவாவைப் பயம் மீண்டும் பிடித்துக் கொண்டது. கூடவே பற்பல யோசனைகளும் வந்து சேர, தலையிடியும் வந்துவிட்டது. கொஞ்ச நேரத்தில் தலை 'விண் விண்' என வலிக்கத் தொடங்கியது. யாரோ தலையின் உள்ளேயிருந்து சம்மட்டியால் ஓங்கி அடித்துக் கொண்டு இருப்பது போலிருந்தது. தலையை மெதுவாக வருடியவன் கைகளுக்கு, வலது காதின் பின்புறமாக ஏதோ தழும்பு இருப்பதுபோல் தட்டுப்பட்டது. என்ன இது, புதியதாக ஏதாவது காயமோ?

தழும்பின் பக்கவாட்டில் தடவிப் பார்த்தான். ஏதாவது ஈரலிப்பாக இருக்கின்றதோ என்று அறியும் நோக்கத்தில். காயமாக இருந்தால் இரத்தக் கசிவு இருக்குமல்லவா!
அப்படி ஏதுமில்லை.

**◊ கனி ◊**

வெளிச்சத்தைப் போட்டுப் பார்க்கலாம் என நினைத்தவனுக்கு பயமாக இருந்தது. சரி, காலையில் பார்த்துக் கொள்ளலாம் என எண்ணியவன் அப்படியே படுத்துக் கொண்டான்.
இன்னமும் தலை வலித்துக் கொண்டுதான் இருந்தது.

எவ்வளவு நேரம்தான் படுத்துக் கொண்டு இருந்தானோ தெரியாது, இறுதியில் மெதுவாக நித்திரையாகிவிட்டான்.

இன்னமும் அமுக்கம் முடியவில்லை.




# BASEMENT RENT

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, Tamil channels. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.520.0496

**MAVIS & BRISTO**
2 Bedroom walk-out bsmt for rent. Cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.501.9248

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.438.2904

**MCCOWAN & DENISON**
2 Bedroom bmst for rent. Sep. entrance, parking, laundry. Close to school, YRT, TTC. Hardwood floor. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.271.1488

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. No smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.816.3114

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Rent $400. 2 bedroom bsmt for rent. Rent $600 + utilities. Very strickly No smoking & No Drink.
தொடர்புகளுக்கு: 647.855.2148

**MCLEVIN & NEILSON**
Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.971.6959

**KEELE & MAJOR MACKENZIE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable. Close to all facilities. Avail. February 15, 2013.
தொடர்புகளுக்கு: 647.204.4970

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.344.0188

**BELLAMY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, unlimited internet. Close to all facilities. Avail. immediately.
647.427.9684 / 416.268.7918

**MARKHAM & DENISON**
Newly renovated 1 large bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Couples or family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.821.2344

**MARKHAM & STEELES**
2 bedrooms bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $650. தொடர்புகளுக்கு: 647.740.5623

**BRIMLEY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.728.7036

**NEILSON & FINCH**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately. Ladies preferred. தொடர்புகளுக்கு: 416.412.0268 (Leave the message)

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.2253

**JANE & LAWRENCE**
Newly renovated 1 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, large window, high ceiling. Couples or single person preferred.
தொடர்புகளுக்கு: 416.473.7396

**MORNINGSIDE & LAWRENCE**
Bungalow house இன் மேற்தளத்தில் தளபாடம் மற்றும் internet வசதிகளுடன் கூடிய அறை ஒன்று வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. தேவை ஏற்படின் மதியம் மற்றும் இரவு நேர உணவு வழங்கப்படும்.
647.344.5044 / 416.312.6827

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom for rent in an apt. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.713.6268

**WARDEN & FINCH**
1 Bedroom for rent in a condo. Laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.497.9429

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.894.2845

**JANE & MAJOR MACKENZIE**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, mall, school. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.317.0865

**MARKHAM & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, bank, supermarket. Avail. immediately.
416.471.0738 / 647.281.6786

**BELLAMY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
647.504.2016 / 416.830.0472

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 parking, laundry. Close to TTC, school, mall. Avail. March 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.875.4377

**MCCOWAN & DENISON**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.554.3595

**MORNINGSIDE & NEILSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.295.7482

**MARKHAM & MAJOR MACKENZIE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
905.294.3260 / 647.708.2101

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable, parking. Close to all facilities.
647.718.2159 / 416.438.0397

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.888.2630

**STAINES & STEELES**
2 bedroom bsmt and 1 Bedroom for rent - main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.805.5722 / 647.348.1913

**MAVIS & STEELES**
Brand new 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013.
416.843.6610 / 647.703.7717

**MCCOWAN & SHEPPARD**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013.
**9TH LINE & 14TH AVE**
2 Bedroom walk-out bsmt for rent. Avail: February 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.554.7114

**MORNINGSIDE & MCLEVIN**
1 Bedroom walk-out bsmt fo rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.519.2899 / 416.303.6589

**MARKHAM & HIGH GLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.473.8520

**BELLAMY & EGLINTON**
3 Bedroom bsmt for rent. 2 Washrooms, sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2013. Rooms also avail.
தொடர்புகளுக்கு: 647.588.7829

**KENNEDY & DENISON**
2 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. All facilities close by. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.7146

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable, walking closet. Family preferred. Close Centennial college, TTC, mall, school. Avail. February 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.509.5664

**MCCOWAN & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Kitchen, washroom, sep. entrance, parking, laundry, easy access to backyard. Close to Go station, Kennedy station, mall, TTC.
647.686.3283 / 416.879.3283

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.3279

**KENNEDY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. $650 + utilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.720.7561

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance. Parking, cable, laundry. Avail. Anytime. Close to ttc, school, shopping.
தொடர்புகளுக்கு: 416.284.6226

**MCCOWAN & 16TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**LAWRENCE & SCAR. GOLF CLUB**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, Tamil stores. Avail. immediately.
416.438.2857 / 416.728.9580

**MARKHAM & PAINTED POST**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry internet. Close to all facilities. Avail. Anytime. Bachelor preferred.
416.431.4730 / 647.771.3801

**LAWRENCE & BELLAMY**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school,etc. Avail. February 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.917.5325

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.297.4100

**KENNEDY & FINCH**
1 bsmt bedroom Apt. for rnt. Sep. entrance. Safe zone neighborhood. Utilities included. Avail. March 01, 2013.
647.706.5851 / 416.321.9969

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.839.0679

**MORNINGSIDE / SHEPPARD**
Brand new 2 or 1 bedroom bsmt for rent. Sep. entrance. Gardening செய்யும் வசதியும் உண்டு. Malvern mall, TTC, school, library U OF T அருகாமையில் உள்ளன. Small family preferred. No pets & No smoking. Daycare available.
தொடர்புகளுக்கு: 416.834.1081

# CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 647.448.2569

மேலும் பக்கங்கள் 27, 28

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# ROOM FOR RENT

**STEELES & STAINS**
2 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.539.3581 / 647.706.0669

**MARKHAM & STEELES**
2 roomt for rent. Parking, laundry, livingroom, basic cable. Close to school, mall, TTC. Avail. immediately.
416.609.9087 / 647.987.4532

**DANFORTH & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, cable, washroom shared kitchen, laundry Utilities included. Close to TTC, mall, Tamil shops. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.899.9351

**MORNINGSIDE & LAWRENCE**
Bungalow house இன் மேற்தளத்தில் தளபாடம் மற்றும் internet வசதிகளுடன் கூடிய அறை ஒன்று வாடகைக்கு உண்டு. பெண்கள் விரும்பத்தக்கது. தேவை ஏற்படின் மதியம் மற்றும் இரவு நேர உணவு வழங்கப்படும்.
647.344.5044 / 416.312.6827

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom for rent in an apt. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.713.6268

**WARDEN & FINCH**
1 Bedroom for rent in a condo. Laundry. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.497.9429

**NEILSON & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.894.2845

**NEILSON & FINCH**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.666.0432

**MIDDLEFIELD & MCNICOLL**
மேல்தளத்தில் 1 படுக்கை அறை வாடகைக்கு உண்டு. Kitchen, living room, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.803.2587

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**MORNINGSIDE & NIGHTSTAR**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, Elementary school, mall. Female or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.335.8539

**NEILSON & MCLEVIN**
1 Bedroom for rent. Close to TTC, Malvarn mall. Rent $350. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.854.2723

**PHARMACY & FINCH**
1 Bedroom for rent - Main floor. Parking, laundry. Close to TTC, schools. இரண்டு நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. immediately. Ladies preferred.
416.201.1222 / 416.299.4895

# ROOM FOR RENT

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet o all facilities. Avail. immediately.
416.438.2626 / 647.286.7687

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**MORNINGSIDE & SHEPPARD**
***Morningview Trail***
4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred. Close to ttc - 131 bus, school.
தொடர்புகளுக்கு: 416.805.8791

**NEILSON & MCLEVIN**
2 அறைகள் கொண்ட Condoவில் ஒரு பெரிய அறை வாடகைக்கு உண்டு. Attached washroom, laundry, parking. Avail. immediately. பெண்கள், வயதானவர்கள் விரும்பப்படுவர்.
416.896.8388 / 1.330.277.0287

**MORNINGSIDE & NEILSON**
1 Large bedrooms வாடகைக்கு உண்டு. Washroom, parking. பெண்கள் / தம்பதியினர் விரும்பத்தக்கது. Including bedroom set. Close to all facilities. Avail. immediately.
416.267.0072 / 647.740.5162

**MARKHAM & EGLINTON**
Rooms for rent. Close to TTC, mall, stores. சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. immediately.
647.713.0624 / 647.856.0444

**WARDEN & FINCH**
2 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, school, Seneca college, etc. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.493.6540

**MARKHAM & LAWRENCE**
Newly renovated bsmt apt. Avail. immediately. Close to TTC, mall, Centennial college.
647.706.4881 / 416.439.4076

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
647.388.1481 /416. 759.7016

**KEELE & EGLINTON**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, York University, no frills. 1 bedroom bsmt with sep. entrance also available. Avail. immediately.
416.658.1144 / 416.302.3070

**MCCOWAN & EGLINTON**
1 Bedroom for rent in an Apt. Laundry. Close to Kennedy Subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.402.5253

# ROOM FOR RENT

**SHEPPARD & ROUGH RIVER**
புதிய வீட்டில் 3 அறைகள் வாடகைக்கு உண்டு. சைவ உணவுடன் அல்லது உணவு இல்லாமல். 2 minutes TTC. Safe & Convenient.
தொடர்புகளுக்கு: 416.697.2611

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities. Rent $400. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**NEILSON & FINCH /MORNINGSIDE**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

# HOUSE FOR RENT

**MCCOWAN & EGLINTON**
2 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Rent $799. Avail. immediately.

## OFFICE SPACE FOR RENT

MARKHAM & NASHDENE
MARKHAM & 14TH AVE.
தொடர்புகளுக்கு: 416.418.5749

**MCCOWAN & FINCH**
4 Bedroom house for rent. 3 Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.273.6516

**FINCH & STAINES & MORNINGSIDE**
4 Bedroom house + 1 bedroom bsmt with sep. entrance for rent. 2 car parking, laundry. Close to school, TTC, mall. Avail. March 01, 2013.
416.894.5904 / 647.537.8976

**BRIMLEY & LAWRENCE**
3 Bedroom bungalow house for rent. 1 Washroom, 2 parkings, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.728.7036

**MCCOWAN & LAWRENCE**
***3 Rooms for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. One bedroom bsmt also available. Avail. immediately.***
***647.706.4922 / 416.522.3314 / 905.554.2496***

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் Brown Road இல் வீடு ஒன்று சகல வசதிகளுடனும் வாடகைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.931.3444

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் 2 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.704.0165

# FOR SALE

**QUEENS WEST & LANDESDOWNE**
Pizza & fast food foe sale. Close to High school. Very traffic area. Price $79,999.
தொடர்புகளுக்கு: 416.826.4205

# JOB JOB JOB

**PIZZAVILLE**
**STOUFFVILLE**
Experienced pizza maker wanted. Top salary
தொடர்புகளுக்கு: 416.953.4933

## PRINT SHOP HELPER

Basic graphic photoshop knowledge, call answering, ஆங்கிலம், தமிழ் பேசக்கூடியவர் வேலைக்குத்தேவை.
தொடர்புகளுக்கு: 416.438.3133

# JOB JOB JOB

**DRIVER'S NEEDED**
Suitable for drivers living in Mississauga & Oakville.
தொடர்புகளுக்கு: 647.405.0115

# JOB JOB JOB

**HWY 401 & WESTERN**
இரு வயோதிபர்களை பராமரிக்க பெண் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடம் இலவசமாக கொடுக்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.889.1027

# JOB JOB JOB

Flooring company ஒன்றிற்கு receptionist வேலைக்கு ஒருவர் தேவை. Car ஓடத் தெரிந்திருக்க வேண்டும். ஆங்கிலம் பேசத்தெரிந்திருக்க வேண்டும். Part-time.
www.idealstairs.ca

# CONDO. FOR RENT

**100 Prudential Drive, Scarborough**
Very large 3 bedroom condo. for rent. Large living room and kitchen. Close to Kennedy Subway. Swimming pool open 7 days a week. One parking spot with the unit.
416.285.0249 / 416.509.4599

**NEILSON & SHEPPARD**
2 Bedroom + den condo. for rent. Parking, laundry. Close to all facilities. Avail. April 01, 2013.
தொடர்புகளுக்கு: 647.740.6226

**MIDLAND & EGLINTON**
2 Bedroom condo. for rent. 2 Parking, 1 washroom, A/C, laundry.
**SPACE FOR RENT.**
Office, Hair salon, Travels or many users.
தொடர்புகளுக்கு: 416.505.4449

**MCCOWAN & HWY 401**
1 bedroom + Den Condo. for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

# CONDO. FOR RENT /SALE

**KENNEDY & EGLINTON**
***Rainbow Village***
2 Bedroom + den Condo. 2 Washroom, corner unit condo. for rent or sale. 1200Sq.ft. Hardwood floor. Close to TTC, Kennedy Subway, Tamil stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.267.5085

மேலும் பக்கங்கள் 26, 29

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# பூரண மகிழ்ச்சி எமக்குள் இருந்து பிறக்கிறது

ஐந்தறிவு படைத்த மிருகங்களும், பறவைகளும், தாவரங்களும் தினமும் எப்படி யெல்லாமோ மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றன. மலர்ந்து நிற்கும் பூக்களும், துள்ளிக்குதிக்கும் சிறிய பிராணிகளும், பாடிச்செல்லும் பறவைகளும் எம்மிடம் இல்லாத ஒன்றினை சொல்லுகின்றன, சொல்ல முயற்சிக்கின்றன. ஆறறிவு படைத்த எமக்குத்தான் இது புரிவது இல்லை. காலையிலிருந்து முகத்தை தொங்கப் போட்டவர்களாகவும், அழு மூஞ்சிகளாகவும், விகாரமான தோற்றத்துடனும் அலைந்து திரிவர் எம்மில் பலராவர். உண்மையான மகிழ்ச்சியினது தத்துவத்தினை புரியாதவர்களாக இவர்கள் இருக்கக் கூடும். புன்னகை புரிபவர்களிடமும் உண்மையான பூரணமான மகிழ்ச்சி யிருக்கிறதா? என கண்டுகொள்ள முடியாது. காரணம் உண்மையான மகிழ்ச்சி மட்டுமே பூரணத்துவமானதாகும்.

மகிழ்ச்சி, ஆனந்தம், சந்தோஷம், உவகை, களிப்பு எல்லாமே எமக்குள்ளிலிருந்து பிறக்கின்ற குதூகலத்தின் வெளிப்பாடுகளே. ஆங்கிலத்திலும் மகிழ்ச்சி என்பதற்கு Happiness, Joy, Jolly, Amusement, Glad, Satisfaction, Gratification, Euphoria, Triump, Bliss போன்ற பல ஒத்த சொற்கள் உள்ளன. எனினும், மகிழ்ச்சி என்பதும் Happiness என்பதும் பூரணமகிழ்ச்சிக்கான சொற்களாகும். கிரேக்க மொழியில் Eudaimonia என்ற சொல்லின் மொழி பெயர்ப்பாகவே ஆங்கிலத்தில் Happiness ஆகியுள்ளது. உடலியல், உளவியல், ஆன்மீகம், தத்துவம், விஞ்ஞானமுறை எல்லாம் ஒன்றிணைந்த ஒரு பதமே மகிழ்ச்சி ஆகும். எல்லோருக்கும் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினாலும் ஆளுக்கு ஆள் பலவித வேறுபாடுகளுடன் மகிழ்ச்சியும் உருவாகிறது.

மகிழ்ச்சியை உளவியல் ரீதியில் ஆய்வது மிகவும் கடினமானதான ஒன்றாகும். நிரந்தரமற்ற, வேளைக்கு வேளை மாறும் மகிழ்ச்சியின் வேறுபாடுகளை கணிப்பதில் பல சிக்கல்கள் உள்ளன. ஒருவரின் சொந்த மனநிலை, சுயபெறுமதி குறிப்பிட்ட நிகழ்வுகள், நல்ல உணர்வுகள், திருப்தி, மனநிறைவு போன்ற அம்சங்களே மகிழ்ச்சியை பொதுவாக தீர்மானிக்கின்றன.

கி.மு 350ஆம் ஆண்டுகளில் வாழ்ந்த அரிஸ்டோட்டில் முதலாக இன்றுவரை மகிழ்ச்சியைப் பற்றி பல ஆய்வாளர்கள் சில கருதுகோள்களை கூறிவருகின்றனர். சீனாவில் கொன்பூசிய சிந்தனையாளர் Menicious 2300 வருடங்களுக்கு முன்பே இதுபற்றி சிந்தித்துள்ளார். பௌத்த சமயத்தில் நிர்வாண நிலை அடைவதையும் இந்து சமயத்தில் இறைவனோடு கலக்கும் பேரானந்த நிலையையும் மகிழ்ச்சியின் உன்னத நிலையாக கொள்ளப்பட்டது. இதேபோன்று Al-ghazali (1058-1111) முஸ்லீம் ஆய்வாளர் நபியின் வழிநின்று ஆராய்ந்துள்ளார். இந்து சமயதத்துவாதி பதஞ்சலி முனிவர் பற்றி விளக்கினார்.

வயது வந்தவர்களை விட குழந்தைகளே மிகமகிழ்ச்சியோடு இருப்பர். ஒருவர் தனது நடுத்தர வயதிலும், வயதான காலத்திலும் ஒரு குழந்தையின் உற்சாகத்தை தனக்குள் கொண்டிருப்பாரானால் அவர் உண்மையில் அதிஷ்டசாலி தான். இங்கிலாந்திலுள்ள பாடசாலையொன்றில் சிறுவர்களிடமும், சிறுமியர்களிடமும் அவர்களை மகிழ்ச்சிப் படுத்துகின்ற நிகழ்வுகளை பட்டியலாக



தரும்படி கேட்டனர். அவர்களது பட்டியல் பின்வருமாறு அமைந்திருந்தது. பறந்து கொண்டிருக்கும் ஸ்வாலோ பறவை, ஆழமான தெளிவான நீருக்குள் பார்த்தல், நீரைக்கிழித்து கொண்டு செல்லும் படகு, வேகமாக செல்லும் இரயில், பாரத்தை தூக்கும் பாரம் தூக்கி, நாய்களின் கண்கள், ஆற்றில் தெரியும் தெருவிளக்குகளின் பிம்பம், மேகங்களுக்கு இடையே தெரியும் நிலவு இந்த நிகழ்வுகள் மிகவும் உன்னதமானவை தான். பொதுவான இடங்களில் அழகைப் பார்க்க கூடிய கண்களும், ஒரு குழந்தையின் இதயமும் சுத்தமான ஆன்மாவும், ஆன்மீக எளிமையும் இருந்தால் போதும் ஒரு மகிழ்ச்சியான மனிதர் உருவாகி விடுவார்.

நம்மில் பலர் தங்கள் மனப்போக்குகள் மூலமாக மகிழ்ச்சியை வெளியேற்றி விடுகின்றனர். எமது ஆழ்மனத்தை கோபம், தீய எண்ணம், பகைமை போன்ற உணர்வுகளால் நிரப்பிக் கொள்கிறோம். ஒருவரின் மகிழ்ச்சியின்மை அவராலேயே உருவாக்கப்படுகிறது. மகிழ்ச்சியாக இருப்பதினை ஒரு பழக்கமாக்கி கொள்வதே மிக முக்கியமாகும். இதுவே நித்தியமான மகிழ்ச்சியான வாழ்வுக்கு கொண்டு செல்கிறது.

எமக்குள் எந்த நேரத்திலும் இரட்டை உணர்வுகள் தோன்றிக்கொண்டே இருக்கும். சாதகமான பாதகமான எண்ணங்கள், செய்வோமோ விடுவோ மோ என்ற சிந்தனை, மகிழ்ச்சி அல்லது துக்கம் நிரப்பும் எண்ணம், பங்குபற்றல் அல்லது பார்வையாக இருத்தல், தடுமாற்ற உணர்வுகள் இப்படி பலவாகும். மகிழ்ச்சியும் கவலையும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றது. மகிழ்ச்சியை அளப்பதற்கு பல வழிமுறைகள் கையாளப் படுகின்றன. The Subpective happiness scale (SHS) positive and negative affect schadule (Panas) salistation with life scale (Swls) ஆகிய முறைகள் மூலமே உண்மையான மகிழ்ச்சியை அறிய முடிகிறது.

பொதுவாக மகிழ்ச்சியாக உள்ளவர்கள் சுயநல மற்றவர்கள், எதனையும் சாதமாக சிந்திப்பவர்கள், சிறந்த எதிர்பார்புக்களை உடையவர்கள், நல்ல நடவடிக்கை யுடையவர்கள், அன்பு கொள்பவர்கள், பயமில்லாதவர்கள், உடன் நடவடிக்கை எடுப்பவர்கள், தாழ்வு மனப்பான்னை யற்றவர்கள், தன்னைவிட மற்றவர்களை நேசிப்பவர்கள். மகிழ்ச்சியின் மூலம் மற்றவர்களை ஆனந்தத்தில் ஆழ்த்துபவர் களாகவே இவர்கள் விளங்குவர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சியுள்ளவர் கள் அவதானிக்கப்பட்டனர். முதலில் பணம் உள்ளவர்களே மகிழ்ச்சியாக உள்ளனர் என்று கருத்துப்பற்றி ஆராயப்பட்டது. முதலில் ஐ. அமெரிக்காவில் உள்ள மாநிலங்களில் மகிழ்ச்சியுள்ளவர்கள் பற்றி ஆராயப்பட்டது. பணம் கூடியவர்கள் தாம் மகிழ்ச்சியுடன் இல்லை என்று கூறியிருந்தனர். தங்கள் வசதிகள் தொடர்ந்தும் கவலைகளை பிறப்பிக்கின்றன என்று பலர் கூறியுள்ளனர். பலர் மகிழ்ச்சியுள்ளவர்கள் போல வெளிக்காட்டினாலும் உள்ளூர மகிழ்ச்சியற்றவராக காணப்படுகின்றனர். உண்மையில் பொருளாதார அடிப்படையில் மகிழ்ச்சியை கணக்கிட முடியாதுள்ளது. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உள்ளது. 'உங்களிடம் ஐம்பதாயிரம் வீடுகள் இருந்தாலும் படுக்கப்போவது ஒரு சிறிய கட்டிலில் மட்டுமே' (Even if you have fifty thousand homes, you can sleep in only one bed) பொருளும், பணமும் மகிழ்ச்சிக்கு வழியில்லை என்பதனை உணர்ந்த கோடீஸ்வரர் பில்கேட்ஸ் கூட தனக்கு வாழ ஒரு வீடும், உணவும் இருந்தால் போதும், மற்றைய சொத்துக்களை வசதியுற்றவர்களுக்கு உதவ போவதாக அண்மையில் கூறியுள்ளதும் நினைவு கூரத்தக்கதாகும்.

மகிழ்ச்சி எவ்வாறு உருவாகிறது என்பதும் ஆய்வுக்கு உள்ளானது. வயது, பெற்றோர், அறிவு, உடலியல், மதம், பரம்பரை, அன்பு, உறவு, வேலை போன்றவை இதில் இணைக்கப்பட்டனர். பரம்பரை அலகுகள் ஒருவரது மகிழ்ச்சிக்கும் ஆளுமைக்கும் காரணமாகலாம் எனவும் ஆராயப்பட்டது. அத்துடன் தீவிரமான நோய், சுயபெறுமதி, நிறைவுத்தன்மை, உடற்பயிற்சி என்பதும் சேர்க்கப்பட்டன. Leda Considers, John Tooby ஆகிய இருவர் சேர்ந்து 'Hand book of emotions' (மன எழுச்சிகளின் கைநூல்) என்ற நூலைவெளியிட்டனர். இவர்கள் கணக்கிடமுடியாத, எதிர்பாராத சாதக நிகழ்வுகள் மகிழ்ச்சியாகிறது என்று கூறினர். மீண்டும் இந்நூல் 2008 இல் வெளியாயிற்று. அதில் குடும்பநிலமைகள், ஆனந்தம், வெற்றி போன்றவையும் சேர்க்கப்பட்டன. அத்துடன் விஞ்ஞான ரீதியில் 7 உணர்வுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டன. நட்பு, கவனிப்பு, உடற்பயிற்சி பொழுதுபோக்கு, ஆன்மீகம், மனிதாபிமானம், நேர்மறைச்சிந்தனை என்பன அதிலடங்கும். மனித தேவைகளுள் இறுதியாகவுள்ள சுயதிருப்தி (Self Actualization) மிகவும் முக்கியமானதாகும்.

நேற்று என்பது முடிந்து விட்டது, நாளை என்பது இன்றும் வரவில்லை. ஒருநாள் மட்டுமே உள்ள, அதுவும் இன்று. எனவே மகிழ்ச்சியாக இருக்கப்போகிறேன் என்று நாம் எண்ணிக்கொள்ள வேண்டும். அன்பில் ஆழ்ந்து பார்ப்போம், வலியிலும் சிரித்துப் பார்ப்போம். நல்ல குளியல் செய்து பார்ப்போம், ஒரு சந்தைக்கு சென்று பார்ப்போம், நல்ல தபால்களை பெற்றுப் பார்ப்போம், அழகான வீதியொன்றில் காரோட்டி செல்வோம், வானொலியில் விரும்பிய பாடலொன்றை கேட்டுப்பார்ப்போம், உடுப்புக்கள் துவைத்த பின் விரித்துப்பார்ப்போம், நல்ல நண்பர்களுடன் உரையாடிப் பார்ப்போம், சூரியன் எழுவதை நின்று பார்ப்போம், கிளிக்கிண்டிப் பார்ப்போம், நாங்களாகவே சிரித்துப் பார்ப்போம், மலர்ந்து நிற்கும் பூக்களை ரசித்துப் பார்ப்போம் எல்லாமே மகிழ்ச்சியின் பல்வேறு நிலைதான். 'மகிழ்ச்சியானவர்கள் மக்களை



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில்
வாசிப்பதற்கு www.vlambaram.com
www.tamilvanakkam.com

## தையல் வகுப்புக்கள்
## தையல் *Orders*
***MARKHAM & LAWRENCE***

Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## *SAREE BLOUSE*
**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

## திருமண சேவை

கனடாவில் வாழும் 37 வயது விவாகரத்தான பெண்ணிற்கு கனடாவில் அல்லது வேறு நாடுகளில் மணமகனும், மற்றும் அவுஸ்ரேலியாவில் வாழும் 34 வயதையுடைய மணமகளுக்கு கனடாவில் மணமகனும், இலங்கையில் வாழும் 38 வயது மணமகனிற்கும் கனடாவில் மணமகளும் தேவை.
தொடர்புகளுக்கு: 647.470.4599

## திருமண சேவை

உங்கள் பிள்ளைகளின் திருமணத்தை விரைவாக நிறைவேற்றிட எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஆண், பெண் இருபாலாரினதும் ஜாதகக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்புகளுக்கு : தனம் - ***647.918 0027***
***nallai@hotmail.ca***

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

## மணமகள் தேவை

53 வயதுடைய இந்து மத மணமகனுக்கு மணமகள் தேவை.
mahesnada@hotmail.com

## மணமகன் தேவை

இங்கிலாந்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட 32 வயதுடைய Accountant ஆக பணிபுரியும் மணப்பெண்ணுக்கு இங்கிலாந்து அல்லது கனடாவில் படித்த மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: 416.301.1733

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட 37 வயதையுடைய இந்து மதத்தை சேர்ந்த விவாகரத்தான மணமகளுக்கு கனடாவில் வேலை பார்க்கும் மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: 416.618.4874

## மணமகன் தேவை

கொழும்பை வதிவிடமாகக் கொண்ட 27 வயது ஏழுச்செவ்வாய் உள்ள இந்து மத மணப்பெண்ணுக்கு கனடாவில் மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு: 647.272.8468

## மணமகள் தேவை

55 வயதுடைய இந்துமத மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.564.8902

## மணமகன் தேவை

கனடாவை வதிவிடமாகக் கொண்ட 31 வயதையுடைய C.G.A பட்டப்படிப்பை முடித்த மணமகளுக்கு கனடா, அமெரிக்காவில் படித்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 647.720.5136

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய ரொறொன்ரோவை வதிவிடமாக கொண்ட மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: 647.918.5520

***Free Real Estate Class***
Call:***416.321.6969***

## *HOUSE FOR SALE*

யாழ்ப்பாணம் KKS வீதியில் பழைய Milk White Company க்கு அருகாமையில் மூன்று பரப்புக் காணியுடன் எட்டு அறைகள் கொண்ட சகல வசதிகளும் நிறைந்த இரண்டுமாடி வீடு விற்பனைக்கு உண்டு. Jaffna University, Technical College, Hindu College, Hindu Ladies College மிக குறுகிய தூரத்தில் உண்டு.
தொடர்புகளுக்கு:
416.291.6667 / 416.895.8111

**வீடு/பேஸ்மன்ட் உடனடி வாடகைக்கு**
Morningside/Passmore
4 பெட்ரூம்+ 3 வோஷ்ரூம் வீடு 1700.00க்கு உடனடிவாடகைக்கு
Bellamy/Lawrence
2 பெட்ரூம் பேஸ்மன்ட்(தனி என்ரன்ஸ்,கிச்சின்,லோண்டரி)
இன்னும் பல !!!! [illegible]
**416-816-9011**

## *ADAT BRIDAL & BEAUTY*
**பெண்களுக்கான தையல் வகுப்புக்கள்**

Saree Blouse classes, saree works, bridal & functional wear, tailoring,
50 ஆடைகள் without block.
தொடர்புகளுக்கு: 647.856.7069

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## *FOR SALE*
***ELLESMERE & BRIMLEY***

Digital Printing shop business for sale will all equipments supply. Digital அச்சகம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.854.8354

## தமிழ் அச்சு வடிவமைப்பு

தமிழ் அச்சுவேலைகள், வடிவமைப்பு தமிழ் மொழியில் வாழ்த்து பா, பாராட்டு பத்திரம், நிகழ்ச்சி நிரல், விளம்பரம், துண்டுப்பிரசுரம், விழா மலர், புத்தகம், நினைவு மலர், அறிவித்தல், என்பவை வடிவமைத்து, உரிய நேரத்தில் தரப்படும். தொடர்புகளுக்கு: 647.938.7750

## *CAR FOR SALE*

2006 Lincoln Town Car for sale. Black Clour.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## *CAR FOR SALE*

1997 & 1998 CRV cars for sale. Black colour. 4 Door. Automatic. Good condition.
416.688.8364 / 416.754.2002

மேலும் பக்கங்கள் 26, 27

## *COMMERCIAL UNIT FOR SALE*

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough. ***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***

## *ROOM FOR RENT*
### *WARDEN & FINCH*

Condo. வில் சகலவசதிகளுடன் கூடிய ஒரு அறை வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். அருகாமையில் பஸ் வசதியுடன் உடனடியாக இருந்து வாடகைக்கு விடப்படும்.
**தொடர்புகளுக்கு: 647.402.9490**

## ஸ்ரீ கைலாசம் சைவசமய கிரியைகள் சேவை

சைவ கிரியைகள், ஆலோசனைகள், சைவமுறைப்படி சமயதீட்சை, அந்திமக்கிரியை (மரணச்சடங்கு), அந்தியேட்டி (புனர்தகனம், கல்பூசை) என்பவற்றை சைவ முறைப்படி செவ்வனே செய்துகொள்வதற்கும், அவை தொடர்பான ஆலோசனைகளுக்கும் 'இணுவையூர்' சிவஸ்ரீ.மு.சு.வைத்தியநாதன்குருக்கள் (பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க முன்னாள் சைவக்குருக்கள்)

தொடர்புகளுக்கு: ***647.629.5468 / E.mail:smskurukkal@yahoo.com***

## *TUTORING - ALL AGES & SUBJECTS*

***Including up to P.H.D single or group classes. Specialty with children with learning problems (ADD, ADHD, Aspergers, Autism) Punctuation, grammar, essays, civics, reading, history, science, French & Math special group rates. Also citizenship classes, Guitar classes.***

***Contact: 416.493.6540***

# TUTORING

TRINITY ACADEMY
*tutoring / coaching*

**647.705.0725 (www.trinityacademytoronto.com)**

***Math (Calculus, Adv.fns, & Data Mgmt), Physics, Chemistry, Biology, English & French***

***Entrust your children's Academic Success in the hands of highly qualified and experienced Kerala***

# தமிழர் மத்தியில் என்றும் தரமானதாகவும் ருசியானதாகவும் சுகாதாரமுறைக்கேற்ப உணவுப் பொருட்களை வழங்குவது.



NO 01




## நா நரம்புகள் சிலிர்த்திடும் சுவை

Niru Niru
நிரு
பிராண்ட்

**Tel: 416.750.1976**
**Web: www.niru.com**
**E-mail: info@niru.com**

# பொருள்தேடச் செல்லும் பிரிவுச் செய்தி கேட்ட தலைமகள் தன் தோழியிடம்... காதல் இன்பத்தைப் பகிர்கின்றனளே...

பிரிவுத்துயர் யாரைத்தான் விட்டுவைக்கும். சேயைப்பிரிந்த தாய். துணையை இழந்த அன்றில். . . நெருங்கிப் பழகிய வரை பிரியப்போகின்றோம் என்றாலே துயரம் நெஞ்சத்தை அடைத்து விடுகின்றது. ஆனால் கணவனைச் சிறிது காலத்திற்குப் பிரியப்போகின்றோம் என்றாலும் மனம் சோர்வடைந்து கவலை மனதை வாட்ட ஆரம்பித்து விடுகின்றது.



- த. சிவபாலு -
B.Ed (Hons), M.A

தனது தலைவன் தன்னைப்பிரிந்து செல்லப்போகின்றான் என்றதுமே தலைவிக்குக் கையும் ஓடாது காலும் ஓடாது. மனம் வேதனைக் கடலில் மூழ்கிவிடுகின்றது. சங்ககாலத்தில் ஆறலை கள்ளர்கள் வழிப்பறி செய்யும் பாலை நிலத்தைக் கடந்து செல்லப்போகின்றான் என்று கேட்டதுமே, அவளது கவலை மேலும் அதிகரிக்கின்றது. பாலைநிலத்து ஆறலை கள்வர்கள் கொடுமையானவர்கள். மற்றவர்களைக் கொல்வது அவர்களது இன்பமான பொழுதுபோக்கு. கொலைவெறி தாண்டவமாடும் அவர்களது கண்கள் கொடும்புலியின் கொலை வெறிப்பார்வை அவளது மனக்கண்முன்னே தோன்றுகின்றது. அவளது உடல் நடுங்கி வெடுவெடுக்கின்றது. எனது தலைவன் போகாமல்விட்டால் என்ன? பொருள் ஈட்டுதல் தலைமகனின் முக்கிய பணி. அந்தப்பணியைத் தவிர்த்தால் மாதவிபால் காதலால் கட்டுண்டு கிடந்த கோவலன் பொருளின்றி ஏழ்மைநிலையை அடைந்த நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதனை உணர்ந்திருந்தும் அவளால் கணவனைப் பிரிந்துவிட மனம் ஒப்பவில்லை. கலித்தொகையில் வரும் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

கணவன் எவ்வாறாயினும் பிரிந்துசெல்லப் போவதனைத் தோழிவாயிலாகக் கேட்ட தலைவி அவளுக்குத் தான் கணவன்பால் பெற்ற காமக்கிளர்வின் இன்ப நுகர்வைத் தன் தலைவன் தன்பால் கொண்ட அன்பால் அவன் மேற்கொண்ட இன்பவியல்பற்றி தனது தோழியோடு பகிர்ந்துகொள்கின்றாள்

வலிமுன்பின், வல்லென்ற யாக்கைப் புலிநோக்கின்
கற்றமை வில்லர், கரிவளர் பிததையர்,
அற்றம்பார்த்து அல்கும் - கடுங்கண் மறவர்தாம்
கொள்ளும் பொருளில ராயினும், வம்பலர்
துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்துஉயிர் வௌவலின்,
புள்ளும் வழங்காய் புலம்புகொள ஆரிடை
வேள்வேல் வலத்திர் பொருள்தரல் வேட்கையின்
உள்ளினிர் என்பது அறிந்தனன் என்தோழி
காழ்விரி கவையாரம் மீவரும் இளமுலை
போழ்துஇடைப் படாஅமல் மயங்கியும் அமையார். என்
தாழ்கதுப்பு அணிகுவர் காதலர் மற்றுஅவர்
சூழ்வதை எவன்கொல் அறியேன் என்னும்
முள்உறழ் முனைஎயிற்று அமிழ்தூறும் தீநீரைக்
கள்ளினும் மகிழ்செயும் எனஉரைத்தும் அமையார் என்
ஒள்இழை திருத்துவர் காதலர் மற்றுஅவர்
உள்ளவது எவன்கொல் அறியேன் என்னும்
நுண்எழில் மாமைச் சுணங்குஅணி ஆகம்தம்
கண்ணொடு தாடுத்தென நோக்கியும் அமையார், என்
ஒண்ணுதல் நீவுவர் காதலர் மற்றுஅவர்
எண்ணுவ தெவன் கொல் அறியேன் என்னும்

எனவாங்கு
கழிபொரு நல்கல்ஒன்ற உடைத்தனள என்தோழி
அழிவொடு கலங்கிய எவ்வத்தள் ஒரு நாள்நீர்
பொழுது இடைப்பட நீப்பின் வாழ்வாளோ
ஒழிகினிப் பொரும நின் பொருட்பிணிச் செலவே.

என் தலைவன் முத்துவடம் (காழ்விரி கவையாரம்) புரளும் என் மார்பகத்தை இறுகத் தழுவி இன்பம் கண்ட பின்னரும் காமவேட்கை தணியாதவராக எனது நீண்ட கூந்தலைக் கோதி அதிலும் இன்பமடைவார். அவரது உள்ளத்தை நான் புரிந்து கொள்ள முடிய வில்லையே தோழி! எனக்குறிப்பிடும் தலைவி மேலும்

என் அன்புக்குரிய என் தலைவர் இத்தோடு அமையாமல் எனது முத்துப்போன்ற (முள்உறழ் முனைஎயிற்று) பல்வரிசைகளிடையே ஊறிவரும் உமிழ்நீரை அமிழ்தம் எனப் பருகிமகிழ்ந்தார். முத்தக்காட்சிகளை நினைவுக்கொண்டுவருகின்றதே சங்ககாலத்துக் காதல். அப்பாடா இந்தப்புலவனின் காமக்கிளர்வு எத்துணை கூரிய அனுபவ ஆற்றலுடையதாக உள்ளது.

அத்தோடு நின்றுவிடாது என் தலைவர் எனது ஆபரணங்களைத் (ஒள்இழை) தானே சீர் செய்துவிடுகின்றார். அதிலும் என்னை அழகுபடுத்திப்பார்ப்பதிலும், என்னைத் தீண்டுவதிலும் வேட்கை தணியாதவராகவே காணப்படுகின்றார். அவரது எண்ணம் எத்தகையது என்பதனை என்னால் உணர்ந்துகொள்ள முடியவில்லையே!

அதுமட்டுமா எனது தேமல் படர்ந்த மார்பகங்களை மிகவும் கூர்ந்து கண்வெட்டாது ஒரே பார்வையாகப் பார்த்து நிற்கின்றாரே அது ஏன் தோழி என்னால் அவர் மனதைப் புரிந்துகொள்ள முடியவில்லையே!

அதன்பின்னர் எனது நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளைத் தனது கைகளாலேயே துடைத்துவிட்டு மேலும் பார்துக்கொண்டு இருந்தாரே அதற்குமேலும் அவர் என்னிடம் என்னத்தைத்தான் எதிர்பார்க்கின்றார் தோழி! எனக்கு அவரது மனதைப் புரிந்துகொள்ளமுடியவில்லையே! என்று தலைவி நீ பிரிந்துசென்றால் உங்கள் இன்ப விளையாட்டுக்களை எண்ணி ஏங்குவாளே! நீ இதற்கு என்னதான் பதில் சொல்லப்பேகின்றாய், பிரிந்துசெல்லத் துணிந்துவிட்டாய்! அவள் பாவம் என்கின்றாளோ தோழிக்காகப் பரிதாபப்படும் தோழி! மோகம் முப்பது நாட்கள் என்பார்களே அதனைப் பொய்யாக்கிவிட்டார் புலவர். ஆம் மோகம் நீண்டு செல்கின்றதோ? பொருள் தேடுதலைவிட உனது தலைவி யின் துயரத்தைத் துடைத்தற் பொருட்டு நீ செல்லாது விடுவதே நன்று எனக் கூறுகின்றாள். அது மட்டுமன்றி அங்கே காணப்படும் உள்ளுமம் உனது காமவேட்கையை அவள் தீர்ப்பதற்குத் தயாராகிவிட்டாளோ? அல்லது தீரவில்லை என எண்ணுகின்றாளோ?

# பெண்களின் அழகு சாதனத்தில் தாஜ்மகால் நிவாரணம்

மாசுபடிந்த தாஜ்மகாலின் கோபுரங்களை எவ்வாறு பொலிவுறச் செய்வது என மண்டையை உடைத்துக் கொண்டிருந்த விஞ்ஞானிகள் இப்போது பெருமூச்சு விடலாம். பண்டைய காலத்தில் இந்திய, பாகிஸ்தான் பெண்கள் பாவித்த முக அழகுக் கலவை காதலுக்குச் சின்னமான தாஜ்மகாலின் அசுத்தத்தைப் போக்குமென கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது.

முல்தானி மிற்றி (Multani Mitti) அல்லது முல்தான் சகதி என்று அழைக்கப்படும் இக் கலவை தாஜ்மகாலில் பிடித்துள்ள சல்பேற்றுக்களையும் காபனேற்றுக்களையும் அழிக்கவல்லதாம்.

சுற்றுப் புறத்திலுள்ள தொழிற்சாலைகள் வெளியேற்றும் இரசாயன வாயுக்கள் உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலின் பளிங்குக் கற்களில் படிந்து அவற்றின் வெண்மையைப் பறித்துவிட்டன. மண்ணிறம் படிந்து விட்ட தாஜ்மகாலை இந்த இரசாயன வாயுக்களிலிருந்து காப்பாற்ற இந்திய மத்திய, மாநில அரசுகள் எடுத்த முயற்சிகள் இதுவரை முற்று



முழுதாக பலனளிக்-கவில்லை.

தாஜ்மகாலின் புனிதத்தை மீண்டும் வெளிக்கொணருவது பற்றி ஆராய்ந்த விஞ்ஞானிகள், புதிய தொழில்நுட்பம் பற்றி ஆராய்வதை விடுத்து பண்டைய இந்திய, பாகிஸ்தான் கலாசாரங்கள் பக்கம் தம் பார்வையைத் திருப்பினர். பண்டைய காலத்தில் சேற்றுக் கலவையொன்றைப் பாவித்து இப்பிராந்தியங்களிலுள்ள கட்டிடங்கள் பாதுகாக்கப்பட்டனவாம். எனினும் இக்கலவை பற்றி மேலதிக-விபரங்கள் அவர்களுக்குக் கிடைக்காத நிலையில் முல்தான் கலவை பக்கம் அவர்கள் தம் பார்வையைத் திருப்பினார். மண், தானியங்கள், பால் மற்-றும் சுண்ணாம்பு நிறைந்த இச் சேற்றுக் கலவையை குறிப்பாக சுண்ணாம்பு நிறைந்த பாகிஸ்தானிய பிராந்தியமொன்றில் வாழ்ந்த பெண்கள் தமது முகப் பொலிவை நீடிக்கச் செய்யப் பாவித்து வந்தனராம்.

இக்கலவை ஏற்கனவே தாஜ்மகாலின் உட்புறத்தில் வெற்றிகரமாகப் பாவிக்கப்பட்டு விட்டது. தூரிகை மூலம் இக் கலவை பூசப்பட்டு, 24மணிநேரத்தின் பின்னர் வெந்நீரால் கழுவ, அழுக்குகள் அகன்று பளிங்கு மீண்டும் பளிச்சிடத் தொடங்கியது.

இச் சேற்றுக் கலவையின் மகிமையை அறிந்து கொண்ட இத்தாலிய விஞ்ஞானிகள், ரோமிலும் புளோரன்ஸ் நகரிலும் அழுக்கினாலும், இரசாயன வாயுக்களினாலும் பாதிக்கப்பட்டுள்ள பளிங்குச் சிலைகளைப் பாதுகாக்க இதனைப் பயன்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். நன்றி: உலகத்தமிழோசை

# ஹவாய் தீவுகள் - 2 சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம்

- துறையூரான் -

முதல் நாள் பிற்பகல் நாமெல்லோரும் நெருப்பு நடனம் அல்லது ஜெர்மெயின் விருந்து என்ற நிகழ்ச்சிக்குச் சென்றோம். ஹானொலுலுவுக்குப் போகும் சுற்றுலாப் பயணிகள் யாவரும் செல்லும் ஒரு முக்கிய விருந்தாகக் கருதப்படுகிறது. இதனை 'லுவாவு' என ஹவாய்மொழியில் அழைக்கிறார்கள். இதன் அர்த்தம் விருந்து அல்லது கொண்டாட்டம் ஆகும். இது முதன் முதலில் 1970 இல் ஆரம்பிக்கப்பட்டது. இது பாபர் வெளிச்ச வீட்டுக்கு அண்மையிலுள்ள கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே ஹவாய் நாட்டின் கலாச்சார நடனங்களையும் உணவையும் சுற்றுலாப்பயணிகள் கண்டும், உண்டும் கழிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்கு பிற்பகல் 5 மணியளவில் ஒரு பஸ் வந்து எங்கள் யாவரையும் அவ்விடத்துக்கு அழைத்துச் சென்றது. நுழைவுக் கட்டணமாக பஸ் பிரயாணம் உட்பட $53 வாங்குகிறார்கள். பஸ் பிரயாணம் ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்துக்கு மேல் செல்லும். இவ்விடம் நகரிலிருந்து கிராமப் பகுதிக்குச் செல்லும் வீதியில் சென்று ஒரு கடற்கரையின் அருகே அமைத்திருக்கிறார்கள். வழியிலுள்ள முக்கிய இடங்களை விபரிப்பதற்காக ஒரு வழிகாட்டிப் பெண்ணும் எங்களோடு பஸ்சில் பிரயாணஞ் செய்தார். பெரும்பாலும் வழிகாட்டிகளாகப் பணியாற்றுபவர்கள் பல்கலைக்கழக மாணவர்களே. நாங்கள் பஸ்சிலிருந்து இறங்கியவுடன் யாவருக்கும் சோகிகளால் செய்யப்பட்ட மாலைகளைத் தந்தார்கள். அங்கு ஒரு குடிசையில் திறந்த வெளி மேடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு எதிரில் இன்னுமொரு கட்டிடத்தில் குளிர்பானங்களும் மதுபானங்களும் வழங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த இரு கட்டிடங்களுக்குமிடையிலிருந்த மணற் பரப்பின் மேல் வரிசையாக மேசைகளும் வாங்குகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அன்று சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் அங்கு கூடியிருந்தனர். ஏறக்குறைய முந்நூறு பேரளவில் இருந்திருப்பார்கள். ஒவ்வொருவருக்கும் இரண்டு சீட்டுகள் கொடுத்தனர். அதைக் கொடுத்து நீங்கள் விரும்பிய பானத்தை இலவசமாய் பெற்றுக்கொள்ளலாம். எங்களை வரவேற்பதற்கு அழகிய இளம் பெண்கள் அரைகுறை ஆடையில் ஆங்காங்கே நின்று கொண்டிருந்தனர். இவர்கள் பின்னர் மேடையில் ஏறி ஹவாய் தீவுகளின் வெவ்வேறு தேசிய நடனங்களை ஆடினர். குறிப்பாக இடுப்பை வேகமாக ஆட்டி ஆடுவது பெரும்பாலும் எல்லா நடனங்களிலும் சிறப்பம்சமாக இருந்தது. அரையில் சிறு துண்டைக் கட்டிக் கொண்டு அதற்குமேல் இலைகுழை களோடு சிலர் நடனமாடினர். எங்களுக்கு ஒதுக்கப்பட்ட மேசைகளில் அன்னாசிப் பழங்கள் சிறு துண்டுகளாக நறுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவை நல்ல ருசியாக இருந்தன என்று சொல்லவும் வேண்டுமா? முன்பெல்லாம் ஹவாய் தீவுகள் அன்னாசிப்பழத்துக்குப் பெயர் போனவை. ஆனால் தற்போது அன்னாசிப் பழச் செய்கை செலவு மிக்கது என கைவிடப்பட்டு விட்டது. பிலிப்பீன்ஸ் போன்ற வேறு நாடுகள் மலிவாக அவற்றைப் பயிரிட்டு வெளியேற்றுவதால் இத்தீவுகளில் பயிர்ச் செய்கை கைவிடப்பட்டு விட்டது.



இங்கு நடைபெற்ற நடனங்களை ஹாலா நடனம் என அழைக்கிறார்கள். ஒவ்வொரு தீவுக்கும் ஒரு சிறப்பான நடனம் இருக்கிறது. இத்துடன் பீஜி, ராஹிற்றி (Tahiti), சமோவா போன்ற பிற பசுபிக்குத் தீவுகளின் நடனங்களும் ஆடப்பட்டன. ஆண்களும் பெண்களும் அரைகுறை ஆடையில் ஆடிய நடனங்களை யாவரும் கைதட்டி ஆரவாரித்துக் கண்டு களித்தனர். ஒவ்வொரு நடனமும் ஆரம்பிக்க முன்னர் அதைப்பற்றி ஆங்கிலத்தில் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் விபரித்தனர். ஹவாயில் எங்கு சென்றாலும் நாம் வணக்கம் சொல்வது போன்று 'அலோஹா' என்று கூறி வரவேற்கிறார்கள். அன்றைய நடனங்களின் போதும், ரசிகர்களை உற்சாகப்படுத்துவதற்காக அடிக்கடி 'அலோஹா' என அறிவிப்பாளர் கூறிக் கொண்டிருந்தார். நடனங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மேடையின் பிற்பகுதியில் மேளமடிப்பவர்களும் வெவ்வேறு தேசிய வாத்தியக்காரரும் அமர்ந்து இசைக் கருவிகளை வாசித்துக் கொண்டிருந்தனர். நாகரிக உலகின் முன்னேற்றத்தினால் பண்டைய கலைகள் அழியாமல் பாதுகாக்கப்படும் இம்முயற்சி பாராட்டுக்குரியதே. எமது தாயகத்திலும் இவ்வாறான கலைகளைப் பிற நாட்டவருக்கு அறிமுகஞ் செய்து வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அருமையான இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடங்கள் எம்மிடம் நிறையவே உள்ளன.

அடுத்து இங்கே ஹவாய் நாட்டுத் தெய்வங்களுக்கு காணிக்கையாகச் செலுத்தப்படும் 'கலுவா பண்டி' (Kalua pig) தயாரிக்கும் முறையைச் செய்து காண்பித்தனர். காட்டுப்பண்டியைக் கொன்று அதன் குடலை வெளியே எடுத்து விட்டு அதற்குள் பலசரக்குப் பொருட்களை வைத்து மூடிவிட்டு, ஒரு கம்பி வலையின் மீது அதை வைத்து அப்படியே மண்ணுக்குள் புதைத்து விட்டு மேலே விறகுகளை மூட்டி விடுகிறார்கள். இரண்டு மூன்று மணித்தியாலங்களின் பின் எரிந்த சாம்பலையும் மேலுள்ள மண்ணையையும் அகற்றி விட்டு கிடங்கிலிருந்து அப்பண்டியின் உடலை கம்பியைப் பிடித்து வெளியே தூக்கி எடுத்தனர் இரு பலசாலிகள். நாமெல்லோரும் பண்டியின் உடலை வெளியே எடுத்தபோது பார்த்துக் கொண்டிருந்தோம். திருவிழாக்களிலும் பண்டிகைகளின் போதும் இவ்வாறு பண்டிகள் தயாரிக்கப்படுகின்றன. வெளியே எடுத்த பண்டியின் உடல் நன்கு வெந்து தசைகள் தோலைவிட்டு கழன்று இருந்தன. எலும்புகளும் தனியாக இருந்தன. தசைகளை ஒரு பாத்திரத்தில் எடுத்துச் சேர்த்தனர்.

அதன் பின்னர் யாவருக்கும் விருந்தளிக்கப்பட்டது. உணவு வகைகள் மேசைகள் மீது அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பெயர் பலகைகளும் அவற்றுக்கு மேலே தொங்கிக் கொண்டிருந்தன. தேசிய உணவுகளும் மேலைத்தேய உணவுகளும் வைக்கப்பட்டிருந்தன. தேசிய உணவில் 'போய்' என்ற ஒரு கிழங்கு சிறப்பான நாளாந்த உணவு எனக் கூறப்பட்டது. அதன் நிறம் இராச வள்ளிக்கிழங்கை நினைவு படுத்தியது. சீனி சேர்க்கப்படாத-தால் சாடையான புளிப்பும், இனிப்பும் கலந்ததாய் இருந்தது. மரக்கறி உணவுகள் குறைவாயிருந்தன. ஆனால் மாமிச, கடலுணவுகள் வகைவகையாக இருந்தன.

சாப்பாட்டின் பின்னரும் சில நடனங்கள் இடம் பெற்றன. பார்வையாளரையும் மேடைக்கழைத்து நடனத்தைப் பழக்கினார்கள். கோப்பி, தேநீர், குளிர்பானங்கள் தாராளமாகப் பரிமாறப்பட்டன. மொத்தத்தில் இது ஒரு புதிய அனுபவமாக இருந்தது. இரவு பத்து மணிக்குமேல் ஹோட்டலுக்கு வந்தோம். அடுத்த நாள் காலை அத்தீவிலுள்ள சுற்றுலாப் பயணிகள் அதிகமாகச் செல்லும் இடங்களைப் பார்ப்பதற்கு பஸ்சில் புறப்பட்டோம். எங்கும் பச்சைப் பசேலென்று தாயகத்தில் காணப்படும் தென்னை, சிதம்பரத்தை, வாழை, குரோட்டன், கடதாசிப் பூ, மணிவாழை போன்ற மரங்கள் வழிநெடுகலும் நிறைந்திருந்தன. வானாளவிய கட்டிடங்களைச் சுற்றி அழகான பூந்தோட்டங்கள் காட்சியளித்தன. நாங்கள் சென்றபோது காலநிலையும் சிறப்பாக இருந்தது. பெரும்பாலும் அங்கு மழைக் காலமாக இருந்தபோதும் வெயில் நன்கு எறித்தும் இடைக்கிடை மப்பும் மந்தார-மாகவும் இருந்தது. மனதுக்கு நிறைவைத் தந்தது. பசுபிக்மாகாண சமுத்திரத்தில் கிளம்பிய தீவாதலின் மலைகளுக்கு அருகிலேயே கடற்கரையும் காணப்பட்டது. கடல்மேற்பரப்பு நீலநிறமாகக் காட்சியளித்தது. முதலில் ஒரு வளைகுடாப் பிரதேசத்தைச் சென்று பார்த்தோம். கரையில் கற்பாறைகள் நிறைந்திருந்ததால் இது குளிப்பதற்கு ஏற்ற இடமாக இருக்கவில்லை. ஆனால் இயற்கையின் வனப்பை யாவரும் கண்டு களித்தோம்.

அங்கிருந்து பியோடா கோவில் எனப்படும் புத்த கோவிலுக்குச் சென்றோம். இது 200 அடி உயரமான கூலாவு மலையடிப் பள்ளத்தாக்கில் கட்டப்பட்டுள்ளது. இது ஹவாய் தீவிலுள்ள கரும்புத் தோட்டங்களில் வேலைக்கு வந்த ஜப்பானியர்களால் 100 ஆம் ஆண்டு நினைவாக 1960 இல் கட்டப்பட்டது. இது 750 ஆண்டு பழமை வாய்ந்த ஜப்பானிலுள்ள உஜி என்னுமிடத்திலுள்ள கோவிலின் மாதிரியைப் பின்பற்றிக் கட்டப்பட்டுள்ளது. அழகான மரவேலைப் பாடுகளையும், ஜப்பானிய கட்டிடக் கலைவண்ணத்தையும் காட்டும் வண்ணக் கோவிலாகக் காட்சியளிக்கிறது. இதன் சுற்றாடல் மிகவும் நன்கு அழகிய பூமரங்களாலும் பிறவண்ணச் செடிகளாலும் அலங்கரிக்கப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகிறது. ஜப்பானியரின் தோட்டக்கலைக்கு இது சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. கோவிலுக்குப் போவதற்கு ஒரு அழகான மரப்பாலத்தைக் கடந்து செல்ல வேண்டும். கோவிலைச் சுற்றி நீரோடை அமைத்துள்ளார்கள். அங்கே பலவண்ண மீன்களைக்

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.

Classes available at **Scarborough & Stouffville**

**Contact: 647.340.9490 / 647.831.0363**

# உலகத்தை மாற்றிய நான்கு பெண்கள்

இப்பெண்கள் பர்மா, அமெரிக்கா, பிரான்ஸ், கென்யா என நான்கு வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்தார்கள். இவர்களில் இருவர் அரசியல்வாதிகள். இருவர் நோபல் பரிசுபெற்றவர்களும் சொந்த அமைப்புக் களின் தலைவர்களும் ஆவர்.

இவர்கள் Aung San Suu Kyi, Hillary Clinton, Christine Lagarde, மற்றும் Wangari Maathai ஆகிய நான்கு




பெண்கள். இவர்களுக்கு இடையே பெரும் வித்தியாசங்களுண்டு. ஆனால், இவர்களுக்கு இடையில் ஒரு விடயத்தில் ஒற்றுமையும் உண்டு. கடந்த 20 வருடங்களில் இப்பெண்கள் ஒவ்வொருவரும் உலகத்தை மாற்றிய பேச்சுக்களை நிகழ்த்தியுள்ளார்கள். பலகாலமாக பெண்களுக்கு சுதந்திரமாக பேசுவதற்கு ஆண்களை விட சந்தர்ப்பம் குறைவு. இதனால் இந்த உலகத்தை மாற்றிய பேச்சுக்களை நிகழ்த்தியதற்காகவே இப்பெண்கள் உலகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாக இருக்கின்றனர்.

இப்பேச்சுகளால் நாம் எவ்வாறு வடிவாக மேடையில் பேசலாம் என்று அறியலாம். Aung San Suu Kyi அவரது நாட்டின் சொந்த அரசியல் பிரச்சினைகளை எல்லோரும் புரியும்படி செய்தார். Hillary Clinton பெண்களின் உரிமைப் பிரச்சினைகளை ஆதாரமுடன் கூறினார். Christine Lagarde நிதித்துறையில் பெண்கள் பிரச்சினைகளை எந்தப் பெண்ணுக்கும் விளங்குமாறு கூறினார். Wangari Maathai நீதிக்கதைகள் கூறி தனது பேச்சை கேட்பவர்களை ஊக்குவித்தார்.

இப்பேச்சுகளில் இன்னும் ஓர் ஒற்றுமை உண்டு. அது பேசியவர்களின் துணிவும், தைரியமும் ஆகும். Bejing இல் நடைபெற்ற ஐ.நா. சபை மாநாட்டில் Clinton பேசிய போது, அக்கணம் சீனாவில் மனித உரிமைக்கு எதிரான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்றார். Suu Kyi பர்மிய இராணுவத்தின் முயற்சிகளுக்கு எதிராக பர்மாவிலேயே பேசினார்.

ஒவ்வொருவரும் கடினமான பார்வையாளர் களுக்கு முன் கஷ்டமான விடயத்தைப் பற்றி பேசினர். Aung San Suu Kyi '**பயத்திலிருந்து விடுதலை வேண்டும்**' என்றார். 1990 இல் அவர் 'It is not power that corrupts, but fear' என்றார். இவர் இப்போதைய பர்மாவை உருவாக்கிய Aung San னின் ஒரே மகள். இவரின் தந்தை பின்னர் கொலை செய்யப்பட்டார். Suu Kyi க்கு எதிரானவர்கள் 1990 இல் அவரை அடுத்த 21 வருடங்களில் 15 வருடம் வீட்டுக் காவலில் வைத்தனர். இவர் ஜூன் 2012 இல் தனக்கு 21 வருடங்களுக்கு முன்னர் கிடைத்த நோபல் பரிசைப் பெற்றார்.

Hillary Clinton - '**பெண்களின் உரிமையும் மனித உரிமை**' என்றவர். 1995 இல் Bejing இல் நடைபெற்ற பெண்களைப் பற்றிய நான்காம் உலக மகாநாட்டில் பேசினார். அவர் பெண்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை பற்றி நிறைய பேசினார். இதைக் கேட்டு பலர் கத்தினர், சிலர் மேசையில் அடித்தனர். அவர் இதில், 'Human rights are women's rights' என்றார். இது இப்போது பிரபலமாக இருந்தாலும், அப்போது அவர் அதைக் கூறிய முதலாவது முக்கிய அரசியல்வாதி ஆவர்.

Christine Lagarde - '**நான் இன்று ஒரு பெண்ணுக்கு உதவினேனா?**' எனக் கேட்டவர். இவர் சர்வதேச நாணய நிதியத்தின் முதல் பெண் தலைவராக இருந்தவர். இவர் ஆங்கிலம் பேசக்கூடிய பிரான்ஸ் நாட்டவர். 2010 இல் பிரான்ஸில் நடைபெற்ற Global Women's forum இல் அவர் 'சர்வதேச நிதித்துறையில் வேலை செய்யும் ஒரு சில பெண்களில் தான் ஒருவர் என்றார். தனது பேச்சில் 'Did I today help another woman?' என்ற கேள்வியை தான் ஒவ்வொரு நாளும் கேட்பதாகவும் கூறி மற்றைய பெண்களும் இதைச் செய்ய ஊக்குவித்தார்.

Wangarl Maathai - Hummingbird கதையை கூறியவர். Maathai பெண்களுக்கு வேலை கொடுத்தும், மரங்கள் நடுவதை ஊக்குவித்து மண் அரிப்பை தடுக்கும் ஒரு நிறுவனத்தை தொடக்கினார். அது 900,000 பெண்களுக்கு மரம் நடுவதற்கு சம்பளம் அளித்தது. இதனால் 2004 இல் நோபல் பரிசு பெற்றார். அவரது பேச்சுக்களில் ஒரு கதையை கூறுவார். அதில் ஒன்று 'ஒரு சிறு Hummingbird காட்டுத்தீயை அணைக்க தனது வாயில் நீரை எடுத்து அதை நெருப்பில் ஊற்றியது. மற்ற மிருகங்கள் அதைக்கேட்டபோது, அது என்னால் முடிந்த அளவு செய்கின்றேன் என்றது' என்பது அந்தக்கதை. Maathai கேட்பவர்களுக்கு ஏற்ப பேச்சுக்களை பேசினார். இதனால் அவரது பேச்சுக்கள் உலகெங்கும் பிரபலமானது.

'Be a hummingbird in you community' என்றார் அவர். இக்கதையைக் கேட்டு யார் 'மாட்டேன்' என்பார்கள் ?

நன்றி: ToastMaster



ஞா. ஆரணி
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# ஹவாய் தீவுகள்...




காணக்கூடியதாய் இருந்தது. இவை நிறையக் காணப்படுகின்றன. இவற்றை எவரும் பிடிக்க முடியாது. அத்துடன் வாத்து, குருவி போன்ற பல பறவையினங்களும் இங்கே அதிகளவில் காணப்படுகின்றன. கோவிலின் இடது பக்கத்தில் ஒரு பெரிய மணி காணப்படுகிறது. இதற்குத் தனியாக ஒரு சிறிய கோபுரம் அமைத்திருக்கிறார்கள். மணிக்கு அருகில் பெரிய மரக்குத்தி தொங்குகின்றது. இதனை ஓங்கி அசைத்து மணியை அடிக்கலாம். இந்த மணியின் ஓசை அங்குள்ள சுற்று வட்டாரங்களில் கேட்கும். இதனைச் சமாதான மணி என அழைக்கிறார்கள். இச்சமாதான மணிக்கு அருகில் தியான மண்டபம் உள்ளது. இக்கோவிலின் சுற்றாடலும் அமைதியும் அழகும் மனதுக்கு நிம்மதியைச் தருகின்றன.

கோவிலின் உள்ளே விசாலமான மண்டபத்தில் அமர்ந்த நிலையிலுள்ள பொன்னிறமான புத்தர்சிலை ஒன்று உள்ளது. இங்கு மதவேறுபாடின்றி யாவரும் சென்று வழிபடலாம். பாதஅணிகள் அணிந்து உள்ளே செல்வதற்கு அனுமதி கிடையாது. கோவிலின் உள்ளேயும் வெளியேயும் அமைதியான சூழல் நிலவுகிறது. கோவிலின் வலது பக்கத்தில் பரிசுப் பொருட்கள் விற்கும் கடையொன்றுள்ளது. இதனை ஒரு ஜப்பானித் தம்பதியர் நடத்துகின்றார்கள். இங்கு ஜப்பானிய, சீன கைவேலைபாட்டுப் பொருட்களை வாங்கலாம். இது கட்டாயம் பார்க்க வேண்டிய ஓரிடம்.

தொடரும்...

@ GTA Square
TUTORING
Saturday & Sunday 9:00 To 11:00
• Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour)
• Advanced Functions - Grade 12 ($15 Per Hour)
• Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour)
Kamal: 416.696.5007 / 647.268.5007
15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)



# கமிராவுக்கும்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

கூறியவர் அங்கே ஒரு மிகவும் தரம் வாய்ந்த கமிராவை வாங்கிக் கொடுத்தார். நான் அது தேவையில்லை என எத்தனை முறை கூறியும் அவர் விடுவதாயில்லை. நான் தேவையில்லை எனக்கூறியது யதார்த்தம். ஆனால் நான் தன்னடகத்தால் கூறினேன் என எண்ணி வலுக்கட்டாயமாகக் கமிராவை என் தலையில் திணித்து விட்டார். 500 டொலர் கொடுத்தார். விதியே என்றபடி கமிராவுடன் ரொறன்ரோ வந்து சேர்ந்தேன். பிள்ளைகளுக்குப் பரம ஆச்சரியம். 70 வயது அப்பா முதல் முறையாகக் கமிராவுடன் பிரசன்னமானால் யாருக்கு ஆச்சரியமாக இருக்காது. எட அப்பா ஒரு நல்ல கமிராவுடன் வந்துள்ளாரே என உல்லாசக் குரல் கொடுத்தார்கள். மெள்ளக் கமிரா கைக்கு வந்த கதையினை எடுத்துரைத்தேன். உங்களுக்கும் இதற்கும் எட்டாப் பொருத்தம் என்பது அவருக்குத் தெரியாதது அவர் குற்றமில்லை என நையாண்டி செய்தவர்கள் அதனை இடையிடையே உபயோகிக்கத் தவறவில்லை.

நான் இங்கிலாந்து, பிரான்ஸ் போக வேண்டி வந்தது. அப்பா கமிராவையும் எடுத்துச் செல்லுங்கள் என்றனர். அதெல்லாம் தேவையில்லை என மழுப்பினேன். ஆங்காங்கே உள்ள உறவினர்களையாவது படமெடுத்துக் கொண்டு வாருங்களேன். அவர்களைப் படத்திலாவது நாம் பார்ப்போமே என்றார்கள். தங்களை விட்டு நான் அடிக்கடி பிரயாணம் செய்வது அவர்களுக்கு ஓரளவு பொறாமை உணர்வை ஏற்படுத்தியுள்ளதை உணர முடிந்தது. உண்மையைச் சொல்லப் போனால் இத்தனை காலத்துக்குப் பின்னர் இத்தனை வயதிலே கமிராவினைக் கையில் தூக்கியபடி எங்கும் செல்வது எனக்குக் கூச்சமாக இருந்தது. எனக்குக் கையாளத் தெரியாதே என்றேன். அவர்களோ விடுவதாயில்லை நாங்கள் சொல்லித் தருகிறோம் என்றார்கள். ஏதோ சொல்லியும் தந்தார்கள். ஒரு காதால் வாங்கி மறுகாதால் விட்டேன். அங்கே இடையிடையே சார்ஜ் பண்ண வேண்டும். அதற்கான கருவி இல்லையே என ஆபத்பாந்தவனாக பாலா தன்னிடம் உள்ளது தந்து உதவலாம் என்றார். உபத்திரவத்துக்காக என்னுடன் அதுவும் பிரயாணம் செய்தது. இலண்டனில் இருக்கும்வரை அது சிறைவாசிதான். பொதியை விட்டுத் தலையை வெளிக் காட்டவில்லை. பிரான்ஸ் போன பொழுது அது சிறையிலிருந்து வெளியேற வேண்டிய தேவை ஏற்பட்டது. இலண்டனில் நான் அதிகமாக உறவினர்கள் வீடுகளுக்குச் செல்ல முடியாதபடி எனது பழையமாண-வர்கள் செய்து விடுவார்கள். ஆகவே அவர்களில் பெரும்பாலோர் கனடா வந்தே என்னைப் பார்ப்பார்கள். பிரான்சில் உள்ள உறவினர்கள் இந்தப் பக்கம் வந்ததில்லை. ஆகவே அவர்களை எனது பிள்ளகைளுக்கு படம் மூலம் தான் அறிமுகம் செய்ய வேண்டும். அங்கே கமிராவை எடுக்கு முன்னரே வீட்டுப் பிள்ளைகள் பாய்ந்து பிடித்து நீங்களும் உட்காருங்கள் நாங்கள் எடுக்கிறோம் எனக் கூறி என் பிரச்சினை-யத் தீர்த்து விடுவார்கள். எப்படியோ ஒரு சில படங்களுடன் வீடு வந்து சேர்ந்தேன்.

அமெரிக்காவின் சின்சினாற்றியில் எனது மருமகள் உள்ளாள். வருடத்திற்கொருமுறை நாம் அங்கே செல்வது வழக்கம். இம்முறை எனக்கு இங்கு வேறு வேலைகள் இருந்தமையால் எனது மகள் இருவருமே சென்றனர். எனது கமிராவும் அவர்களுடன் சென்றது. ஆனால் திரும்பி வரவில்லை. அவர்கள் அங்குள்ள ஆற்றினிலே ஓடத்தில் செல்கையில் என் மகளின் கைகளில் இருந்து தவறி அது ஆற்றில் விழுந்து தனது ஆயுசை அற்பத்தில் முடித்துக் கொண்டது. அப்பா உங்களுக்கு நாங்கள் ஒன்று புதிதாக வாங்கித் தருகிறோம் என்றனர் ஏகோபித்த குரலில் இருவரும். பரவாயில்லை விடுங்கோ என்றேன். மறந்து போயிருந்தவர்களுக்கு கமிரா நினைவு மீண்டும் வருவதற்கு எனது நூல் வெளியீடு காரணமானது. ரொறன்ரோவில் செப்ரம்பர் 9இல் வெளியீடு நடத்திய பின்னர் இங்கிலாந்து, நோர்வே, கொழும்பு, யாழ்ப்பாணம், பாரிஸ், ஒல்லாந்து, ஜெர்மனி ஆகிய இடங்களில் வெளியீடு வைப்பதற்கான ஆயத்தங்களையும் செய்தேன். கொழும்பு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு என்னுடன் பிள்ளைகள் வருவதாக திட்டமிட்டோம். இப்போ நாடகத்தில் மகனும் பங்கெடுத்தான். அப்பாவின் வெளியீடு எல்லா நாடுகளிலும் நடக்கப் போகிறது, அந்தப் படங்களை நாம் பார்க்க வேண்டும். ஆகவே மூவருமாக அப்பாவிற்கு ஒரு கமிரா வாங்கிப் கொடுப்போமே என்றான். என் மூத்த மகள் பிடிவாதக்காரி. நான் எத்தனை சொல்லியும் அவள் அசைந்து கொடுக்கவில்லை. ஹோம் டிப்போவிற்கு வரத்தான் வேண்டும் என அடம் பிடித்தாள். வேறு என்ன செய்வது ஒரு சுகபோகசுப தினத்தில் சூழ்நிலைக் கைதியாக இருவரும் படைசூழ ஹோம் டிப்போவிற்குத் திக்விஜயம் செய்தோம். அங்கே கமிரா விற்பனைப் பகுதிக்குச் சென்றோம். ஒத்துழையாமைப் போராட்டமே அங்கு நடைபெற்றது. அவர்கள் ஒவ்வொன்றினதும் இலட்சணங்கள் பற்றி வாசித்த பின்னர் ஒன்றைத் தேர்வு செய்ய அதை நான் மறுக்க, சர்ச்சையைப் பொறுக்க முடியாமல் விற்பனையாளரே இரண்டு முறை அவ்விடத்தை விட்டு நகர்ந்து விட்டார். எப்படியோ கமிராவும் அதன் சார்ஜ்ஜரும் என் வேண்டா வெறுப்பு, சட்டையின்றி என் தலைமேல் திணிக்கப் பட்டன. பிரயாணத்துக்கு முதல் நாள் இரவு எனக்கு படம் எடுப்பது பற்றி ஒரு வகுப்பு நடந்தது. எனது மூத்த மகளுக்குப் பொறுமை குறைவு. எனக்கு கணினி சம்பந்தமாக ஏதேனும் சொல்லித் தர வந்தாள் என்றால் எனது மாணவப் பருவத்தைச் சந்திக்கு இழுப்பாள். சின்னவள் கொஞ்சம் பொறுமைசாலி. வகுப்பு முடிந்தது. எனது ஞாபகசக்தி பற்றி ஏற்கனவே எழுதிவிட்டேன். எனது பிரயாணப் பொதியுள் சார்ஜ்ஜர் சகிதமாக கமிராவும் கௌரவமான ஒரு இடத்தைப் பிடித்தது.

இங்கிலாந்தில் இறங்கிய ஒரு வாரத்தின் பின்னர்தான் வெளியீடு. அதற்கான ஆயத்தங்களிலும் மகாஜனா வைபவங்களிலும் மும்முரமாகச் சம்பந்தப் பட்டேன். நூல் வெளியீட்டின் அன்று மருமகன் பவனிடம் கமிராவைக் கையாண்டு நிகழ்ச்சிகள் யாவற்றையும் பதிவு செய்யச் சொன்னேன். வெளியீடு நடந்து கொண்டிருந்தது. பகீரதன் ஓடி ஓடிப் படம் எடுத்தார். வேறு சிலரும் எடுத்தனர். பவன் மாத்திரம் அங்கு இங்கு நடந்ததைக் காணவில்லை. வீடு வந்ததும் பவனைக் கேட்ட பொழுது, மாமா இரண்டு படம் எடுத்த உடனேனே சார்ஜ் இல்லாமல் போய் விட்டது. ஒன்றும் செய்ய முடியவில்லை எனக் கைவிரித்தார். ஒரு வாரமாகக் கமிராவை சார்ஜ்ஜரில் போடாமல் இருந்த குற்றத்தை உணர்ந்தேன். நல்லகாலம் பகீரதன் தான் எடுத்த படங்களை ஒரு இறுவட்டிலே போட்டுத் தந்தார். பிள்ளைக-ளின் ரௌத்திரத்திலிருந்து காப்பாற்றப் பட்டேன். கமிராவை உடனடியாகவே சார்ஜ்ஜரில் போட்டு வைத்தேன். அடுத்து நோர்வே பயணம். என்னுடன் இராமநாதனும் வந்தார். கைப்பொதி மாத்திரமே பிரயாணக் கட்டணத்துடன் எடுத்துச் செல்லலாம். அங்கே சென்ற இரண்டாவது நாள் நூல் வெளியீடு. ஆயத்தங்களை இரகுபதி, இளவாலை விஜேந்திரன், சோதி நாதன் ஆகியோர் மிகக் கச்சிதமாகச் செய்திருந்தனர். வெளியீட்டிற்குப் புறப்படுகின்ற சமயம் எனது கைப்பொதியுள் கையை விட்டுத் தடவினேன். அகப்படவில்லை. என்ன சேர் தடவுறியள் என்றார் விஜேந்திரன். எனது கமிராவை அங்கே விட்டுவிட்டு வந்துவிட்டேன் போல என அசடு வழிய இழுத்தேன். பரவாயில்லை, சோதிநாதன் மிகத் திறமையாகப் படம் எடுப்பார் கவலையை விடுங்கள் என்றார். அது நிஜம். அன்றைய இரவே எடுத்த படங்களைச் சோதிநாதன் ருரியூப்பில் போட்டும் விட்டார். பிள்ளைகள் என்னை இலண்டன் வந்து சந்திப்பதற்கு முன்னரேயே நோர்வே படங்களைப் பார்ப்பதற்கு வழி செய்து விட்டார்.

பிள்ளைகள் இருவரும் இலண்டன் வந்தனர். மூத்தமகள் ஒரு சிறந்த கமிராவுடன் வந்தாள். ஆகவே கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடந்த வெளியீடுகளை அவர்கள் இருவரும் ஓடி ஓடி எடுத்த காரணத்தினால் எனது கமிராவைச் சீண்டுவார் இல்லை. நிம்மதியாக எனது பொதியுள் வாசம் செய்தது. இலங்கைப் பயணம் முடிந்தது. பிள்ளைகள் இருவரும் நேராகக் கனடாவிற்கு வர நான் மாத்திரம பாரிஸ் போய் ஒல்லாந்துக்குப் பின் ஜெர்மனி போவது என்ற முடிவு. பொதிகளை விமானத்தில் கொண்டு போவது சிரமமானது. எனது பிரயாணத்தின் போது பாரிஸ்வரை இரண்டு பொதிகள் கொண்டு செல்லலாம். ஆனால் திரும்பவும் ஜெர்மனியிலிருந்து கனடா செல்கையில் ஒரு பொதி மாத்திரமே எடுத்துச் செல்லலாம். இது விமான உரிமையாளர் விதி. ஆனால் பிள்ளைகள் நேரடியாகக் கனடா செல்வதால் ஆளுக்கு இரண்டு பொதிகளுடன் செல்லலாம். ஆகவே எனக்கு அவசியமான துணிமணிகளை ஒரு பொதியுள் அடக்கிய பிள்ளைகள் ஏனையவற்றினை தங்களுடன் கனடா எடுத்துச் சென்றனர்.

பாரிஸ் போய் இறங்கினேன். கருணைவேல் காத்து நின்றார். மறுநாள் வெளியீடு. ஆகவே இலண்டன் அனுபவம் என்னை எச்சரித்தது. கமிராவை எடுத்தேன். சார்ஜ்ஜருக்காக தேடாத இடமில்லை. பொதியுள் அதை எங்கேயும் காண முடியவில்லை. பிள்ளை களைக் கேட்க முடியாது. அவர்கள் விமானத்தில் இருப்பார்கள். பரவாயில்லை எமது கமிராவில் எடுக்கலாம். USB ஒன்றில் போட்டுத் தருகிறோம் என்றார் யோகினி. மறுநாள் பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டு கேட்டேன். அப்பா பொதியுள் தான் உள்ளது. கவனமாகப் பாருங்கோ என்றார்கள். மீண்டும் ஒரு முறை சல்லடை போட்டேன். காணமுடியவில்லை. சிறிது நேரத்தில் அவர்களிடமிருந்து தொலை பேசி வந்தது. அப்பா மன்னித்துக் கொள்ளுங்கள். நாம் தவறு செய்து விட்டோம். சார்ஜ்ஜரைத் தவறுதலாக நாம் கொண்டு வந்து விட்டோம் என்றார்கள். பிறகென்ன ஒல்லாந்தில் பாலசூரியன் எடுத்த படங்களை அவர் மின் அஞ்சலில் அனுப்பி வைத்தார். ஜெர்மனியில் சிவகுமாரன் ஒரு நண்பரைக் கொண்டு எடுத்தார். அதன் சில பிரதிகளை தனது வெற்றிமணியிலும், உதயன் பத்திரிகை யிலும், தமிழர் தகவலிலும் பிரசுரிக்க வழி செய்தார். ஆனால் இன்றுவரை எனக்கு அந்தப் படங்கள் வந்து சேரவில்லை. வரும் என்ற நம்பிகை உண்டு.

எனது கமிரா மாத்திரம் இரண்டே இரண்டு படங்கள் எடுத்த நிலையில் எனது அறையுள் கும்பகர்ணனாக நீண்ட துயில் கொள்கிறது. எனது பழைய மாணவர்கள் எங்கேயாயினும் என்னைத் தனியாக அழைத்தால் மாத்திரம் அதன் உறக்கம் கலையும்.

TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB, MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➢ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➢ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ DATA MGT, ENGLISH & FRENCH
Call (647) 341 3975 / (647) 869 3974

# நம்புவதற்கு தகுதி?

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 212

என்னை நானே நம்புவதற்கு நான் முற்றிலும் தகுதி வாய்ந்தவன் என்பது ஐயந்திரிபுற எனக்குத் தெரிந்தபடியால் நான் நம்பிக்கையை முற்றிலும் அனுபவித்து அதன் சக்தியையும் வெளிப்படுத்துகிறேன்.

நீ தார்மீகத்துடன் செயல்படுகிறவர் என்பது உனக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. நியாயமானது என நீ கருதுவதை உன்னால் முடிந்தவற்றை நீ சிறப்பாகச் செய்தால் போதும் என்பது மட்டும்தான் உனக்குத் தெரிந்திருக்க வேண்டிய விடயம். உனது உணர்வுகளை நம்பு. கட்டாயம் செய்யவேண்டும் என நீ உணர்பவற்றைச் செய். எல்லாவற்றையும் முதல் முறையிலேயே நூறுசத வீதம் முழுமையாகக் குறையில்லாமல் நீ செய்து முடிக்க உனக்குத் தெரிந்திருக்க வேண்டியதில்லை. உனது நோக்கமும் செயல்களும் தார்மீகமானவை, உண்மையானவை என்பது மட்டும் உனக்குத் தெரிந்தால் போதும். எவ்வளவு நன்றாகச் செய்ய முடியுமோ அவ்வாறு செய்தால் போதும். உனது உள்ளுணர்வுகளை நம்பி மதி! செயல்படு!

உனது குடும்பத்தவர், சமூகத்தவர், மேலதிகாரிகளின் ஆமோதிப்புடன்தான் நீ செயற்படவேண்டும் என்பதில்லை.



உனக்கு நியாயமாக இருப்பதை நீ செய்கிறாய் என்பது மட்டும் உனக்குப் புரிந்தால் போதும். சத்தியமும் தார்மீகமும் கலந்த குறிக்கோளுடன் உன்னால் முடிந்தவற்றை எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவு செய்தால் போதும். உனது உள்ளுணர்வை நம்பு! உனது உணர்வுகள் உனக்குச் சொல்வதைச் செய்! நீ உணர்வதை நம்ப நீ கற்றுக் கொள்ளும்போது உனது உணர்வுகள் கூர்மையாகின்றன. உனது நம்பிக்கையும் வளர்கின்றது. ஏதாவது ஒரு செயலை ஆரம்பிக்கு முன் சரியான காலநேரம், சரியான வழிமுறை, சரியான மனிதரின் ஆமோதிப்பிற்காக இன்றுவரை நீ காத்துக்கொண்டு இருந்திருக்கலாம். அவற்றையெல்லாம் கைவிட்டு விட்டு இன்றுமுதல் உனது உணர்வுகள் உனக்குச் சொல்வதை நம்பப்பழகிக் கொள். உனது உணர்வுகளின்படி செயற்படு.

**இன்றுமுதல் நியாயமானது என்று எனக்குத் தோன்றுபவற்றையும் எனது உள்ளுணர்வுகளையும் மதித்து நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் நான் செயல்பட்டு முன்னேறப் போகிறேன்.**

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி


## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

## Math Adventure Club!!

*An Extra Ordinary Double Strength in Math*

*For Gr.10, Gr.11, & Gr.12*

Only 1 Month Programme

!! இரட்டிப்பான கணித அறிவை ஊட்டும் மாபெரும் கணித பயிற்சி!!

Completing the whole curriculum in advance before you attend your math class

!!பாடசாலை பயில முன்பே முற்று முழுமையான பாட அறிவும் போதிய அளவு ஒரு மாத பாடத்திட்டம் !!

*A Complete Program Designed For Your Needs, Based On 20 years Of Experience*

20 வருட கால கற்பித்தல் அனுபவத்துடன் ஏற்கெனவே வெற்றிபெற்ற இத்திடம், மீண்டும் புதிய பயிற்சிகளுடன்

**Starts in February**

A ONE MONTH PROGRAMME

*Free First Class*

**Mr. Sharma: 416.666.5515**

# Education

**Review Tutorials - 132**

**CHEMISTRY IB**

Complete the following electrophilic aromatic substitution reactions

A. Benzene → A → B → 4- nitrobenzoic acid
B. Benzene → X → Y → 3- nitrobenzoic acid
C. 1-propanol → P → acetone

**CHEMISTRY 12**

(A) A 10g sample of one of the three is strongly heated to form metal oxide. If 2.64 L of $CO_2$ is released at 27°C and 102k.Pas., identify which of the following mineral is heated.

(i) $MgCO_3$ (ii) Ca $CO_3$ (iii) $MgCO_3$.Ca $CO_3$

(B) Explain how the emission spectrum of hydrogen is related to the energy levels in hydrogen.

(C)Compare 3rd ionization energies of calcium and chlorine

**CHEMISTRY 11**

A. Determine the mass of salt deposit when 500g of saturated solution of $NH_4Cl(aq)$ at 70°C cooled to 50°C.

B. Determine the number moles of $Na^+$ and $NO_3^-$ in 0.04 mol/L 25 ml solution.

C. Determine the $Na^+$ and $NO_3^-$ concentrations after adding 25 ml, 0.05 M $Ca(NO_3)_2$ and 25 ml 0.03 M $Al(NO_3)_3$ in to the above solution in part (B).

**PHYSICS 11**

Explain why metallic objects generally feel cooler to touch than wooden objects when both are at a temperature of 25°C.

**MATH 12**

Find

A. $\lim_{x\to 1}\left(\frac{x^2-4}{x-1}\right)$

B. $\lim_{x\to 1}\left(\frac{x^2-8x+7}{7x^2-6x-1}\right)$

**IB & 11 Biology**

A. Heart rate of person decreases as his/ her fitness increases. Give a reason.
B. How do you compare heart rate and blood flow of a person when at rest and during exercise.

**Answer key 131**

➢ **CHEMISTRY 12 & IB**

$[Ag^+][Cl^-] = 1x10^{-10}$

When AgCl start precipitating the $[Ag^+] = (1x10^{-10}) / 0.1$

$[Ag^+] = (1x10^{-9})$

$[I^-] = K_{sp} / (1x10^{-9}) = (8.3 x 10^{-17}) / (1x10^{-9}) = 8.3x10^{-8}$

**CHEMISTRY Gr 11 & IB**

$Al(s) + 3 HCl(aq) \rightarrow AlCl_3 + 3 H_{2(g)}$

Number moles of Al = 1.35/ 27 = 0.05 (Al= 27 g/mol)

Number of moles of $H_{2(g)}$ = 3x0.05 = 0.15 mol

P= (755- 31.2) mmHg = 723.8mmHg = 0.9824 kPas.

T = (273.15 + 30) = 303.15 K

PV = nRT ; V= 385 L

**MATH (GR 11).**

$P_{(t)} = -25t^2 + 250t - 400$

Solve for *t* when $P_{(t)} = 0$; $-25(t-8)(t-2) = 0$

*t* = 8 or 2; least number of toy-cars that should be sold to breakeven is 20,000

**PHYSICS**
**(Gr 11)**

In transformers $P_{incoming} = P_{outgoing}$
since $P = VI$; $V_p I_p = V_s I_s$
if *V* goes up then I goes down; Power loss , $P = I^2 R$
by increasing the voltage power loss can be reduced.

**(ii)** This is possible. If the internal resistance of the battery is comparable to the lamp resistance.

**IB & 11 Biology**

**Colour blindness is more common in males-**

The gene that is responsible for colour blindness (chromosomes that has defective/ missing photopigments) is carried on the X chromosome. In females, one of the two X chromosomes carrying normal gene is sufficient. In females both genes have to be defective to cause colour blindness. Since males only have one X chromosome, only one defective gene is sufficient to get colour blindness. Therefore, color blindness will be expressed in males with a higher probability than in females because.

**Gr 12A)**

Ep = Ek ; v = (2g Δh)$^{½}$ = **19.8 m/s**

J = Δ p = m ( $v_2 - v_1$ ) = 1 (0-20) = - 20kg.m/s
F = Δ p / Δ t = -20 (kg.m/s) / 0.5 (s)
= 40 kg.m/s2 =40N

*Answer key 131 - next issue*

**Contact: 647 341 3975**
**Dr. A.Sri Krishnaraj PhD**

**E mail: ask@ keentutoringcentre.com**

KEEN TUTORING CENTRE

# தெரிந்தும் தெரியாததும்



உன் அழகிய பெயர்
தெரியும்
உன் கம்பீரத் தோற்றம்
தெரியும்
நீ குழைந்து பேசும்
பேச்சுத் தெரியும்
உன் அளவுக்கு மீறிய ஆற்றல்
தெரியும்
உன் உதவிக்கரங்கள்
தெரியும்
உன் பட்டம் பதவிகள்
தெரியும்
உனக்குக் கிடைக்கும்
ராஜ மரியாதைகள்
தெரியும்
உன் மனிதாபிமான செயல்கள்
தெரியும்

வருடங்கள் பல பழகியும்
உன் கோபமுகம்
தெரியாது
உன் கடும் சொற்கள்
தெரியாது
இல்லை என்றவார்த்தை
உன் அகராதியில் இல்லை
உன் சாதுரியப்போக்கும்
தெரியும்
தெரிந்து கொண்டேன்
உன் இயல்பிலா நட்பை

வலித்தது மனதில் ஓர்
மூலையில்
ஆனாலும் உன் நட்புக்கு
தலை வணங்குகிறேன்.

- ரஞ்சி கதிர்.

**50** PARTY HALL EVENT CENTRE MEETING PLACE **AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய ***50*** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

***GTA Square Mall (FINCH & MIDDLEFIELD***
தொடர்புகளுக்கு: ***416.917.6883***

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

# Malayal Bhagawathi Joythidam Pandit Tulsidhar Swamiji



கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

***Open 7 Days A Week (10:00 am - 8:00pm)***
***100% Guaranteed Result***

**Contact: 647.856.0559**

*GTA Square Mall (2nd Floor)*
*5215 Finch Ave. E., Unit #257*
*Scarborough ON M1S 0C2*
*(FINCH & MIDDLEFIELD)*



நகைச்சுவைத் தொடர் 261

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





மாசிப் பனி மூசிப்பெய்கிறதென்பார்கள். அதிகாலையில் புற்களிலும் பயிர்களிலும் பனித்துளிகளைக் காணலாம். கிணற்றில் அள்ளிக்குளிக்கும்போது குளிரும் சூடும் கலந்திருக்கும். அதிகாலையில் தோட்டத்திற்கு செல்பவர்கள் துவாயால் மேலைப் போர்த்திக்கொண்டு செல்வார்கள். ஆனால் இங்கு ஒரு வாரமாக குளிரென்றால் என்ன என்ற அர்த்தம் புரிந்தது.

தைப்பொங்கல் - அட்டதிக்கெல்லாம் பொங்கல் விழா.
வணக்கம்…. கப்பி தைப்பொங்கல் என கனேடிய அரசியலில் ஈடு படுபவர்களையும் ஈடுபடப்..போகிறவர்களையும் தமிழ் பேசவைத்த பெருமை புலம் தமிழர்க்கு உண்டு. என்ன உலகண்ணை தமிழ் விழா எண்டு போனா எல்லாம் இங்கிலீசிலை தான் நடக்குது? இமிகிரேசன் கேசுக்கு போனமாதிரி இன்ரப்பிறிற்றறையும் கூட்டிக்கொண்டுதான் போகவேணும்போல கிடக்கு எண்டு சொல்லிச்சிரிச்சா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



கனடா திருமறைக் கலாமன்றத்தின் பொங்கல்விழாவை உலகர் ரசித்துக்கொண்டிருந்தார். கனடாவில் கலை வளர்ச்சியில் பிரபலமான பாடலாசிரியர்களின் நாட்டிய நாடகம் 'ஐம்பூதங்கள்' நிகழ்ச்சி ஆரம்பித்தது முதல் முடியும் வரை தொடர்ந்து பாடல் நடனம் நாடகபாணி இயல் இசை நாடகம் தமிழில் ஒரு முத்தமிழ். பொங்கல் விழா: கிட்டத்தட்ட நடனமாடிய மாணவர்கள், பல கலைஞர்கள் பட்டுவேட்டி சால்வையுடன் பொங்கும் காட்சியுடன் ஏன் பொங்குகுறோம் என்பதற்கு விளக்கம், அறிவிப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும். மீதி நிகழ்ச்சிகள் நாட்டுப்புற கிராமிய தமிழ்ப்பாடல்கள்.



உலகண்ணை நாங்கள் நிலம் எண்டு ஒரு சொல்லிலை சொல்லுறம் அதற்கு எத்தனை அர்த்தம் என முணுமுணுத்தா ஆட்டிலறி அன்னம்மா.

குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை.
மலையும் மலை சார்ந்த இடமும் - குறிஞ்சி
காடும் காடு சார்ந்த இடமும் - முல்லை
வயலும் வயல் சார்ந்த இடம் - மருதம்
கடலும் கடலைச்சார்ந்த இடமும் - நெய்தல்
பசுமையின்றி வரண்ட நிலம் - பாலை



நாட்டிய நாடகத்தில் ஐம்பூதங்கள், ஐவகை நிலங்கள் பற்றிய விளக்கம். எமக்குத்தெரியாத பலவற்றை புரியவைத்தது. (கண்டது கற்க பண்டிதனாவான்)
ஐம்பூதங்கள்: நீர், நிலம், நெருப்பு (தீ), காற்று (வாயு), ஆகாயம்.

அதற்கேற்ற இசை. நாம் பார்ப்பது சினிமாவா அல்லது மேடைநிகழ்ச்சியா? என உலகர் மனதில் தோன்றியது.



குளிர் சற்று குறைந்ததுதான் ஆட்டிலறி அன்னம்மாவையும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவையும் காணவில்லை. GTA ஸ்குயரில் நடக்கும் இசைநிகழ்ச்சிக்கு சென்று விட்டனர்.



'ஒன்றுமே புரியலே உலகத்திலே' சந்திரபாபுவின் பாடல் வானொலியில் ஒலித்துக்கொண்டிருந்தது.

உண்மைதான் ராசம்மாக்கா! ஒருநாளைக்கு வெக்கை. அடுத்தநாள் குளிர் என ஆட்டிலறி அன்னம்மா சொல்லி முடிக்கமுன் ஓம் உலகண்ணை மாதிரித்தான் இஞ்சை வெதர். ஒவ்வொருநாளைக்கு ஒவ்வொரு ரூபம் என செக்கண்ட்புளோர் செல்லம்மா ரகசியமாகச் சொன்னாலும் உலகரின் காதில் துல்லியமாகக் கேட்டது.





ரூபி தனது அல்பத்தை செக்கண்ட்புளோர் செல்லம்மாவிற்கும் ஆட்டிலறி அன்னம்மாவிற்கும் காட்டிக்கொண்டிருக்க எப்போதோ காதலர் தினத்திற்கு சொக்கிலேற் பெட்டியும் ரோசாப்பூவும் கொடுத்த போட்டோவைப்பார்த்து ரூபிக்கு வெட்கமாக இருந்தது.
காதல்…காதல்….காதல்....




சீதையின் காதல் பார்வையில் வந்தது.
(கண்ணும் கண்ணும் நோக்கியா)
ராவணண் சீதைமேல் கொண்ட காதல் அழிவில்.
மகாத்மா காந்தியின் தேசத்தின் மேலுள்ள காதல் சுதந்திரம்.
கமல்காசனின் சினிமா கலை மேலுள்ள காதல் தமிழகத்தையோ அல்லது இந்தியாவையோ விட்டு வெளியேறும் எண்ணத்தை கொடுத்தது.
(மதமில்லாத ஒரு மாநிலம் அல்லது ஒரு நாட்டுக்குப் போக விரும்புவதாக பத்திரிகை தொலைக்காட்சி பேட்டியில் தெரிவித்தார்)
யாதும் ஊரே யாவரும் கேளிர்.





பெப்ரவரி 1….15..

03. அறிஞர் அண்ணா சி.என். அண்ணாதுரை நினைவு தினம்.
தமிழகத்தின் 6 வது முதலமைச்சர் (1909–1969)
04. ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்தது.
(சுதந்திரம் எங்கே என மக்கள்….
இன்றுவரை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்)
07. இலங்கையில் தனிச் சிங்களச் சட்டம் 1956 ஆம் ஆண்டு களனி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது
09. சட்டமேதை ஜி.ஜி. பொன்னம்பலம் நினைவு தினம் (1901–1977)
11. அடங்காத்தமிழன் சி. சுந்தரலிங்கம் நினைவு தினம்
14. காதலர் தினம் (வலன்ரைன் டே)
16. எங்கேயும் எப்போதும் ராஜா (இசைஞானி இளையராஜா இசை நிகழ்ச்சி)






# கண்ணதாசனின் பொன்மொழிகள்

அறிவாளிகளின் குழந்தைகள் பெரும்பாலும் முட்டாளாகவே வளர்கிறார்கள், நிழலிலே வளரும் செடி சோகையாக இருப்பது போல.

பெர்னாட்ஷா வை நினைத்து கொண்டு தன்னை கண்ணாடியில் பார்ப்பவர்கள், நடிகையை நினைத்து கொண்டு மனைவியை கட்டிபிடிப்பவர்கள் ஆவர்.

கண்களை மூடுங்கள், காதுகளை அடைத்துக் கொள்ளுங்கள்
இதயத்தையும் மூடுங்கள், செய்துவிட்டீர்களா?
சபாஷ், நீங்கள் அரசியல் வாதியாகிவிட்டீர்கள்.

ஒரே ஒரு அற்பனை சமாளிப்பது - சர்வாதிகாரம்
ஒவ்வொரு அற்பனையும் சமாளிப்பதுதான் ஜனநாயகம்.

Free Real Estate Class
Call: 416.321.6969

விளக்கமாக பேசு, முடிவில் சிந்திக்கும் போது உனக்கே குழப்பம் வரவேண்டும். அதுவே சிறந்த பேச்சு.


அன்பிலே நண்பனை வெல்லுங்கள்
களத்திலே எதிரியை வெல்லுங்கள்
பண்பிலே சபையை வெல்லுங்கள்
மஞ்சத்திலே மனைவியை வெல்லுங்கள்

மூட்டையை கொடுத்து காசு வாங்குவான் சம்சாரி
காசு கொடுத்து மூட்டையை வாங்குவான் வியாபாரி
எதையுமே கொடுக்காமல் எல்லாத்தையும் வாங்குவான் அரசியல்வாதி.

தனியாக அழுங்கள், கூட்டத்தோடு சிரியுங்கள்
கூட்டத்தோடு அழுதால் நடிப்பு என்பார்கள்
தனியாக சிரித்தால் பைத்தியம் என்பார்கள்.

உலகத்திலுள்ள எல்லோருமே யோக்கியர்தான் தூங்கும்போது மட்டும்.

காதலிக்கும் போது குழந்தையாயிரு அப்போதுதான் அவள் ஏமாற்றும் போதும் சிரித்துகொண்டே இருப்பாய்.



கட்டாயம் காதல் செய்யுங்கள் - ஏனெனில் சந்தோசம் மட்டுமே வாழ்க்கையல்ல

விதியையும் மதியால் வெல்லலாம்
என்று உன் விதியில் எழுதியிருந்தால்

யார் என்ன நினைக்கிறார்களோ என்று நினைத்துக் கொண்டே இருந்தால்
நாம் என்ன நினைக்கிறோம் என்பதற்கு மரியாதையே இல்லாமல் போகும்

# பூரண மகிழ்ச்சி...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

மகிழ்ச்சிப்படுத்துகிறார்கள் ஆனால் உன்னால் ஒருவரை மகிழ்ச்சியாக்க முடியாது' (Happy people make people happy but you cant make some one happy) என்பதில் நல்ல கருத்துள்ளது.

பொதுவாக பல அறிஞர்கள் கருத்துப்படி 'மற்றவர்கள் மீதான எல்லையற்ற அன்பும், 'மற்றவர்கள் எம்மீது காட்டுகின்ற எல்லையற்ற அன்பும் தான் மகிழ்ச்சியின் சாராம்சமாகும்' (The essence of happiness is the unconditional love we have for the people in our lives and their unconditional love for us) எமது புன்னகையை பயன்படுத்தி உலகினை மாற்ற முயலுதலே சிறந்த வழியாகும். 'ஒவ்வொரு நிமிடமும் நாம் கோபப்படும்போது மகிழ்ச்சியின் 60 விநாடிகளை இழந்து விடுகிறோம். (For every minute you are angry you lose sixty leconds of happiness) என்ற கருத்தினை Ralph waldo emerson மிகவும் நுட்பமாக கூறியுள்ளார். அத்துடன் மகிழ்ச்சி என்பது உடன் தயாரிக்கப்படும் பொருள் போன்றதல்ல எமது நடவடிக்கையிலேயே எழுகிறது என்பதனையும் நினைவு கூரவேண்டும், உங்கள் வயதினை உங்களது



நண்பர்களால் அறியுங்கள், வருடங்களால் அல்ல, புன்னகையால் எமது வாழ்வைக் கணக்கிடுவோம். கண்ணீரால் அல்ல' (Count your age by friends not years count life my smile not tears) என்ற அரிய கருத்தினை John lenon என்பவர் கூறியுள்ளார். எமது இதயத்தில் உள்ள வெறுப்புக்களை அகற்றி, மனதில் உள்ள கவலைகளை அகற்றி, சாதாரணமாக வாழ்ந்து, எதிர்பார்ப்பின்றி மற்றவர்களுக்கு கொடுத்து வாழ்வதிலேயே பூரண மகிழ்ச்சி பிறக்கிறது. உங்களுக்கு மகிழ்ச்சியாக வாழ வேண்டின் அப்படியே இருங்கள் என்பது அறிஞர் லியோ ரோல்ஸ்ரோய் என்பவர் கருத்து. அன்பு என்பதன் மூலம் மகிழ்ச்சியின் ஒவ்வொரு கதவுகளையும் திறந்து விடமுடிகிறது. மிகவும் மலிவான மருந்தான சிரிப்பை எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும்.

மகிழ்ச்சி என்பது பூரணமான அன்பிலிருந்து பிறக்கின்றது. மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதிலிருந்து உருவாகிறது. வாழ்வின் விநோதங்களை ரசிப்பதிலிருந்து உருவாகிறது. திருப்தியான அனுபங்களில் இருந்து உதயமாகிறது. இதனை மேலும் வலியுறுத்தும் வகையில் Bertrand Russell என்ற அறிஞர் தனது Conquest of happiness என்ற நூலில் உங்களது ஆர்வங்கள் மிகவிரிவாக இருக்கட்டும், மேலும் நீங்கள் ஆர்வம் காட்டும் பொருட்களிலோ அல்லது நபர்களிலோ ஏற்படும் பிரதிபலிப்புக்கள் கூடியளவு பகைமையற்று நேசமானவையாக இருக்கட்டும். மகிழ்ச்சியின் இரகசியம் இதுவே என்று குறிப்பிட்டுள்ளனர்.

பூரணமான மகிழ்ச்சி என்பது எமது இதயத்தில் பகைமை உணர்வு நுழையாமலும், எங்கள் மனத்தில் கவலை குடியேறாமலும் எளிமையாக வாழ்ந்தும், குறைவான எதிர்பார்ப்புக்களுடனும், அதிகமாக மற்றவர்களுக்கு கொடுத்தும், எங்கள் வாழ்வை அன்பால் நிரப்பி, எமக்கு எது நிகழவேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ அதனை மற்றவர்களுக்கும் செய்தால் நிச்சயமாக மகிழ்ச்சியின் வாசல்கள் தாமாக திறந்து கொள்ளும்.





| AGE | FEMALE | | MALE | | TAX FREE MONEY |
|---|---|---|---|---|---|
| | PER MONTH | MAX COST | PER MONTH | MAX COST | |
| 25 | $125.55 | $30,091 | $153.29 | $36,789 | $250,000 ++ |
| 30 | $170.68 | $40,992 | $193.71 | $46,470 | |
| 25 | $198.55 | $47,652 | $271.26 | $65,102 | $500,000 ++ |
| 30 | $288.61 | $69,266 | $350.50 | $84,127 | |

MORTGAGE NEEDS....

Subo Thevarajah, AMP
Mortgage Agent
License# M08002859

416.627.2222
subo@bmsic.com

BonaFide Mortgage Solutions Inc.

MCAP

BonaFide Mortgage Solutions Inc.

Thayalan (Thaya) Gobalakrishnan Mortgage Agent(GTA) Lic No: M12001612

* New Mortgages * Refinance * Second Mortgages

Call me for any Mortgage Financing questions?

Cell: 416-575-3211 ,Fax: 1-888-545-0462
E-Mail: thaya.gobal@gmail.com

"Let me help you make the right choice"

SchurenSriskandarajah
Sales Representative

HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Cascvale Drive, Markham Ontario L3S 4h8

SCHUREN.CA • 416.333.9393

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

SASI CHELVARATNAM
Sales Representative

Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969

HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated

TD Canada Trust

Supen Subramaniyam (Manager, Residential Mortgage)

416-844-8692 1-800-809-9154
supenthiran.subramaniam@td.com

ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable

Low Mortgage Rates

கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்

Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

RealEstate / Mortgage / Investments

| MINGAY & 16TH AVE FOR LEASE | OSHAWA | MARKHAM & STEELES |
|---|---|---|
| Bedrooms: 2<br>Washrooms: 1<br>$900 | Bedrooms: 3<br>Washrooms: 3<br>Bsmt: Finished<br>$369,900 | For Sale<br>Commercial / Retail<br>$349,900 |

Pre Construction condo.
In Downtown Toronto

Completion 2013 - 2014

Starting From $519 Per sq.ft

RE/MAX
Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
Real Estate / Principal Mortgage Broker
416.575.5055
Lic No: M08004376
"When bank says No We say Yes"
*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

ON THE SPOT
HOME INSPECTIONS INC.

Danny Sripath, B.Sc.
Qualified Home Inspector
Mold Specialist

416.823.3552 / 416.289.0033
onthespothome@yahoo.ca

No 80 Corport Dr, Unit #201
Toronto ON M1H 3G5

Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

Free Real Estate Class
Call: 416.321.6969

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough